07 JUN 20..

# எங்கள் தேசம்

மாதம் இரு முறை. Engal Thesam චංගල් දේසම් GPO/QD/17/NEWS/2015

மலர்: 15 | இதழ்: 11 | ஜூன் 01 – 14 ஹிஜ்ரி: 1436 | பக்கங்கள்: 20 | விலை: ரூபா 30.00 294



1600 கேள்வி பதில்கள்

உங்களது பிள்ளைகளுக்கு வாங்கி விட்டீர்களா...?


இஸ்லாமிய பொது அறிவுப் பெட்டகம்

- இஸ்லாத்தின் முதலாவது...
- நபிமார்கள்
- இஸ்லாமிய வரலாறு
- அல் குர்ஆன்
- இஸ்லாமிய வரலாற்றுக் கலீபாக்கள்
- முஃமினான பெண்கள்
- நபியவர்களும் அன்னாரது குடும்பத்தினரும் நபித்தோழர்களும்

வெளியீடு: இக்ரா கல்வி நிலையம், த.பெ.இல 750, கொழும்பு, 0115928978

கிடைக்கும் இடம்: இஸ்லாமிக் புக் ஹவுஸ், 77 தெமட்டகொட வீதி, கொழும்பு - 09

## ரொஹிங்ய முஸ்லிம் மக்களுக்காக ஆங் சாங் ஷூகி பேச வேண்டும்



### தலாய் லாமா

மியன்மாரில் உள்ள ரொஹிங்ய முஸ்லிம்களுக்கு உதவுவதற்கு, நோபல் பரிசு பெற்ற மியன்மாரின் பிரதான எதிர்க்கட்சி தலைவியான ஆங் சாங் ஷூகி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று திபெத்திய ஆன்மிகத் தலைவர் தலாய் லாமா கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்தப் பிரச்சினை குறித்து கடந்த காலங்களில் தான் ஆங் சாங் ஷூகியிடம் பேசியிருப்பதாகவும் அது தொடர்பில் அவரால் இன்னும் நடவடிக்கை எடுக்கமுடியும் என்று நம்புவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலிய ஊடகம் ஒன்றுக்கு அளித்துள்ள செவ்வியிலேயே, தலாய் லாமா இந்தக் கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

மியன்மாரின் பிரஜைகளாக அங்கீகரிக்கப்படாத ரொஹிங்ய மக்களின் பிரச்சினை தொடர்பில் ஆங் சாங் ஷூகி பேச மறுப்பதாக சர்வதேச அளவில் விமர்சனங்கள் உள்ளன.

பௌத்தர்கள் பெரும்பான்மையாக வாழும் மியன்மாரில்

➡16



மியன்மார் முஸ்லிம்களுக்கு எதிரான பாதாள அரசியல்

03



"இந்த அரசாங்கத்திலும் எனக்கு நியாயம் கிடைக்கவில்லை"

10

# ரொஹிங்ய முஸ்லிம்கள் விடயத்தில் ஐ.நா. தூங்குகிறதா?

### அமைச்சர் றிஷாட் பதியுதீன் குற்றச்சாட்டு

அஸ்ரப் ஏ. சமத்

மியன்மாரிலுள்ள அப்பாவி முஸ்லிம்கள் மீது அந்நாட்டு இராணுவ ஆட்சியாளர்களும் அரக்கர்களும் கொடூரமான முறையில் தாக்குதல்களை மேற்கொண்டு அவர்களை கொன்று குவித்து வருகின்றனர். இதைப்பார்த்துக் கொண்டு ஐ.நா. தூங்கிக் கொண்டிருக்கிறது என அமைச்சர் றிஷாட் பதியுதீன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

அப்பாவி முஸ்லிம்கள் மீது மியன்மாரில் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள காடைத்தனங்களுக்கு எதிர்ப்பு தெரிவித்து, ஜும்ஆ தொழுகையின் பின்னர் கொழும்பில் இடம்பெற்ற எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட அமைச்சர் றிஷாட், ஊடகவியலாளர் மத்தியில் உரையாற்றும்போதே மேற்படி குற்றச்சாட்டினை தெரிவித்தார்.

இந்தக் கொலையினை கண்டித்து துருக்கி அரசாங்கம் மட்டுமே குரல் கொடுத்து வருகிறது.

அதற்காக இலங்கை மக்கள் சார்பில் அந்நாட்டு ஜனாதிபதிக்கும் அரசாங்கத்துக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ஏனைய நாடுகள் அனைத்தும் வாய்மூடி மௌனிகளாக இருக்கின்றன என்றும் தெரிவித்தார்.

ஐக்கிய சமாதான முன்னணி

➡16






## "மஹிந்தவின் தில்லுமுல்லுகள் அனைத்தையும் அறிந்தவன் நான்"

### ஜனாதிபதி மைத்திரிபால

### ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிராக நான் செயற்பட மாட்டேன்



முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை பிரதம வேட்பாளராக நியமிக்க இயலாது. மஹிந்தவோடுபக்கத்தில்இருந்து செயலாற்றியபோதே அவரது தில்லுமுல்லுகள் அனைத்தையும் தெரிந்து கொண்டவன் நான். அப்படியிருக்க மஹிந்தவை எப்படி நான் பிரதம வேட்பாளராக நியமிப்பேன். என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

இலங்கை சுதந்திரக் கட்சியின் கொழும்பு தலைமைக் காரியாலயத்தில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் நடைபெற்ற ஐக்கிய முன்னணி முக்கியஸ்தர்கள் மற்றும் 14 கட்சிகளின் தலைவர்கள் கலந்து கொண்ட கூட்டத்தின் போது முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை பிரதம வேட்பாளராக நியமிக்க கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு வருகின்ற நிலையிலே ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

➡16

## 20 ஆம் திருத்தம்: கட்சிகளுக்குள் இழுபறி



20 ஆம் திருத்தச் சட்டத்திற்கு 151 உறுப்பினர்கள் ஆதரவு தெரிவித்துள்ளனர். ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் உள்ளிட்ட 151 உறுப்பினர்கள் உத்தேச 20 ஆம் திருத்தச் சட்டத்தை ஆதரிப்பதாக தெரிவித்துள்ளனர். இதனால் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவு இன்றியே 20 ஆம் திருத்தச் சட்டத்தை நிறைவேற்ற முடியும் என ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பை பிரதிநிதித்துவம் செய்யும் உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த புதன்கிழமை தேர்தல் முறைமை மாற்றம் குறித்த யோசனை அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்ட போது, சிறு கட்சிகளை பிரதிநிதித்துவம் செய்யும் இரண்டு அமைச்சர்கள் இதற்கு எதிர்ப்பை வெளியிட்டனர். இதனால் கட்சித் தலைவர்களுடன் மீளவும் இது குறித்து பேச்சுவார்த்தை நடத்த ஜனாதிபதி தீர்மானித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவை எதிர்த்துப் போட்டியிட்ட மைத்திரிபால சிறிசேன தேர்தல்

➡16

Des: Zain marzook

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மனிதம் வாழுமிடமெல்லாம் எங்கள் தேசமே!

## இறக்காமத்தில் தனியான மின்சார சபை உப அலுவலகம் அமைக்க கோரிக்கை

எஸ்.எம். சன்சீர்




இறக்காமம் பிரதேசத்துக்கு என தனியான மின்சார சபை உப அலுவலகம் ஒன்றினை அமைத்துத் தருமாறு இப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

இறக்காமம் பிரதேசத்திலுள்ள 21 சிறு கிராமங்களிலும் சுமார் ஆறாயிரத்துக்கு மேற்பட்ட மின் பாவனையாளர்கள் உள்ளனர். இதன் காரியாலயம் அம்பாறையில் இருப்பதால் தொலைவில் உள்ள இவ்வலுவலக செயற்பாடுகளை உடன் பெறுவதில் இப்பிரதேச மின் பாவனையாளர்கள் பல சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

திடீரென மின்சாரம் தடைப்படும் வேளையிலும் மின்னொழுக்கு மற்றும் விபத்துகள் ஏற்படும் வேளையிலும் அம்பாறை பிரதேச மின் பாவனையாளர் காரியாலயத்தில் இருந்தே இதற்கான ஊழியர்கள் வர வேண்டியுள்ளதால் மக்கள் அதுவரையும் அவஸ்தைப்பட்டு, பல சிரமங்களையும் எதிர்நோக்க வேண்டியுள்ளது.

இறக்காமத்துக்கு என தனியான மின் பாவனையாளர் உப அலுவலகம் ஒன்றினை அமைப்பதன் மூலமே இப்பிரதேச மின் பாவனையாளர் பிரச்சினைகளை தீர்க்க முடியும் என்பது இப்பிரதேச மக்களின் எதிர்பார்ப்பாகும்.




## ரமழான் மாத பயிற்சி நெறிக்கு விண்ணப்பம் கோரல்

பராஇமுல் ஈமான் கலாசார நிலையம் 7 ஆவது வருடமாகவும் நடத்தும் மாணவர்களுக்கான ரமழான் மாத ஆன்மிக பயிற்சி நெறிக்கு மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர். இப்பயிற்சி நெறியில் வணக்க வழிபாடுகளுக்கான வழிகாட்டல்கள், இஸ்லாமிய அடிப்படை தொடர்பான போதனைகள், ஆளுமையை வளர்க்கும் அறிவுரைகள், இலக்குகளை சரி வர தீர்மானிக்கும் உத்திகள் என பல்வேறு பட்ட விடயங்கள் போதிக்கப்படும்.

சுயவிபரக் கோவையினை ஜூன் மாதம் 15 ஆம் திகதிக்கு முன் Bara Imul Iman Cultural Center, 40-7, Ambaga Junction, Gothatuwa எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்.

மேலதிக விபரங்களுக்கு: 0777565051, 0773989852 எனும் இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு பராஇமுல் ஈமான் கலாசார நிலையத்தின் செயலாளர் அஷ்ஷெய்க் இஸட்.ஏ.எம். நவாஸ் தெரிவித்துள்ளார்.

## திருகோணமலை மாவட்டத்தில் 900 வீடுகள் நிர்மாணிக்க திட்டம்

திருகோணமலை மாவட்டத்திலுள்ள 11 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் 900 வீடுகளை நிர்மாணித்துக் கொடுக்க தேசிய வீடமைப்பு அதிகார சபை நடவடிக்கை எடுத்து வருகின்றது.

வீடமைப்பு மற்றும் சமுர்த்தி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் திருகோணமலை மாவட்டத்திலுள்ள மூன்று தேர்தல் தொகுதிகளிலும் 900 வீடுகளை நிர்மாணித்துக் கொடுப்பதற்கான ஏற்பாடுகளை தேசிய வீடமைப்பு அதிகார சபை முன்னெடுத்துள்ளது.

ஒவ்வொரு தேர்தல் தொகுதிக்கும் 300 வீடுகள் என்ற அடிப்படையில் 11 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் இத்திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது. இதற்கு அமைய 257 வீடுகளை நிர்மாணிப்பதற்கு 20 பேர்ச்சஸ் காணி இலவசமாக வழக்கப்பட இருப்பதுடன் தலா ஓர் இலட்சம் ரூபா கடனாக வழங்கப்பட இருப்பதாகவும் 628 குடியிருப்பாளர்களுக்கு ஓர் இலட்சம் ரூபா வழங்கப்படுவதுடன், அவர்கள் தமது சொந்த முயற்சி மூலம் நிர்மாணப் பணிகளை மேற்கொள்ள முடியுமெனவும் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# ராஜபக்ஷாக்களுக்கு மனித உரிமை நினைவுக்கு வருகுதாம்!

நன்றி: சுனந்த தேசப்பிரிய
(ராவய 2015.05.24)
தமிழில்: சிற்றழகு

அட மெய்தாம்பா... ராஜபக்ஷாக்கள் இப்போதெல்லாம் பொலிஸ் ஆட்சி பற்றியும் ஹிட்லரின் சர்வாதிகாரம், ஊடக சுதந்திரம், மனித உரிமைகள் பற்றியெல்லாம் பேசறாங்கப்பா. நம்புங்கள்... இதுவெல்லாம் உண்மை...

தனது கடந்த காலத்தை மறப்பது ஒரு வகை நோய். அதை டிமென்ஷியா என்று கூறுவர். சிலர் இந்த நோய்க்கு தாமாக விரும்பி ஆளாகுவார்கள். ராஜபக்ஷாக்களுக்கும் அப்படித்தான் போல் தெரிகின்றது.



எனக்கு இந்த கேவலங் கெட்ட நீதிமன்றங்களுக்கு பயமில்ல. என்னைப் பற்றி ஒரு சொல் எழுதினால் நான் உன்ட பத்திரிகைக்கு எதிராக வழக்கு போட்டு மூடுவேன். இந்த வார்த்தைகள் வேறு யாருடையதும் அல்ல, அன்றைய பாதுகாப்பு செயலாளராக இருந்த கோதபாய ராஜபக்ஷவுடையது. சண்டே லீடர் பத்திரிகையின் ஆசிரியை பெட்ரிகா ஜேன்ஸுக்கு ஏசிய ஒலிப்பதிவை அடிப்படையாக வைத்து 2012 ஜுலை 08 ஆம் திகதி அப்பத்திரிகையில் எழுதியவரும் அவர் தான். இத்தனைக்கும் அவர் ராஜபக்ஷ புகழ் பாடிய ஒருவர். ஜெனரல் பொன்சேகாவை சிறையில் அடைப்பதற்காக அவர் சாட்சியம் கூறும்போது கோதபாய அவருக்கு எஸ்.டி.எப். பாதுகாப்பைக் கூட வழங்கியிருந்தார்.

ஆனால், இன்று பொலிஸின் ஆட்சியைப் பற்றி பேசுவது அன்று அப்படி பேசிய ராஜபக்ஷாக்கள்தான். அன்று கேவலங் கெட்ட நீதிமன்றத்திற்கு பயமில்லை என்று கூப்பாடு போட்ட கோதபாய ராஜபக்ஷ உச்ச நீதிமன்றத்தில் மனித உரிமை முறைப்பாடு ஒன்றை சமர்ப்பித்து தான் கைது செய்யப்படுவதை தற்காலிகமாக தடுத்துக் கொண்டார். இப்போது மனித உரிமைகள் ராஜபக்ஷாக்களுக்கு பெறுமதியான விடயங்களாகி உள்ளன.

ஆனால், கோதபாய பாதுகாப்பு செயலாளராக இருந்த நேரம் மனித உரிமை மீறல் வழக்குகளைத் தாக்கல் செய்த ஊடகவியலாளர்கள் விடுதலை பெற வேண்டுமென்றால் வழக்கை வாபஸ் பெற வேண்டியிருந்தது.

2009 பெப்ரவரி 26 சுடர் ஒளி பத்திரிகையின் அன்றைய ஆசிரியர் என். வித்யாதரன் தனது உறவினர் ஒருவரின் மரண சடங்கில் இருக்கும்போது பொலிஸ் சீருடையில் வந்த மூவர் அவரை கடத்திச் சென்றனர். அக்கடத்தல் குறித்து தேசிய சர்வதேச மனித உரிமை செயற்பாட்டாளர்களின் கவனத்தை ஈர்ப்பதில் பாதிக்கப்பட்டவர்கள் வெற்றி பெற்றனர். பொலிஸார் கடத்தலை மறுத்தனர். ஒரு சில மணித்தியாலங்களுக்குள் பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவு அறிக்கை வெளியிட்டது: கடுமையாகத் தாக்கப்பட்ட நிலையில் வீதியில் போடப்பட்டுக் கிடந்த ஊடகவியலாளர் வித்யாதரன் தமக்குக் கிடைத்ததாகவும் அவரைக் கைது செய்ததாகவும் கூறியது. ஆனால் இவை எல்லாம் ராஜபக்ஷாக்கள் மறந்துவிட்ட இன்னுமொரு சம்பவம் மட்டும்தான்.

## ஒன்று, நமக்குப் பைத்தியம்! அல்லது அவர்களுக்குப் பைத்தியம்!

அன்றைய தினம் அவுஸ்திரேலியாவின் எஸ்.பி.எஸ். தொலைக்காட்சி சேவைக்கு கோதபாய கூறிய விடயம் இதை விடவும் வேடிக்கையானது: வித்யாதரன் என்பவன் ஒரு தீவிரவாதி. நீ அவனைப் பாதுகாக்க முயற்சித்தால் உனது கையிலும் இரத்தம் படியும். அவன்தான் கொழும்பில் நடைபெற்ற எல்.ரீ.ரீ.ஈ. தாக்குதல்களின் இணைப்பாளனாக செயற்பட்டவன்.

இறுதியில் வித்யாதரனை குற்றம் அற்றவர் என விடுதலை செய்ய வேண்டி ஏற்பட்டது. ஆனால் ராஜபக்ஷாக்கள் ஒரு நிபந்தனையை விதித்தனர்: தன்னை கடத்திச் சென்று தாக்கி கைது செய்து தடுத்து வைத்ததுக்கு எதிராக வித்யாதரன் தாக்கல் செய்த மனித உரிமை மீறல் வழக்கை வாபஸ் பெற வேண்டும். இன்று, தான் கைது செய்யப்படுவதைத் தடுத்துக் கொள்ள உச்ச நீதிமன்றத்தில் மனித உரிமை வழக்குத் தாக்கல் செய்வது அந்த கோதபாய ராஜபக்ஷ தான்.

இச்சம்பவத்திற்கு ஒரு வருடத்திற்கு முன்னர், 2008 மார்ச் 06 ஆம் திகதி ஊடகவியலாளரும் அச்சகம் நடத்துபவருமான ஜசிகரனும் அவருடைய துணைவி ஊடகவியலாளர் வளர்மதியும் கோதபாயவின் பொலிஸினால் கைது செய்யப்பட்டனர். நீதிமன்றம் வழக்கு விசாரித்து தீர்ப்பு வழங்கும் முன்னர் கோதபாய ராஜபக்ஷவின் பாதுகாப்பு அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளம் பின்வரும் செய்தியை வெளியிட்டது: சந்தேகத்திற்குரிய ஜசிகரன் எல்.ரீ.ரீ.ஈ.யின் பிரசார நடவடிக்கைகளுக்கு உதவிக் கொண்டு அச்சகம் ஒன்றை நடத்தினார். சந்தேகத்துக்குரிய வளர்மதி ஜசிகரனின் துணையாக இருந்து எல்.டி.டி.ஈ.யின் பிரசார நடவடிக்கைகளுக்கு உதவி செய்து கொண்டிருந்தார் (2009 ஜனவரி).

இறுதியாக, 2009 ஒக்டோபர் 26 ஆம் திகதி இருவரும் குற்றமற்றவர்கள் என, ஆனால் ஒரு நிபந்தனையின் பேரில் விடுதலை செய்யப்பட்டனர். அந் நிபந்தனையை அப்போதைய சட்டமா அதிபராக இருந்த மொஹான் பீரிஸ் நீதிமன்றத்தில் இவ்வாறு குறிப்பிட்டார்: ஜசிகரனுக்கும் வளர்மதிக்கும் எதிரான குற்றச்சாட்டுக்களை வாபஸ் வாங்குவதற்கு நாங்கள் தயார். எனினும் அதற்காக அவர்கள் உச்சநீதிமன்றத்தில் பயங்கரவாத விசாரணைப் பிரிவுக்கு எதிராக தாக்கல் செய்துள்ள மனித உரிமை மீறல் வழக்கை வாபஸ் பெற வேண்டும்.

இவர்கள் விடுதலை செய்யப்பட்ட பின்னரும் கூட கோதபாய ராஜபக்ஷவின் பாதுகாப்புச் செயலகத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் பிரசுரிக்கப்பட்ட எந்த வொரு கட்டுரையும் நீக்கப்படவில்லை. இதுதான்,

➡ 16

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மியன்மார் முஸ்லிம்களுக்கு எதிரான பாதாள அரசியல்

ஏ.எச். ரெஸாஉல் ஹக்
(பொறிமுறைப் பொறியியலாளர் மற்றும் பகுப்பாய்வாளர்)
email: ahrezaulhaq@gmail.com

நாடற்றவர்கள் என வர்ணிக்கப்படும் ரொஹிங்கிய முஸ்லிம்கள் குறித்து மனித உரிமை அமைப்புக்களும் செயற்பாட்டாளர்களும் பர்மிய அரசின் முடிவை எதிர்பார்த்து காத்திருக்கின்றனர். ரைக்கன் பிராந்திய செயற்பாட்டுத் திட்டம் (Rikan State Action Plan) என்ற பெயரில் ஒரு வெளியீட்டை பர்மிய அரசாங்கம் கடந்த ஆண்டின் இறுதியளவில் வெளியிட்டது. அதில், ரொஹிங்கிய என்ற சொல்லுக்கு பதில் பெரும்பான்மை பர்மியர்களால் அவர்களை இழிவுபடுத்த பயன்படுத்தப்படும் வங்காளி (Bangali) என்ற சொல் வழக்கு பிரயோகிக்கப்பட்டிருப்பதாக கூறப்படுகிறது.

மேலும், இத்திட்டம் ரொஹிங்கியா முஸ்லிம்களை அவர்களது சொந்த இடங்களில் மீள்குடியேற்றுவது பற்றி கூறவில்லை. மாறாக, பௌத்தர்களுடன் கலந்து பிற இடங்களில் குடியேற்றப்படுதல் பற்றி பேசுகிறது. பர்மாவின் மொன்சூன் மழைக் காலத்தில் மீள்குடியேற்றம் செய்யப்பட உள்ளதாக கூறிய வெளிப்படைத் தன்மையற்ற இத்திட்டம் Human Right Watch இன் கடும் கண்டனத்திற்கு உள்ளாகி இருப்பதுடன், இதனை மீள்பரிசீலனை செய்வதற்கு பர்மிய அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்குமாறு அது வேண்டுகிறது.

பர்மிய முஸ்லிம்கள் பல நூற்றாண்டுகளாக அங்கு வாழ்ந்து வருகின்றனர். பண்டைய ராஜதானிகளை உள்ளடக்கியதாக அவர்களின் இருப்பு குறித்து நிறைய ஆதாரங்கள் உள்ளன. ரொஹிங்கிய முஸ்லிம்கள் மேற்கு பர்மாவின் பங்களாதேஷ் எல்லையில் இருந்து தெற்காக இந்து சமுத்திரத்தை நோக்கி கடற்கரையை அண்மித்த மற்றும் அதனைச் சூழ்ந்த பகுதிகள் உள்ளடங்கிய பிரதேசமான ரய்க்கனில் (அறக்கன் மாநிலம் என்றும் அழைக்கப்படுகின்றது) வாழ்ந்து வந்தனர்.

சுமார் 135 வகையான சிறுபான்மை இனங்களைக் கொண்ட பர்மாவில் பெரும்பான்மையானவர்களின் மதம் பௌத்த மதமாகும். பிரித்தானியாவிடமிருந்து 1948 ஆம் ஆண்டு பர்மாவின் சுதந்திரத்துடன், பர்மிய அரசாங்கத்தில் முஸ்லிம்கள் பல உயர் பதவிகளைப் பெற்றிருந்த போதிலும், 1962 இல் இராணுவ சதிப் புரட்சியின் மூலம் ஆட்சியைப் பிடித்த ஜெனரல் நெவின் இன் தலைமையிலான இராணுவ ஜுன்டாவுக்குப் (Military Junta) பின்னர் நிலைமை மாறியது. பர்மியர்களிடம் பரவலாக முஸ்லிம்கள் வியாபாரத்தைக் கைப்பற்றி இருக்கின்றனர், இலாபத்தினூடாக பள்ளிகளைக் கட்டுகின்றனர், அவர்களின் மார்க்கத்தை பர்மியர்களிடம் திணிக்கின்றனர் என்பவை போன்ற தப்பபிப்பிராயங்கள் இருந்தன. இதே தப்பபிப்பிராயங்களை ஆட்சியைக் கைப்பற்றிய இராணுவ ஜுன்டாவும் அப்படியே உள்வாங்கியது.

முஸ்லிம்களைப் போன்றே அனைத்து இனங்களையும் அடக்குமுறைக்கு உட்படுத்திய பர்மிய இராணுவ ஜுன்டாவே பர்மியர்களுக்கு பெரும் சோதனையாக இருந்து வந்தது. பலாத்காரமாக வேலை வாங்கல், கொலை மற்றும் கற்பழிப்பு என பர்மிய இனங்களின் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட இராணுவத்தின் அடக்குமுறைக்கு எதிராக பல இனங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் விடுதலை இயக்கங்கள் அங்கு உதித்தன.

அவற்றில் கரன் விடுதலை இராணுவம், ஷான் மற்றும் கச்சின் பிராந்திய விடுதலை இயக்கங்கள் குறிப்பிடத் தக்கவை. 1971 ஆம் ஆண்டு தமது எல்லைப்புற நாடான பங்களாதேஷத்தின் விடுதலைப் போருடன் உந்தப்பட்டு ரொஹிங்கிய விடுதலை அமைப்பு (RSO) உருவாகியது. எனினும், 1978 இல் பர்மிய இராணுவத்தினால் அறக்கன் பிராந்தியத்தில் மேற்கொள்ளப்பட்ட டிரகன் கிங் பாரிய இராணுவ நடவடிக்கையின் மூலம் ஆயுதம் தாங்கிய விடுதலைப் போராட்டம் அடக்கப்பட்டதைத் தொடர்ந்து இராணுவத்தினால் கட்டவிழ்த்து விடப்பட்ட அடக்குமுறையின் விளைவாக சுமார் இரண்டு இலட்சம் முஸ்லிம்கள் பங்களாதேஷுக்கு இடம்பெயர்ந்தனர். பின்னர் 1982 ஆம் ஆண்டு ரொஹிங்கிய முஸ்லிம்களின் பிரஜாவுரிமை இரத்து செய்யப்பட்டது.

1988 இல் தனது பதவியை முடித்துக் கொள்ள வேண்டிய நிலையில் இருந்த ஜெனரல் நெவின், ஏற்கனவே சுமார் 26 வருடங்கள் பர்மாவை இரும்புப் பிடியுடன் ஆண்டபோதும் 1990 இன் இறுதி வரையிலும் தான் பர்மிய இராணுவ ஆட்சியில் பெரும் செல்வாக்குச் செலுத்த வேண்டும் என விரும்பினார். 1988 ஆம் ஆண்டு பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பௌத்த பிக்குகள் உள்ளடங்கலாக, பெரும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று இராணுவ ஜுன்டாவின் ஜெனரல் நெவின் தலைமைக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டது. ஆனால், இது இராணுவத்தின் இரும்புக் கரம் கொண்டு அடக்கப்பட்டது. இதன் விளைவாக, பர்மிய இராணுவ ஜுன்டா உலகினதும் உள்ளூர்வாசிகளினதும் வெறுப்புக்கும் கடும் கண்டனத்திற்கும் பாத்திரமானது. ஜெனரல் நெவினுக்கு எதிரான கிளர்ச்சியைத் தூண்டிவிட்டு, 1988 அவலத்தின் விளைவாக ஆட்சிக்கு ஏற்பட்ட பெரும் களங்கத்தை தனது சதிப்புரட்சிக்கு நியாயமாகக் காட்டி 1988 ரான இராணுவச் சதிப் புரட்சியின் மூலம் மூத்த ஜெனரல்களில் ஒருவரான சோமவுங் ஆட்சியைக் கைப்பற்றினார்.

1988 அவலத்தினைத் தொடர்ந்து, மத அனுஷ்டானங்களில் இராணுவத்தினரையும் அவர்களின் குடும்பங்களையும் பிக்குகள் புறக்கணிக்கத் தொடங்கினார்கள். இராணுவத்திற்கு ஏற்பட்டுள்ள அவப் பெயரையும் களங்கத்தையும் போக்குவதற்கும் அதேநேரம், நாளுக்கு நாள் தமது அடக்குமுறைக்கும் ஊழல்களுக்கு எதிராகக் கிளம்பும் பர்மிய மக்களையும் பிக்குகளையும் கட்டுப்படுத்துவதற்கும் மாற்று வழிகளை ஆராய பர்மிய இராணுவம் தலைப்பட்டது. 1991 ஆம் ஆண்டு இராணுவ ஜுன்டா சமய அலுவல்கள் அமைச்சினூடாக தர்மத்தை மேலோங்க வைத்தல் மற்றும் பரப்புதலுக்கான திணைக்களத்தினைத் தொடங்கி அதற்கு கியவ் லெவின் என்ற தேரரை பொறுப்பாளராக நியமித்தது. பர்மிய பிக்குகளின் தனிப்பட்ட இயக்கங்களைத் தடை செய்து, அப்பிக்குகளை புதிய திணைக்களத்தில் பதிவு செய்தது. இதனைத் தொடர்ந்து இராணுவ ஜுன்டாவின் ஜெனரல்கள் விகாரைகளுக்குச் செல்வதும் அவற்றிற்கு நன்கொடைகள் வழங்குதல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடுவதனை அரசாங்கக் கட்டுப்பாட்டில் இருந்த ஊடகங்களினூடு பரவலாகக் காட்டப்பட்டன.

1992 இல் ஜெனரல் சோ மவுங் இன் உடல் நிலை மற்றும் பிற காரணங்களை மையப்படுத்தி ஜெனரல் தன் ஷிவே அதிகாரத்தைப் பிடித்தார். இதே ஆண்டு திணைக்களதில் தனது பதவியில் இருந்து பிக்கு கியவ் லெவின் விலக்கப்பட்டார். தேரர் கியவ் லெவினுக்கு ஜெனரல் சோ மவுங் உடன் மட்டுமின்றி, பர்மாவின் மிகப் பயங்கரமான மனிதன் எனப் பெயர் பெற்ற பர்மிய உளவுப் படைத் தலைவர் லெப். ஜெனரல் கிஹ்ன் நியுன்ட் உடனும் நெருங்கிய தொடர்புகள் இருந்ததாக அவரது மகன் ஒங் லிவிங்டுங் ரொய்ட்டர் செய்திச் சேவைக்குக் கொடுத்த பேட்டியில் தெரிவித்திருந்தார். மேலும், ஜெனரல் சோ மவுங் இன் வேண்டுகோளுக்கு அமைய எழுதப்பட்ட தனது சிறந்த பௌத்தன் என்ற நூலின் மூலமாக புகழ் பெற்றிருந்த பிக்கு யெவ் லெவினுக்கும் அசின் விராது தேரருக்கும் இடையிலான சந்திப்பு ஏற்பட்டிருந்தது. இதனைத் தொடர்ந்த காலங்களில்தனது தந்தையாருக்கும் அசின்விராது தேரருக்கும் இடையிலான உறவு தொடர்ச்சியாக வளர்ந்தது என மேலும் தெரிவித்திருந்தார்.

தேரர் கியவ் லெவின் 2001 இல் இறந்தார். இவரது மரணத்தைத் தொடர்ந்து இதே ஆண்டில் அசின் விராது தேரர் தனது 969 இயக்கத்தை நிறுவினார். இவ்வியக்கத்தின் கொள்கைகளை வகுப்பதில் கியவ் லெவின் தேரரின் கருத்துக்கள் பெரிதும் செல்வாக்குச் செலுத்தியுள்ளன என்பதுடன், அவரின் சிறந்த பௌத்தன் என்ற புத்தகத்தின் அட்டைப் படமே இவ்வியக்க்த்தின் இலாஞ்சனையாக பாவிக்கப் படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. அசின் விராது தேரர், தனது இயக்கத்தைப் பற்றிய போதனைகளைத் தொடர்ந்தார். 2003 ஆம் ஆண்டு அவரின் சொந்த ஊரில் இனக் கலவரத்தைத் தூண்டி குறைந்தது பத்து முஸ்லிம்கள் படுகொலை செய்யப்படுவதற்கு காரணமாக இருந்ததாகக் கூறி, ஜெனரல் தன் ஷிவே இன் இராணுவ ஆட்சி இவருக்கு 25 வருட சிறைத் தண்டனையை விதித்தது.

இதேவேளை, 2011 மார்ச் மாதம் ஜெனரல் தன் ஷிவே பதவி இறங்கினார். முதிர்ந்த இராஜதந்திர மற்றும் இராணுவப் பின்னணியுடைய ஜெனரல் தெய்ன் செய்ன் தனது இராணுவப் பதவியிலிருந்து இன்னும் 22 இராணுவ அதிகாரிகளுடன் சேர்ந்து 2010 இல் ஓய்வு பெற்று, ஒரு சிவிலியனாக USDP (Union Solidarity and Development Party) க்கு தலைமை தாங்கினார். இறுதியில், பர்மிய இராணுவத்தின் பின்புல ஆதரவுடன் 2011 மார்ச் மாதம் பர்மிய ஜனாதிபதியாக பதவிப் பிரமாணமெடுத்தார்.

அமெரிக்கா, பிரிட்டன் போன்ற மேற்கத்தேய நாடுகளுடன் உறவை மீளக் கட்டியெழுப்பி அதனை மேம்படுத்த விரும்பிய இவர், அதற்கான அரசியல் நகர்வுகளாக 2010 நவம்பர் மாதம், சுமார் 15 வருடங்கள் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டிருந்த பிரதான எதிர்க்கட்சியான NLD(National League for Democracy) இன் தலைவியும் நோபல் பரிசு பெற்றவருமான ஆங் காங் ஷுகியின் விடுதலைக்கு வித்திட்டதுடன், 2011 ஆரம்பத்தில் சிறையில் வாடும் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்குத் தொடங்கி சர்வதேசத்திற்கான தனது நேர் சமிக்கைகளை வெளிப்பத்தினார்.

இவ்வாறு விடுதலை செய்யப்பட்டவர்களில் அசின் விராது தேரரும் அடங்குவார். 2012 ஏப்ரல் முதலாம் திகதி பாராளுமன்ற இடைத் தேர்தல் நடந்தது. இது பர்மிய அரசாங்கத்தின் சீர்த்திருத்தத்தினை விரும்பும் தன்மையை சர்வதேசத்திற்கு அறிந்து கொள்ள உதவுவதாக இருந்தமையால் அதிக முக்கியத்துவத்தைப் பெற்றிருந்தது. சர்வதேசத்தின் தேர்தல் கண்காணிப்பாளர்களின் முன்னிலையில் அமைதியாக நடந்த இத்

➡ 17



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் தேசம்

மலர்: 15 இதழ்: 11 ஜூன் 01 - 14



77, ஸ்ரீ வஜிரஞான மாவத்தை, கொழும்பு- 09, இலங்கை
தொலைபேசி: 0112 698771 / 0777 412561, பெக்ஸ்: 0112 686030,
மின்னஞ்சல்: engalthesamnews@gmail.com


## மனு நீதி கண்ட சோழன்

தனது மகன் தேரையோட்டி இளம் பசுக் கன்றை கொன்று விட்டதாக தாய்ப் பசு வந்து சோழ அரண்மனையில் மணியை அடித்தபோது பசுவுக்கு நீதி வழங்கிய மன்னன் மனு நீதி கண்ட சோழன் என்று புகழ் பாடும் ஒரு கதையை ஆரம்ப வகுப்புத் தமிழ் புத்தகத்தில் படித்த ஞாபகமுண்டு. பசு மணியை அடித்ததோ இல்லையோ புங்குடுதீவு வித்தியாவின் விவகாரம் ஜனாதிபதி மாளிகையின் மதில்களையும் தாண்டி மணி ஒலிக்கவே எவ்வித கெடுபிடியும் இல்லாது யாழ்ப்பாணத்திற்குப் போய் தாய்க்கும் குடும்பத்தினருக்கும் ஆறுதல் கூறி நீதி வழங்குவதாக உறுதியும் கூறிய விடயம் வெறும் கதையன்று, அது நிஜம்.

யாழ்ப்பாண மக்கள் மட்டுமல்ல, இன்று முழு நாடுமே வித்யாவுக்காக கண்ணீர் வடிப்பது தெரிகிறது. கையாளான ஒரு பிரதேச சபைத் தலைவர் நூறு பெண்களை வல்லுறவுக்கு உட்படுத்தியமைக்கு விழா எடுத்தபோது இரசித்துக் கொண்டு மௌனமாக இருந்த மஹிந்த கூட வித்தியாவின் விடயத்தில் கருத்துக் கூற முன்வந்துள்ளார். முன்னர் எல்லாம் யாழ்ப்பாணத்தில் எத்தனையோ வல்லுறவுகள், துஷ்பிரயோகங்கள், பத்திரிகை காரியாலய எரிப்புகள், கொலைகள் நடந்த போதெல்லாம் மஹிந்த அரசாங்கத்துக்கு எதிராக வாய் திறக்க முடியாதிருந்த மக்கள், இன்று தம் துக்கத்தை தானும் சுதந்திரமாக வெளிப்படுத்தும் வாய்ப்பு எப்படிக் கிடைத்தது என்பதைச் சிந்திக்க வேண்டும்.

வெறும் ஐந்து மாதங்களேயான நல்லாட்சியின் சுவையை மக்கள் அனுபவிக்கத் தொடங்கியுள்ளார்கள். மனு நீதி கண்ட சோழன் அரண்மனைக்கு வந்த பசுவுக்கு நீதி வழங்கினான். மைத்திரிபால சிறிசேன புங்குடுதீவிற்கே சென்று வித்தியாவின் தாயை நேரில் கண்டு ஆறுதல் வழங்கி நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கையையும் வழங்கிவிட்டு வந்துள்ளார். இது இந்த நாட்டில் முன்னெப்போதும் காணாத காட்சி.

கோதபாயவுக்கு முன் பிணை கிடைக்கும் அளவுக்கு நீதித்துறை சுதந்திரமாகச் செயற்படுகிறது. பிரதமருக்குப் பகிரங்கமாக தூஷண வார்த்தைகளால் ஏசும் அளவுக்கு பாராளுமன்ற உறுப்பினர்களின் சுதந்திரம் உள்ளது. அரசாங்கத்தை விமர்சித்து பத்திரிகைகளிலும் தொலைக்காட்சி நிகழ்ச்களிலும் தாராளமாக கருத்துக் கூறும் ஊடகச் சுதந்திரம் பேணப்படுகின்றது. மைத்திரியும் ரணிலும் கொடுத்த இடம் காரணமாகவே யாழ்ப்பாண மக்கள் அதிகமாகத் துள்ளுகிறார்கள் என்று ஒரு மஹிந்த ஆதரவாளரான முன்னாள் அமைச்சர் கூறியதையும் இங்கு நினைவு கூறப்பட்ட வேண்டியதே.

யாழ்ப்பாண மக்கள் என்றால் அவர்கள் மஹிந்தவின் இராணுவத்தின் விருப்பு வெறுப்புகளுக்கு மட்டும்தான் செவிசாய்க்க வேண்டும் என்ற நிலை மாறி தமது கவலையை, எதிர்ப்பை ஏனைய பிரதேச மக்கள் போல வீதியிலிறங்கி ஆர்ப்பாட்டத்தினூடாக தெரிவிக்கும் நல்லாட்சி நிலை தொடர வேண்டும். வித்தியாவுக்கு நீதி கிடைப்பது போன்றே இலங்கை மக்கள் அனைவருக்கும் நீதி கிடைக்க வேண்டும். அதனைத் தடுத்து நிறுத்த முனையும் கும்பலின் சதிகளை முறியடிக்க வேண்டும். ஆடுகள் நனைவதாக ஓலமிடும் ஓநாய்களுக்கு ஒருபோதும் மக்கள் ஏமாந்து விடக் கூடாது.

## நல்லாட்சி எண்ணக்கரு


அஷ்ஷெய்க் எம்.எச்.எம். உஸைர் (இஸ்லாஹி)
B.A, Dip. In Edu
சிரேஷ்ட விரிவுரையாளர்,
இஸ்லாஹிய்யா அரபுக் கல்லூரி


பொருளாதாரம் மற்றும் வளங்களில் அருமை காணப்படா விட்டாலும், நாடுகளின் பொருளாதார அபிவிருத்தி மந்தகரமானதாக இடம்பெறுதல், சமூக நீதி வீழ்ச்சியடைதல் போன்ற பிரச்சினைகளுக்கான காரணங்கள் யாவை என்று 1980 காலப் பகுதியில் இடம்பெற்ற கலந்துரையாடல்கள் ஊடாக எழுந்தவொன்றே நல்லாட்சி பற்றிய எண்ணக்கரு ஆகும்.

பொருளாதாரம் மற்றும் மனித வளங்கள் முறையாக முகாமைப்படுத்தப் படாமையினால் பொருளாதார அபிவிருத்தி மந்த நிலையில் இருப்பதாகவும் அதன் விளைவாக சமூக நீதியும் வீழ்ச்சியடைந்துள்ளது என்றும் இதற்கான காரணங்களாக தேவையற்ற முறையில் அதிகாரம் ஒரு முகப்படுத்தப்படல், ஆட்சி முறையில் செயல் திறன் குன்றிய நிலை, அரசாங்க சேவை அரசியல் மயமாதல், அரசியல் நடவடிக்கைகளில் மக்களின் பங்கேற்பு இன்மை, இலஞ்சம் ஊழல் அதிகரித்தல், வகைகூறலில் இருந்து ஆட்சியாளர்கள் விடுபடல் என்பன காணப்படுவதாகவும் இக்குறைபாடுகள் அகற்றப்பட்ட நிலையே நல்லாட்சி எனவும் கூறப்பட்டது.

நல்லாட்சியை வரை விலக்கணப்படுத்தும் போது ஒக்ஸ்போர்ட் அகராதியானது அரசாட்சி என்பது நடத்தை, அதன் தொழிற்பாடு, அதிகாரத்தின் ஊடாக கட்டுப்படுத்தும் தன்மை, கொள்கை உருவாக்கம் என்பவற்றுடன் சமூக அமைப்புக்களின் நலன்களைக் கருத்தில் கொள்வதாக இருக்கும். இதனை சிறப்பாகவும் ஒழுங்காகவும் நடைமுறைப்படுத்தலே நல்லாட்சி எனக் கூறுகிறது. அதாவது, நல்லாட்சியினூடே எதிர்பார்க்கப்படும் விடயங்களை சுருக்கமாகக் கூறுவதாயின், மனிதர்களின் கௌரவமான வாழ்க்கை, திருப்தியான உணவு, போதுமான தங்குமிடம், தரமான கல்வி, சுகாதாரம், நியாயமான நீதி மற்றும் தனிப்பட்ட பாதுகாப்பு போன்றவற்றைப் பெற்றுக் கொள்வதற்கான ஓர் அரசியல் வழிமுறை எனலாம்.

இந்த அடிப்படையிலேயே ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தித் திட்டம் (UNDP) உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, ட்ரான்ஸ் பரன்சி இன்டர் நெஷனல் போன்ற நிறுவனங்கள் நல்லாட்சிக் கோட்பாட்டை வலியுறுத்தி வருகின்றன.

### இஸ்லாமும் அரசியலும்

ஒரு முஸ்லிம் தனக்கென்று தனித்துவமான ஓர் அரசியல் கோட்பாடும் அதனை நடைமுறைப் படுத்துவதற்கான அடிப்படைகளும் தன்னிடம் இருப்பதை முதலில் புரிந்து கொள்ள வேண்டும். கடந்த சில நூற்றாண்டுகளாக ஐரோப்பாவில் தோற்றம் பெற்ற மதசார்பின்மை சிந்தனைகளால் எமது சமூகமும் பாரியளவில் பாதிக்கப்பட்டு இஸ்லாத்தை சமூக, அரசியல், பொருளாதார தளங்களில் இருந்து விடுவித்து, அதனை தனி மனிதனது ஆன்மிக விமோசனத்தோடு சுருக்கிக் கொண்டது. இஸ்லாத்துக்கும் சமூக வாழ்வுக்கும்; இஸ்லாத்துக்கும் பொருளாதார வாழ்வுக்கும்; இஸ்லாத்திற்கும் அரசியலுக்கும்; இஸ்லாத்திற்கும் இலக்கியத்திற்கும்; இஸ்லாத்திற்கும் ஊடகத்துறைக்கும்... என வாழ்வின் பல்வேறு துறைகளில் இருந்து இஸ்லாம் ஓரங்கட்டப்பட்டது. இதேவேளை, இஸ்லாமிய சட்ட அறிஞர்களும் தமது ஆய்வுகளை பௌதிகவியல் மற்றும் சமூகவியல் ஆய்வுகளில் இருந்து விடுவித்து நம்பிக்கை கோட்பாடுகள், வணக்க வழிபாடுகள் என்பவற்றோடு சுருக்கிக் கொண்டனர். இதுவே எமது சமூகத்தின் அனைத்துப் பின்னடைவுகளுக்கும் பிளவுகளுக்கும் தோல்விகளுக்கும் காரணமாக அமைந்தது.

ஆனால், இஸ்லாம் என்பது நம்பிக்கைக் கோட்பாடும் வணக்க வழிபாடுகளும் பண்பாடும் சட்ட திட்டங்களுமாகும். அதாவது, ஒரு முழுமையான வாழ்க்கைத் திட்டமாகும். தனிப்பட்ட வாழ்க்கை, குடும்ப விவகாரங்கள், சமூக நிலைமைகள், அரசின் அடிப்படைகள் மற்றும் சர்வதேசம் தொடர்பான அடிப்படைக் கோட்பாடுகளையும் விதிகளையும் நெறிமுறைகளையும் சட்டங்களையும் அது கொண்டுள்ளது. அல்குர்ஆனையும் அஸ்ஸுன்னாவையும் இஸ்லாமிய சட்ட மேதைகளின் ஆய்வுகளையும் வாசிக்கின்ற ஒருவரால் இதனை தெளிவாகப் புரிந்து கொள்ள முடியும்.

### இஸ்லாமிய அரசியலின் அடிப்படைகள்

1. சட்டம் இயற்றும் அதிகாரம் அல்லாஹ்வுக்குரியது.

2. விவகாரங்கள் அனைத்தும் கலந்தாலோசனையின் (ஷூரா) அடிப்படையில் முடிவெடுக்கப்படும்.

3. நீதியை (அத்ல்) நிலைநிறுத்தல்.

4. சமத்துவத்தை (முஸாவா) நிலைநிறுத்துதல்.

சட்டம் இயற்றும் அதிகாரம் அல்லாஹ்வுக்குரியது

நமது தாய்மொழி, வாழும் காலம், இடம், இனம், நிறம் என்பன போன்ற விடயங்களை நாம் தீர்மானிப்பதில்லை. இவை எல்லாம் உன்னதமான இறை நியதிகளுக்கு உட்பட்டவையாகும். ஆனால், நமக்கு சுயமே தேர்வு செய்யவும் முடிவெடுக்கவும் சுதந்திரம் தரப்பட்ட பரந்துபட்ட வாழ்வியல் துறைகளும் உண்டு. சமூகமாக வாழும் போது இந்த மனித சுதந்திரத்துக்கு சில வரையறைகள் தேவைப்படுகின்றன. இந்த வரையறைகளே சட்டமாகும். ஆனால், இந்த சட்டத்தை உருவாக்கித் தருவது யார்? சரி, பிழை, நீதி, அநீதி, நேர்வழி, தீயவழி, தர்மம், அதர்மம் என்பதை எல்லாம் தீர்மானிப்பது யார்?

பதில் தெளிவானது. நமக்கு உயிருடன் உடலும் ஆரோக்கியமும் தந்த, இவ்வுலகை படைத்துப் பரிபாலிக்கின்ற இறைவனுக் மட்டுமே அவ்வதிகாரம் இருக்கிறது. இறைவனால் வழங்கப்பட்ட வாழ்க்கை முறையை அங்கீகரிப்பதும் கீழ்படிந்து நடப்பதும் மனிதர்களின் கடமையாகும். அத்துடன் அவன் ஏற்படுத்திய தத்துவங்களையும் சட்டங்களையும் அடிப்படைகளையும் அளவுகோல்களையும் ஏற்றுக் கொண்டு அவற்றின் வெளிச்சத்தில் தெளிவுகளையும் விளக்கங்களையும் காண்பதற்கும் நடைமுறைப் படுத்துவதற்கும் மனிதனுக்கு உரிமையும் சுதந்திரமும் உள்ளன.

"அறிந்து கொள்ளுங்கள்! படைக்கும் ஆற்றலும் கட்டளை பிறப்பிக்கும் அதிகாரமும் அவனுக்கு உரியவையே. அனைத்து உலகங்களுக்கும் அதிபதியான அல்லாஹ் அருள்மிக்கவனாவான்."

(அல்குர்ஆன் 7: 54)

"ஆட்சி அதிகாரம் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருக்கும் இல்லை. அவனைத் தவிர வேறு யாருக்கும் நீங்கள் அடிபணியக் கூடாது என்று அவன் கட்டளை இட்டுள்ளான். இதுதான் முற்றிலும் நேரான வழியாகும். ஆயினும் மக்களில் பெரும்பாலானோர் அறியாதிருக்கின்றனர்."

(அல்குர்ஆன் 12: 40)

தொடரும்...


**எங்கள் தேசம் சந்தா விபரம்**

| | | |
|---|---|---|
| உள்நாடு | தனிப்பிரதி: 30.00<br>வருட சந்தா: 1200.00<br>ஆறு மாதங்கள்: 600.00 | |
| வெளிநாடு | இந்தியா, பாகிஸ்தான், மாலைதீவு, மலேஷியா, சிங்கப்பூர்: 3600.00<br>மத்திய கிழக்கு நாடுகள்: 3750.00 | அவுஸ்திரேலியா, தென்கொரியா: 4700.00<br>இங்கிலாந்து: 5750.00, அமெரிக்கா, கனடா: 6900.00, ஜப்பான்: 4800.00 |

எங்கள் தேசத்துக்கு காசுக்கட்டளை அனுப்ப விரும்புபவர்கள்: காசுக்கட்டளை பெறுவோர், Engal Thesam தபால் நிலையம் Dematagoda எனவும் குறிப்பிட்டு அனுப்பவும். முகவரி: 77, Dematagoda Road, Colombo - 09.
Accont Name: SLJEI | Bank Account No. BOC 372132 | Commercial Bank: 1320009182
தொடர்புகளுக்கு: 077 2992220


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவிஸ் வங்கிகளில் கறுப்புப் பணம்



## அம்பலமாகும் தகவல்கள்

இலங்கையில் வங்கி மற்றும் நிதிச் சட்டத்தின் பிரகாரம் வெளிநாட்டு வங்கிகளில் வங்கிக் கணக்குகளை ஆரம்பிப்பதென்றால் தங்களது நிதி விபரங்களை மறைத்துக் கொண்டு அதனைத்துவங்க முடியாது. இதனை இன்னுமொரு முறையில் சொல்வதென்றால், நிதிப் பண்டமாற்று தொடர்பிலான சட்டமூலத்தில் குறிப்பிடப் பட்டுள்ளதன்படி, இலங்கையில் வசிக்கும் எந்தவொரு பிரஜைக்கும் மத்திய வங்கியின் அனுமதியின்றி வெளிநாட்டு வங்கி ஒன்றில் கணக்கொன்றை திறப்பதற்கோ அல்லது வெளிநாட்டு வங்கியுடன் கொடுக்கல் வாங்கல் செய்வதற்கோ அல்லது இரகசியமாக திறக்கப்பட்டுள்ள வங்கிக் கணக்கிலிருந்து நிதியை பெற்றுக் கொள்வதற்கோ அல்லது அக்கணக்கில் பணத்தை வைப்புச் செய்வதற்கோ முடியாது. இந்நிலையில், பல செல்வந்தர்கள் வரிக் கொடுப்பனவுகளில் இருந்து தப்பித்துக் கொள்ளும் நோக்கில் சட்டவிரோதமாக வெளிநாட்டு வங்கிகளில் பணத்தை வைப்பிலிடுகிறார்கள். சட்டத்தில் இடமில்லாத இத்தகைய இரகசியமான வங்கிக் கணக்குகளை ஆட்சி அதிகாரத்திலிருந்த பல அரசியல்வாதிகள் தொடர்ந்துள்ளமைக்கான தகவல்களும் உள்ளன.

கடந்த பெப்ரவரி மாதம் சர்வதேச ஊடகங்கள் வெளியிட்டிருந்த செய்தி அறிக்கையில், 92 இலங்கையர்களிடம் 129 சுவிஸ் வங்கிக் கணக்குகள் உள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது. இவ்வங்கிக் கணக்குகளில் வைப்பிலிடப்பட்டுள்ள முழு மொத்த நிதித் தொகையின் பெறுமதி 7.7 பில்லியன் ரூபாவாகும் எனக் கணிப்பிடப்பட்டுள்ளது. மத்திய வங்கியின் கருத்தின் பிரகாரம், சுவிஸ் வங்கிகளில் நிதி வைப்புச் செய்துள்ள செல்வந்தர்கள்திருடர்களாவர். ஆனால், தற்போதைய நல்லாட்சி அரசாங்கம் அவர்களுக்கெதிராக எவ்வித நிதிக் குற்றப் பரிசோதனையையும் மேற்கொள்ளவில்லை. இந்நிலையில், அத்தகைய திருடர்கள் பற்றி துப்புக் கொடுப்பதற்கு சர்வதேச ஒத்துழைப்புகள் இவ் அரசாங்கத்திற்கு கிடைத்து வருவதைக் கண்டு கொள்ள முடிகிறது.

இலங்கையிலும் வெளிநாடுகளிலும் உள்ள நிதி நிறுவனங்களில் முறைகேடான முறையில் வைப்புச் செய்துள்ள சொத்து தொடர்பில் மேற்கொள்வதாக தெரிவிக்கப்படுகின்ற பரிசோதனைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கு அமெரிக்காவிலிருந்து இந்நாட்டிற்கு ஓர் விசாரணைக்குழு அண்மையில் வருகை தந்துள்ளது. அக்குழுவில் அமெரிக்க FBI அதிகாரிகள், நீதித் திணைக்கள அதிகாரிகள் மற்றும் குடிவரவு குடியகல்வு திணைக்கள அதிகாரிகள் என்போர் உள்ளடங்குவர். இக்குழுவினர் இலங்கை குற்றப் பரிசோதனை திணைக்களம், இலஞ்சம் மற்றும் மோசடி விசாரணை ஆணைக்குழு, நீதித் திணைக்கள அதிகாரிகளுடன் இணைந்து முறைகேடான சொத்துக் குவிப்பு தொடர்பிலான பரிசோதனைகளை ஆரம்பித்துள்ளனர்.

இந்நாட்டின் அரசியல்வாதிகள் முறைகேடான வகையில் குவித்த சொத்துகள் வெளிநாடுகளில் உள்ளதென்றால் அவற்றைத் தேடுவதற்கு இலங்கை அரசாங்கத்திற்கு ஒத்துழைப்பு வழங்குவதாக அமெரிக்க ராஜாங்க செயலாளர் ஜோன் கெரி வாக்குறுதியளித்திருந்தமையும் தெரிந்ததே. இவை போக, பிரித்தானியா, இந்தியா, சீசெல்ஸ் போன்ற நாடுகளும் இத்தகைய பரிசோதனைகளுக்கு ஒத்துழைப்பு வழங்க முன்வந்துள்ளன.

கடந்த ஆட்சிக் காலத்தில் ராஜபக்ஷ குடும்பத்தினரால் முறைகேடான வகையில் ஈட்டிக் கொண்ட பெருந்தொகைப் பணம் சுவிஸ் நாட்டில் உள்ள வங்கிகளில் வைப்பிலிடப்பட்டுள்ளதாக கடுமையான குற்றச்சாட்டு மேலெழுந்தது. அதில் நேரடியாகவே சுவிஸ் வங்கிகளில் பணத்தை வைப்பிலிடாமல் சீசெல்ஸ் தீவுக் கூடாக அந்நாட்டுப் பிரஜைகளாக சுவிஸ் வங்கிக் கணக்குகளை தொடர்ந்திருப்பதாக கலாநிதி ஹர்ஷ டி சில்வா செய்தியாளர் மாநாடு ஒன்றில் தெரிவித்திருந்தார். அதுபோன்றே, வட பகுதியில் யுத்தம் நிலவியபோது தேடிக் கொள்ளப்பட்ட 350 தொன் தங்கத்தை ஜப்பானுக்கு விற்பனை செய்வதற்காக ஈடுபடுத்தப்பட்ட இடைத் தரகர் நிறுவனமும் சுவிஸ்லாந்து கூட்டுத்தாபனமொன்றாகும். இக்கூட்டுத்தாபனத்திற்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையில் 40 இலட்சம் கோடி ரூபா கொடுக்கல் வாங்கல் இடம்பெற்றுள்ளது. இப்பணம் எந்தவொரு வங்கியிலும் வைப்புச் செய்தமைக்கான தகவல்கள் இல்லை. எவ்வாறிருப்பினும் இந்நாட்டு பிரஜைகளது 89 மில்லியன் டொலர் நிதி சுவிஸ் வங்கிகளில் உள்ளதாக சுவிஸ் மத்திய வங்கி தகவல் வெளியிட்டுள்ளது.

இந்நாட்டின் நிதிக் கட்டுப்பாட்டு சட்டங்களுக்குள்ளால் புகுந்து சுவிஸ்லாந்து வங்கிகளில் நிதி வைப்புச் செய்தவர்கள் பற்றிய தகவல்களை சர்வதேச புலனாய்வுப் பத்திரிகை சம்மேளனம் வெளியிட்டுள்ளது. அத்தகவல்களின்படி, ஓர் இலங்கையர் 160 இலட்சம் அமெரிக்க டொலர்களை சுவிஸ் வங்கி கணக்கொன்றில் வைப்புச் செய்துள்ளார்.

இவ்வங்கிக் கணக்கினை எட்மென்ட் விஜய சூர்ய என்பவரும் அவருடைய மனைவி, மகள் மற்றும் இரண்டு மகன்களும் தொடர்ந்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. விஜய சூர்ய என்பவர் பிரபல வர்த்தகர் ஒருவர். ஆனால், இவர் தன்னை HSBC வங்கிக்கு விளையாட்டு அமைப்பொன்றின் உரிமையாளர் ஒருவர் என்பதாக அறிமுகப்படுத்தியுள்ளார். விஜய சூர்யவினுடையதும் அவருடைய மனைவியினுடையதும் வைப்புத் தொகையின் பெறுமதி 10,668,094 அமெரிக்க டொலர்களாகும். இவர்களுடைய மகளான லக்ஸ்மி பிரனாந்துவின் வைப்புத் தொகையின் பெறுமதி 1,989,370 அமெரிக்க டொலர்களாகும். ரோஹான் என்னும் மகனுடைய வைப்புத் தொகையின் பெறுமதி 1,975,594 அமெரிக்க டொலர்களாகும். ஏனைய இரு புதல்வர்களினதும் வைப்புத் தொகையின் பெறுமதி 1,975,319 டொலர்களாகும்.

சுப்ரமணியம் சுரேந்திரன் என்பவர் இரண்டு வங்கிக் கணக்குகளை தொடர்ந்துள்ளார். இலங்கை மின்சார சபை பங்குதாரர் ஒருவராக கருதப்படுகின்ற இவர், வங்கிக்கு தன்னை கொழும்பு வர்த்தக சங்க உறுப்பினர் ஒருவராகவும் வர்த்தக முகவர் ஒருவராகவும் அறிமுகப்படுத்தியுள்ளார். அவருடைய ஒரு வங்கிக் கணக்கில் 6,564,952 டொலர் நிதித் தொகை வைப்புச் செய்யப்பட்டுள்ளது. மற்றைய வங்கிக் கணக்கு அவருடைய மனைவியின் பெயரில் உள்ளது. அக்கணக்கில் 6,495,287 டொலர் நிதி வைப்புச் செய்யப்பட்டுள்ளது.

அநுரலெஸ்லி பெரேரா எனும் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ள மற்றுமொருவரின் வங்கிக் கணக்கில் 1,622,959 டொலர் நிதி வைப்புச் செய்யப்பட்டுள்ளது. அநுர ராஜேந்திரன் எனும் பெயரில் ஒருவர் 1,384,149 டொலர் பணத்தை வைப்புச் செய்துள்ளார்.

➡ 16

# தகவல் பெறும் உரிமைச் சட்டம்

தகவல் பெறும் உரிமை தொடர்பாக அண்மைக் காலமாக ஊடகத்தினர் மத்தியில் பெருவாரியாக கதைக்கப்பட்டு வரும் ஒரு விடயமாகும். மைத்திரி அரசாங்கம் 100 நாள் வேலைத் திட்டத்தில் அதனை சட்டமாக்குவதாக தெரிவித்திருந்தும் நூறு நாள் திட்டம் கடந்துள்ள நிலையில் இன்னும் அது சட்டமூலமாக பாராளுமன்றத்தில் கொண்டு வரப்படவில்லை. இத்தகவல் பெறும் உரிமைச் சட்டம் தொடர்பில் ஊடகத்துறை சார்ந்த சிலரிடம் பெற்ற கருத்துக்களை இங்கு தொகுத்துத் தருகிறோம்.

**தொகுப்பு: ஏ.முஹம்மத் பாயிஸ்**



### தேவ கௌரி
**சுதந்திர ஊடகவியலாளர்**

தகவல் அறியும் உரிமை அடிப்படை உரிமைக்குள் வருகின்றது. அது எமது அரசியலமைப்பில் எண்ணங்களை வெளியிடுதல், கருத்துச் சுதந்திரம் என்பவற்றுக்குள் உள்வாங்கப்பட்டிருந்தாலும் அரசியலமைப்பின் 15 ஆவது சரத்தால் கட்டுப்படுத்தப்படுகிறது.

ஒரு ஜனநாயக நாட்டில் தகவலறியும் உரிமை என்பது மிக முக்கியமானது. இதனால் அங்கு வெளிப்படைத் தன்மை காணப்படுகிறது. மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் தொடர்பில் வெளிப்படைத் தன்மை இருக்க வேண்டும். தகவல் அறியும் உரிமை சட்டமாக்கப் பட்டால்தான் மக்களால் இதனை அவர்களிடம் தைரியமாக கேட்க முடியும். இதனால் நாட்டில் ஊழல் நடைபெறாது.

ஒவ்வோர் அரசும் ஆட்சிக்கு வரும்போது எதிர்க்கட்சி தகவல் அறியும் உரிமைச் சட்ட மூலத்தை முன்வைக்கும். பின்னர் அந்தச் சட்டமூலம் ஆட்சியாளர்களால் முறியடிக்கப்படும். இதுதான் இவ்வளவு காலமும் இந்த நாட்டில் நடந்திருக்கிறது. ஆனால், இந்த அரசாங்கத்தினர் ஓர் உறுதி மொழியை வழங்கியிருக்கிறார்கள். அதற்கான சட்டமூலத்தின் வரைபு தயாரிக்கப்பட்டு மக்களின் கருத்துக்கு விடப்பட்டிருக்கிறது. இது தொடர்பில் சிவில் அமைப்புக்களும் ஆராய்ந்து வருகின்றன. தகவல் அறியும் உரிமை இந்த அரசில் சட்டமாக்கப்படலாம்.



### எம்.எஸ். அமீர் ஹுஸைன்
**முறைப்பாட்டு பொறுப்பதிகாரி**
**பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு**

தகவல் என்பது பொதுமக்கள், ஊடகவியலாளர்கள் எனப் பலருக்கும் முக்கியமாகக் காணப்படுகிறது. இலங்கையைப் பொறுத்தவரைக்கும் தகவல்களை பெற்றுக் கொள்வதற்கான சுதந்திரமான நடைமுறை சட்டரீதியாக இல்லை. ஆனால் தெற்காசிய நாடுகளான இந்தியா, பங்களாதேஷ் போன்ற நாடுகளில் இந்த தகவல் பெறும் உரிமை சட்டரீதியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் உரிமை மீறல்கள், ஒழுங்கீனங்கள், ஊழல் மோசடிகள் போன்ற விடயங்களை வெளிப்படுத்துகின்ற போது ஊடகவியலாளர்களுக்கும் ஊடகங்களுக்கும் பாரிய அச்சுறுத்தல் ஏற்படுகின்றது. இந்த தகவல் வெளிப்படுத்தப்பட்டது தொடர்பில் அரச உயர்மட்ட அதிகாரிகள் மீதும் சந்தேகிக்கப்பட்டு அவர்கள் மீது கட்டுப்பாடுகள் விதிக்கப்படுவது போன்ற நிலைமைகளும் காணப்படுகின்றன.

நம் நாட்டில் அரச மட்டத்தில் காணப்படுகின்ற தடைகள், சுற்று நிருபங்கள், கட்டுப்பாடுகள் போன்றவற்றினால் அதிகாரிகள் எந்தவொரு விடயத்தைப் பற்றிய தகவலையும் வெளிப்படுத்துவதில்லை. இதனால் மறைமுகமான வழிகளில் ஊடகங்கள் தகவல்களை பெற்றுக் கொள்வதற்கான நிலைமை ஏற்படுகின்றது. அரசாங்கத்தில் காணப்படும் கட்டுப்பாடுகள் ஊடகங்களுக்கு உண்மையான தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு தடையாக அமைகிறது.

இந்த தகவல் பெறும் உரிமை சட்டரீதியான அங்கீகாரம் பெறுகின்ற போது குறிப்பிட்ட, வரையறுக்கப்பட்ட விடயங்கள் பற்றிய தகவல்களை மக்களுக்கும் ஊடகங்களுக்கும் வெளிப்படுத்தக் கூடிய சுதந்திரமான நிலை இதனூடாக உருவாக்கப்படும். இதற்கு தகவல் பெறும் உரிமை சட்டமாக்கப்பட வேண்டும்.



### எஸ்.ஏ.எம். பவாஸ்
**உதவி ஆசிரியர் / திங்கள் சஞ்சிகை**
**அரசாங்க தகவல் திணைக்களத்தின் வெளியீடு**

ஜனநாயக நாட்டில் தகவல் பெறும் உரிமை மக்களுக்கு இருக்க வேண்டும். இதனூடாக அரசில் மக்களின் பங்குபற்றுதலை உருவாக்கிக் கொள்ள முடியும். இந்த தகவல் பெறும் உரிமை ஏனைய நாடுகளில் சட்டமாக்கப் பட்டிருப்பதனால் அந்நாட்டு மக்கள் உரிமையுடன் அரசாங்க அதிகாரிகளிடம் தகவல் பெற முனைகின்றனர். அரசாங்க அதிகாரிகளும் தமக்கிருக்கின்ற கடமையின் பிரகாரம் தகவல்களை வழங்க உரித்துடையவராகின்றார்கள்.

உண்மையில், ஒரு நல்லாட்சி இடம்பெற [illegible] பெறும் உரிமை இன்றியமையாததாகும். அவ்வாறு இல்லாவிட்டால் எந்தவோர் அரச திட்டத்திலும் வெளிப்படைத்தன்மை காணப்படாது போய்விடும். இதனால் ஊழல் மலிந்து மக்கள் பாதிக்கப்படுவார்கள். இதற்கு தகவல் அறியும் உரிமை சட்டமாக்கப் படுவதே சிறந்த வழியாகும்.

➡ 17

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜம்இய்யதுல் உலமா மாநாட்டில் முக்கிய தீர்மானங்கள்

**கடந்த** சில காலமாக அஹ்லுஸ் ஸுன்னாவல் ஜமாஅத்தினரின் தூய அகீதாவுக்கு எதிரான பல சிந்தனைகள் இலங்கை முஸ்லிம் சமூகத்துக்குள் பரவி வருவதை அவதானித்த அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா, அஹ்லுஸ் ஸுன்னாவல் ஜமாஅத்தின் நம்பிக்கைக் கோட்பாடுகளை பறைசாற்றும் முகமாகவும் அவர்களின் கொள்கைகளுக்கு எதிரான சிந்தனைகளை வெளிச்சமிட்டுக் காட்டி அவை பிழையானவை, வழிகேடானவை, அபத்தனமானவை என்பதை விளக்கும் முகமாகவும், அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா 2015.05.20 ஆம் திகதி ஏற்பாடு செய்த தேசிய மாநாட்டில் இலங்கையின் அனைத்து மாவட்டங்களையும் பிரதிநித்துவப்படுத்தி கலந்து கொண்ட உலமாக்கள், அரபுக் கலாசாலை அதிபர்கள், விரிவுரையாளர்கள், மஸ்ஜித் இமாம்கள், கதீப்மார்கள் மற்றும் துறைசார் நிபுணர்கள் என மூவாயிரத்துக்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.




இம்மாநாட்டில் இடம்பெற்ற விரிவுரைகள், ஆய்வுகள், கருத்துரைகள் முதலானவற்றை ஆராய்ந்து பின்வரும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன:

எல்லாம் அவனே எனும் வஹ்ததுல் வுஜூத் சிந்தனையும் அல்லாஹுத்தஆலா தனது படைப்பினங்களில் இறங்கி அவன் அவற்றில் ஒன்றித்து விட்டான் என்ற சிந்தனையும் தூய இஸ்லாமிய சிந்தனைக்கு முற்றிலும் முரணான, குப்ரை ஏற்படுத்தும் சிந்தனைகளாகும் என்பதையும், அல்லாஹுத்தஆலா ஒருவனாகவும் வணக்கத்துக்கு தகுதியான ஒரே இறைவனாகவும் சகல படைப்பினங்களினதும் படைப்பாளனாகவும் இருப்பது போலவே அவன் வேறானவனாகவும் அவனால் படைக்கப்பட்ட சிருஷ்டிகள் வேறானவையாகவும் இருப்பதை நம்புவது அஹ்லுஸ் ஸுன்னா வல்ஜமாஅத்தின் அகீதாவின் ஓர் அடிப்படைக் கொள்கையாகும் என்பதை மாநாடு மிகத் தெளிவாக வலியுறுத்துகின்றது.

முஹம்மத் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் நபிமார்களில் இறுதியானவர்கள். அவர்களுக்குப் பின் இறுதி நாள் வரை எந்தவொரு நபியும் வர முடியாது என்பதும், அவர்களுக்குப் பின்னர் நபித்துவத்தை வாதாடக் கூடிய உரிமை வேறு எவருக்கும் இல்லை என்பதும், அவர்கள் கொண்டு வந்த மார்க்கமே இறுதி மார்க்கம் என்பதும், நபிமார்கள் மாத்திரமே தவறுகளில் இருந்து முற்றிலும் பாதுகாக்கப்பட்டவர்கள் என்பதும் அவர்கள் அல்லாத வேறு எவரும் தவறுகளிலிருந்து பாதுகாக்கப்பட்டவர்கள் அல்ல என்பதும் அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஅத்தின் அடிப்படைக் கோட்பாடுகளாகும்.

இதற்கு மாற்றமாக நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுக்குப் பிறகு நபிமார்களின் வருகை தொடரும் என்று கூறுவோரின் சிந்தனை இஸ்லாத்திற்கு முற்றிலும் முரணானதாகும். அவ்வாறே, இஸ்னா அஷ்அரிய்யா என அறிமுகப்படுத்திக் கொள்ளும் ஒரு பிரிவினரால் முன்வைக்கப்படும் மிகப் பிரதான கொள்கையான தமது பன்னிரெண்டு இமாம்களும் மறதி, தவறு மற்றும் பாவங்கள் அனைத்திலிருந்தும் முற்றிலும் பாதுகாக்கப்பட்டவர்கள் என்ற கொள்கையும் முற்றிலும் வழிகேடான கொள்கையாகும் என்பதையும் இம்மாநாடு தெளிவுபடுத்த விரும்புகின்றது.

ஸுன்னா இஸ்லாத்தின் இரண்டாவது பெரும் மூலாதாரமாகும். அது அல்குர்ஆனுக்கு விளக்கவுரையாகவும் விளங்குகின்றது. இந்த வகையில் அல்குர்ஆன் மாத்திரமே இஸ்லாத்தின் சட்ட மூலாதாரம், ஸுன்னா ஒரு சட்ட மூலாதாரமல்ல என்ற வாதம் வழிகேடானதும் அஹ்லுஸ் ஸுன்னா வல்ஜமாஅத்தின் கொள்கைக்கு முற்றிலும் முரணானதுமாகும் என்பதை இம்மாநாடு விளக்க விரும்புகின்றது.

ஸஹாபாக்கள் என்போர் ஈமான் கொண்ட நிலையில் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களை சந்தித்து அதே நிலையில் மரணித்தவர்களாவர். ஸஹாபாக்கள் அனைவரும் நேர்மையானவர்கள். இஸ்லாத்தின் எழுச்சிக்காக அர்ப்பணத்துடன் போராடியவர்கள் 'தியாகங்கள் செய்தவர்கள்' அத்தகைய நபித் தோழர்களை குறை சொல்வது, விமர்சிப்பது அல்லது தூற்றுவது குர்ஆனையும் ஸுன்னாவையும் குறை சொல்வதாகவே அமையும் என்பதையும் ஸஹாபாக்களை நேசிப்பது ஈமானின் தெளிவான அடையாளங்களில் ஒன்றாகும் என்பதையும் இம்மாநாடு பகிரங்கப்படுத்துகின்றது.

சஹாபாக்களை நிராகரிப்பது நயவஞ்சகத்தின் அடையாளமாகும் என்பதையும் குறிப்பாக, அபூபக்ர் (ரழியல்லாஹு அன்ஹு), உமர் (ரழியல்லாஹு அன்ஹு), உஸ்மான் (ரழியல்லாஹு அன்ஹு), அலி (ரழியல்லாஹு அன்ஹு) ஆகிய நால்வரும் முறையே ஏனைய அனைத்து ஸஹாபாக்களை விடவும் உயர்ந்தவர்கள் என்பதையும் அந்த முறையிலேயே இஸ்லாமிய கிலாபத் அமைந்தது என்பதையும் நம்புவது அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஅத்தின் அடிப்படையான அகீதா சார்ந்த அம்சமாகும் என்ற உண்மையை இந்த மாநாடு தெளிவுபடுத்துகின்றது.

மேலும், தம்மை ஷீஆக்கள் என அடையாளப்படுத்திக் கொள்ளும் பிரிவினர் ஸஹாபாக்கள் மீது, குறிப்பாக அபூபக்ர் (ரழியல்லாஹு அன்ஹு), உமர் (ரழியல்லாஹு அன்ஹு), உஸ்மான் (ரழியல்லாஹு அன்ஹு) உட்பட அபூ ஹுரைரா (ரழியல்லாஹு அன்ஹு), அன்னை ஆஇஷா (ரழியல்லாஹு அன்ஹா) முதலானோர் மீது முன்வைக்கும் அனைத்து விமர்சனங்களும் வீண் அபாண்டங்களும் கட்டுக் கதைகளுமாகும் என்றும் இவற்றை நம்புவது தூய இஸ்லாமிய அகீதாவுக்கு மாசு கற்பிக்கக் கூடியது என்பதையும் இந்த மாநாடு எடுத்துரைக்கின்றது.

உலகில் வாழும் ஷீஆக்களுடைய நம்பிக்கைகளான இமாமத், கிலாபத், இஸ்மத், தகிய்யா சார்ந்த நம்பிக்கைகள் அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஅத்தின் நம்பிக்கைக்கு முரணானவை என்பதையும் அல்குர்ஆன், ஸுன்னாவின் ஒளியில் நிராகரிக்கப்பட வேண்டும் என்பதையும் இந்த மாநாடு பகிரங்கப்படுத்த விரும்புகின்றது.

இலங்கை முஸ்லிம் சமூகம் அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஅத் சார்ந்த சமூகமாகும். இந்த வகையில் அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஅத்தின் தூய அகீதாவை தொடர்ந்தும் பேணிப் பாதுகாக்கின்ற கடப்பாடு உலமாக்களுக்கும் புத்திஜீவிகளுக்கும் துறைசார்ந்த நிபுணர்களுக்கும் உண்டு என்பதை இந்த மாநாடு தெளிவாக வலியுறுத்த விரும்புகின்றது.

அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஅத்தைச் சேர்ந்தவர்களுக்கு மத்தியில் சில அபிப்பிராய பேதங்கள், கருத்து வேறுபாடுகள் நிலவிய போதிலும் அவர்கள் தமக்கு மத்தியில் வேற்றுமையில் ஒற்றுமை கண்டு, முரண்பாட்டில் உடன்பாடு காண வேண்டும் என்பதையும் இம்மாநாடு வலியுறுத்திச் சொல்ல விரும்புகின்றது.

எமது நாடு ஒரு பல்லின மக்கள் வாழ்கின்ற ஒரு நாடு என்ற வகையில் மத ரீதியான, இன ரீதியான பாகுபாடுகள் இருந்தபோதிலும் மனிதர்கள் என்ற வகையில் அனைவருடனும் ஐக்கியமாகவும் நல்லிணக்கத்தோடும் வாழ வேண்டுமென்பதை இம்மாநாடு வலியுறுத்துகின்றது.

மாற்றுக் கருத்துடையோருடன் நாம் முரண்பட்டபோதிலும் அவர்களுடன் மிகவும் பண்பாடாகவும் அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஅத் அகீதாவுக்கு முரணான சிந்தனைப் பிரிவுகளை நாம் நிராகரித்த போதிலும் அவர்களுக்கு அறிவூட்டி, தெளிவான தூய இஸ்லாமிய சிந்தனையை அவர்களுக்கு வழங்குகின்ற கடப்பாடு எமக்கிருக்கின்றது என்பதையும் கலந்துரையாடலுக் கூடாகவும் தேவை ஏற்படின் விவாதங்களுக் கூடாகவும் உண்மையை தரிசிப்பதற்கான வாய்ப்பை வழிகெட்ட சிந்தனைகளைக் கொண்டவர்களுக்கு வழங்குகின்ற தார்மீகக் கடப்பாடு நமக்கு உண்டு என்பதையும் இந்த மாநாடு பிரகடனம் செய்கின்றது.

மேற்குறிப்பிட்ட விடயங்களில் தெரிந்தோ; தெரியாமலோ அஹ்லுஸ் ஸுன்னாவல் ஜமாஅத்தினரின் கொள்கைக்கு முரண்பட்டிருக்கும் அனைத்துப் பிரிவினரிடமும் தனி நபர்களிடமும் வழிகெட்ட தமது அனைத்துக் கொள்கைகளிலிருந்தும் சுய விருப்பத்துடன் தவ்பா செய்து அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஅத்துடன் இணைந்து விமோசனம் அடைந்து கொள்ளுமாறும் இந்த மாநாடு வேண்டிக் கொள்கின்றது.

இலங்கை வாழ் அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஅத்தைச் சேர்ந்த முஸ்லிம்கள் வழிகெட்ட சிந்தனைப் பிரிவுகள் விடயத்தில் விழிப்பாகவும் எச்சரிக்கையாகவும் நடந்து கொள்ள வேண்டும் என்பதையும் அத்தகைய சிந்தனையுடையவர்கள் தங்களை அணுகும்போது உலமாக்களை அணுகி அந்த வழிகெட்ட சிந்தனைகள் தொடர்பான தெளிவைப் பெற்று தமது அகீதாவைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டுமெனவும் இந்த மாநாடு இலங்கைவாழ் முஸ்லிம்களைக் கேட்டுக் கொள்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மஹிந்தவின் மீள்வருகை நல்லதுக்கல்ல



எம்.எச்.எம். ஹஸன்

கழுத்தைப் பிடி, முடியாவிட்டால் காலைப் பிடி என்று தமிழில் ஒரு பழமொழி உண்டு. மைத்திரிபால சிறிசேன ஒரு நோஞ்சான் மனிதர் என்று நினைத்த மஹிந்த பலாத்காரமாக பிரதமர் வேட்பாளர் பதவியை அடைய அவரது கழுத்தைப் பிடித்து உலுக்கி தன் அடியாட்களை விட்டு அனைத்தையும் செய்து பார்த்தார். மக்கள் பெற்ற வெற்றியை வீணாக்க மைத்திரி ஒரு போதும் விரும்பவில்லை. விகாரை, கோயில், மே தினம் என்று விமல் வீரவன்ச, வாசுதேவ, திணேஷ் என்ற மூவரின் முன்னெடுப்பில் நடந்த அட்டகாசங்கள் பலன் அளிக்காது போகவே காலைப் பிடித்தாவது பிரதமர் பதவி பெறும் நோக்கில் மைத்திரிபால சிறிசேன மஹிந்த சந்திப்பு இடம்பெற்றது. அதிலும் மைத்திரி தளராத உறுதியுடன் காணப்பட்ட, மஹிந்த இப்போது வேறு வழியில் இறங்கியுள்ளார். சாதாரண ஒரு வேட்பாளராக மஹிந்த தேர்தலில் களமிறங்கி ஐக்கிய கூட்டமைப்புக்கு ஆட்சி அமைக்கும் அழைப்பு விடுக்கப்படும்போது கட்சியின் பாராளுமன்ற அங்கத்தவர்களைக் கூட்டி மஹிந்தவின் பெயரை பிரதமராக முன்மொழிவதன் மூலம் நோக்கத்தை நிறைவேற்றும் முடிவுக்கு வந்திருப்பதாக அரசியல் வட்டாரங்களில் செய்திகள் வந்துள்ளன. இப்போது அவரும் அவரது ஆதரவாளர்களும் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளைப் பார்க்கும்போதும், அரசாங்கத்தை மக்களிடையே அதிருப்திக்குள்ளாக்கி நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு இந்த அரசாங்கம் பங்கம் விளைவிப்பதாகக் காட்டும் முயற்சிகளை நோக்கும்போதும் அவர்கள் எதற்காகப் பாடுபடுகின்றனர் என்பது தெளிவு.

வடக்கிலும் தெற்கிலும் எத்தனையோ பெண்கள், சிறுமிகள் பிரதேச அரசியல் வாதிகளினால் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு அதற்காக விழாவெடுத்துக் கொண்டாடிய போதெல்லாம் ஈனக் குரல் விடுக்காத மஹிந்த இப்போது புங்குடுதீவின் வித்தியா விடயத்தில் நடந்து கொள்ளும் முறையைப் பார்த்தால் சிரிப்புதான் வருகிறது. மஹிந்த இருந்தால் தமிழர் இவ்வாறு துள்ளுவதற்கு இடமளிக்க மாட்டார் என்று தெற்கிலும், வித்யா விடயத்தை அரசியலாக்கி இலாபம் அடைய வடக்கிலும் முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. யுவதியை வல்லுறவுக்கு உபடுத்தியவர்கள் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டு விசாரணைகள் நடைபெறும் போது எதற்காக இத்தனை ஆக்ரோஷமான ஆர்ப்பாட்டங்கள் என்பது புரியாத புதிராகத்தானுள்ளது. அரசாங்கத்தின் ஆற்றலைக் குறைகாணும் ஓர் உத்தியாக இது பயன்படுத்தப்படுகிறது என்றே பலரும் கருதுகின்றனர். புங்குடுதீவு என்பது இப்போதும் மஹிந்தவின் ஆதரவாளரான டக்ளஸ் தேவானந்தாவின் கட்சியின் கட்டுப்பாட்டில் இருப்பதும் இங்கு சுட்டிக் காட்டப்பட்டுகின்றது. வித்யாவின் கொலை தொடர்பில் மஹிந்த வெளியிட்ட கருத்துகளுக்கு அவர் பெண்கள் சமூகத்திடம் மன்னிப்புக் கோர வேண்டும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறியிருந்தார்.

நாட்டு மக்களின் வாக்குரிமையினால் தூக்கி எறியப்பட்ட மஹிந்த மீண்டும் பின் வாசலினால் சுதந்திரக் கட்சியினுள் நுழைந்து தனது கனவை நனவாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார். இந்த அளவுக்கு அவர் முயற்சிப்பது எதற்காக என்பது பலருக்கு வியப்பாகவும் உள்ளது. விமல், திணேஷ், வாசு போன்றோர் அடங்கிய குழுவினர் பதவியை தக்க வைத்துக் கொள்ள மஹிந்தவின் சால்வையில் தொங்குகின்றனர். நிறைவற்று அதிகார ஜனாதிபதி பதவியில் இரு தடவைகள் இருந்துவிட்டு சாதாரண ஒரு பாராளுமன்ற உறுப்பினராக நுழைவதில் ஏன் விருப்பம் கொண்டுள்ளார் என்று பலரும் கேட்கும் முக்கிய கேள்வி இதுவாகும்.


யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்த விதம் பற்றிய சர்ச்சைகள் காணப்பட்டாலும் அது எப்படியாவது முடிவுக்கு கொண்டு வர வேண்டிய விடயமே. எந்த விலை கொடுத்தும் வெற்றி பெற்றிருக்க வேண்டிய விடயம் என்பது ஒரு பேருண்மை. ஆனால் அதனைத் தொடர்ந்து வந்த வேலைத் திட்டங்கள் ஜனநாயகத் தன்மை வாய்ந்ததாக இருக்கவில்லை. யுத்த வெற்றியை நிரந்தர முதலீடாக்கி சிங்கள மக்களின் தேசிய வாதத்தைத் தூண்டி எப்போதும் நிரந்தர ஆதரவை சூறையாடும் ஒன்றாக யுத்த வெற்றி மாற்றப்பட்டது. ஊழலும் மோசடியும் நிறைந்த அரசாங்கத்தை மக்கள் எதிர்த்தபோது அதனை அடக்கவும் பிரபாகரனுக்கு எதிரான அதே யுத்த பலமே பிரயோகிக்கப்பட்டது. அரசியல் பலம் நாட்டின் சொத்துக்களை கொள்ளையடிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டது.

இத்தகைய ஆட்சி முறையின், அதிகாரத் தன்மைகள் உலகிற்குப் புதியவையல்ல. ஹிட்லரும் கூட இனப் படுகொலைகளை மேற்கொள்ள பொதுச் சித்தம் என்ற கருவியையே பயன்படுத்தினார். அண்மைக் காலமாக பல நாடுகள் மக்களின் ஜனநாயகத் தன்மையை வென்றெடுக்க சொந்த நாட்டு அரசாங்கங்களுக்கு எதிராக வீதியில் இறங்கிப் போராட வேண்டிய நிலை மக்களுக்கு ஏற்பட்டது. பலர் உயிரிழந்தார்கள். கோடிக் கணக்கிலே சொத்துக்கள் இழக்கப்பட்டன. ஆயினும் மக்களின் வாக்குச் சீட்டைக் கொண்டே சர்வாதிகாரத்தை முடக்க இலங்கை மக்கள் சக்தி பெற்றமை மிகப் பெரிய பேறாகும். இந்த வெற்றியின் பின்னணியில் இருந்தவர்கள் மரபு ரீதியான அரசியல் கட்சிகளை விட மக்கள் அமைப்புகளும் சிவில் அமைப்புகளுமாகும். இதன்படி அரபு வசந்தமும் இலங்கையின் அரசியல் மாற்றமும் சமப்படுகிறது எனலாம்.

அந்தவகையில், நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் பெற்ற வெற்றியின் வாக்களிப்புப் புள்ளி விபரங்களை விடக் கூடிய ஒரு பெறுமானம், ஒரு மகத்துவம் அதில் பொதிந்துள்ளது. இங்கு உண்மையில் நடைபெற்றது மஹிந்தவுக்குப் பதிலாக மைத்திரி ஜனாதிபதிக் கதிரையில் அமர்ந்தது மட்டுமல்ல, நாட்டின் ஜனநாயக அரசியல் வாய்ப்பு பல மடங்காக விரிவடைந்தது. எப்போதாவது வரும் தேர்தலில் புள்ளடியிடுவது என்பதற்கு அப்பால் ஒரு பாரிய மாற்றத்தை நம்மால் செய்ய முடியும் என்ற நம்பிக்கை சிவில் சமூகத்துக்கு ஏற்பட்டது. சட்டத்தை அரசியலின் காலில் போட்டு மிதிக்கும் நடைமுறைக்கு முழுக்குப் போடப்பட்டது.

எந்த நாட்டிலும் அரசியற் புரட்சியின் போது எதிர்ப் புரட்சிகள் வெடிப்பது இயல்புதான். புரட்சியின் பாதையை வெற்றிகரமாக அமைத்துக் கொள்வது என்பது எதிர்ப் புரட்சிக்காரர்களை தோல்வியடையச் செய்வதிலேயே தங்கியுள்ளது. அதிகாரத்தை மக்களின் விருப்பமாகக் காட்டி மக்களின் உரிமைகளை படிப்படியாகக் குறைத்து தனியொருவரின் மிதமிஞ்சிய அதிகாரத்தை உறுதிப்படுத்தும் போக்கை ஜனவரி 8 ஆம் திகதி மாற்றியமைத்தாலும் ராஜபக்ஷவும் அவரின் ஆதரவாளர்களும் அதனை ஏற்றுக் கொள்ளத் தயாரில்லை என்பதையே ராஜபக்ஷவின் மீள்வருகை முயற்சி காட்டுகிறது.

மக்கள் விரும்பிய மாற்றம் நடைபெறும் போது, தொடர்ந்தும் அந்த மாற்றம் முன்னெடுக்கப்படும் அறிகுறிகள் தென்படும்போது, தனது அதிகாரத்தைத் தானே விரும்பி குறைத்துக் கொள்ளும் அரிதான ஒரு மனிதர் நாட்டுக்குத் தலைமை தாங்கும்போது, அவரின் கொள்கைகளை முன்னெடுக்க அரசும் எதிர்க்கட்சியும் தயாராக இருக்கும்போது எதற்காக மஹிந்தவின் மீள் வருகை. யாருக்கு வேண்டும் அவரது மீள் வருகை. அவர் மீண்டு வந்து இந்த நாட்டு மக்களுக்கு புதிதாக என்ன சாதிக்கப் போகிறார்.



மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் கொண்ட பாராளுமன்றத்தையும் சர்வாதிகாரிக்கு நிகரான நிறைவேற்று அதிகாரத்தையும் கேள்வி கேட்க முடியாத, நெருங்க முடியாத இரண்டாம் மூன்றாம் தலைமைத்துவமற்ற தாம் விரும்பியதை சட்டமாக்கும் வாய்ப்பையும் கொண்டிருந்த நிலையில் 10 வருடங்களில் செய்யாத எந்த நல்ல மாற்றத்தை மஹிந்தவின் மீள்வருகை நிறைவேற்றப் போகிறது. தனது கட்சியின் செயலாளரிடமே மோசமாக தோல்வியடைந்த பின்னும் விழுந்தும் மீசையில் மண் ஒட்டாத கணக்கில் மீண்டும் வர எத்தனிப்பது எதற்காக என்பதை மக்கள் நன்றாக புரிந்து கொள்ள வேண்டும். புதிய அரசாங்கத்தில் நிலவும் ஊடகச் சுதந்திரத்தைப் பயன்படுத்தி பலாத்காரம், வெள்ளை வான் கலாசாரம், அரச பயங்கரவாதமற்ற நிலைமையை சாதகமாகப் பயன்படுத்தி, மக்களை மீண்டும் திசை திருப்பி, மக்களின் ஜனநாயகத்தை மீண்டும் பறிக்கவே அவர் வருகின்றார் என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும்.

இன்று யாழ்ப்பாணத்தில் பொலிஸுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்தது எதனால்? அரசாங்கத்தின் பலவீனத்தால் இல்லை. ஜனநாயகத்தின் உரிமைகளை முப்பது வருடங்களின் பின்னர் இப்போதுதான் முதல் முறையாக அம் மக்கள் அனுபவிக்கிறார்கள். கோதபாயவுக்கு முன் பிணை கிடைக்கும் அளவுக்கு நீதித்துறை சுதந்திரமாக இருக்கும் நிலைமையை சாதகமாக்கி ஊழல் மோசடிகளில் இருந்த தனது சகாக்களை காப்பாற்றவே மஹிந்த மீண்டும் வருகிறார். இனங்களுக்கு இடையில் மோதலை உருவாக்கி, சிறுபான்மையை இரண்டாம் தர பிரஜைகளாக்கி பெரும்பான்மையின் மன்னராக மீண்டும் முடிசூட்டத்தான் மஹிந்த காய் நகர்த்துகிறார். சிறுபான்மையினரின் வாக்குகள் இன்றியே மஹிந்தவை பிரதமராக்கி ஆட்சியை அமைக்க முடியும் என்று உதய கம்மன்பில கூறியிருப்பது அவரின் சொந்தக் கருத்தல்ல. அது மஹிந்தவின் தோல்விப் பயத்தினால் துவண்டு போயுள்ள அவரின் கும்பலின் கருத்தும் கூட.

மஹிந்த களமிறங்கினால் சிறுபான்மை மக்கள் மட்டுமன்றி நியாயமாகச் சிந்திக்கும் எந்தப் பெரும்பான்மையினருமே வாக்களிக்க மாட்டார்கள் என்பதை நன்கறிந்த மஹிந்த ராஜபக்ஷ இனவாதிகளின் வாக்குகளை அதிகரித்துக் கொள்ளவே இதனை மீண்டும் மீண்டும் பகிரங்கப்படுத்துகிறார். இவர்களின் பின்னால் இருப்பவர்கள் பெரும் ஊழல் வாதிகள், முன்னைய அரசில் கோடிக் கணக்கு உழைத்தவர்கள். இப்போது சட்டதிட்டம் பிடித்து விடுமே என்ற பயத்தில் இருப்பவர்கள். இவர்கள் இதற்காகக் கையாளும் உத்தி மிகவும் குழந்தைத் தனமாகும். இலட்சக்கணக்கான மக்கள் வாழும் ஒரு நாட்டில் எதையாவது கொடுத்து சில ஆயிரம் பேரைத் திரட்டி கவர்ச்சி காட்டி பெரிய ஒரு கூட்டம் தங்களோடு இருப்பதாகக் காட்ட முயற்சிக்கிறார்கள். இந்த நாட்டின் புத்திஜீவிகள் இதற்கு ஏமாற மாட்டார்கள் என்று அவர்களுக்குத் தெரியவில்லை. யன்னல் கம்பிகளில் தொங்கிக் கொண்டு, ஐம்பது அறுபது அனுதாபிகளை வைத்துக் கொண்டு குரலைத் தாழ்த்திப் பேசுவது இன்னோர் உத்தி. அரசியல் பலத்தைப் பயன்படுத்த பேரம் பேசும் உபாயம் தோற்றுப் போகும்போது தேர்தலுக்கிடையில் இன்னும் எத்தனை சின்னத்தனமான உத்திகளைக் கையாள்வார்களோ தெரியாது. பொதுமக்கள் உஷாராகவும் விழிப்பாகவும் இருக்க வேண்டும். இரந்து பெற்றதை பருந்துகள் பறித்துப் போக இடமளிக்கக் கூடாது.

→ 17

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வித் துறையில் சாதனை படைத்தோருக்கான விருது

# Insight Academic Excellence Award - 2015





இலங்கை முஸ்லிம் சமூகத்தின் கல்வி விருத்திக்காக உழைத்து வரும் இன்சைட் நிறுவனத்தின் மற்றுமொரு முயற்சியாக, கல்வித் துறையில் சாதனை படைத்தவர்களை கௌரவிப்பதற்காக Insight Academic Excellence Award ஐ அது அறிமுகப்படுத்தியுள்ளது. அந்த வகையில், கடந்த 19.05.2015 மாலை கொழும்பு மியாமி வரவேற்பு மண்டபத்தில் நடைபெற்ற இன்சைட்டின் வருடாந்த மீளாய்வு நிகழ்வில் மூத்த முஸ்லிம் கல்விமான்களான பேராசிரியர் ரிஸ்வி ஷரிப், பேராசிரியர் எம்.ஏ. கரீம், பேராசிரியர் எஸ்.எச். ஹஸ்புல்லாஹ் ஆகியோர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

விருது பெறுபவர்களைத் தெரிவு செய்வதற்காக Insight Education Trust கலாநிதி எம்.ஏ.எம். சுக்ரி Ph.D. தலைமையில் கலாநிதி நாஜிம் Ph.D. ஜனாப் முஹம்மத் ஷாமில் MBA, FCA, AS-CMA ஆகியோரையும் உள்ளடக்கிய மூவர் கொண்ட குழுவை நியமித்தது. அக்குழு கல்வி, ஆராய்ச்சித் துறையில் புரிந்த சாதனைகள் மற்றும் அடைவுகள், நாட்டுக்கான பங்களிப்பு என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு மூவரைத் தெரிவு செய்தது.

இம்முயற்சி இளம் ஆய்வாளர்களும் எதிர்காலத்தில் சாதனைகள் புரியத் தூண்டுதலாக அமையுமென இன்சைட் நம்புவதாக அதன் டிரஸ்டிகளில் ஒருவரான கலாநிதி சுக்ரி தெரிவித்தார்.



கலாநிதி எம்.ஏ.எம். சுக்ரி அவர்களிடமிருந்து பேராசிரியர் ரிஸ்வி ஷரீப் விருதினைப் பெற்றுக் கொள்கிறார்.



முன்னாள் சட்டமா அதிபர் சிப்லி அஸீஸ் அவர்களிடமிருந்து பேராசிரியர் எம்.ஏ. கரீம் விருதினைப் பெற்றுக் கொள்கிறார்.



ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் சலீம் மர்சூப் அவர்களிடமிருந்து பேராசிரியர் எஸ்.எச். ஹஸ்புல்லா விருதினைப் பெற்றுக் கொள்கிறார்.

## பேராசிரியர் வித்யாஜோதி ரிஸ்வி ஷரீப்

MD, FRCP (Lond), FRACP, FCCP, FNASSL, FSLCGP, FIMA

பேராசிரியர் ஹுஸைன் ரிஸ்வி ஷரீப் நாடறிந்த வைத்திய நிபுணர். சிறுநீரகவியலில் சிறப்புத் தேர்ச்சி பெற்றவர். கொழும்பு பல்கலைக்கழகத்தில் பொது மருத்துவ பிரிவின் தலைவராகவும் மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் பணிப்பாளராகவும் கடமையாற்றியவர். அவர் 1986 ஆம் ஆண்டு இலங்கையில் முதலாவது மேற்கொள்ளப்பட்ட சிறுநீரக மாற்று சத்திர சிகிச்சையில் மருத்துவ குழுவுக்குத் தலைமைத்துவம் வழங்கினார். இத்துறையில் பட்டப்பின் படிப்பு செயற் திட்டத்தையும் உருவாக்கினார்.

மருத்துவத் துறையில் இருநூற்று ஐம்பதுக்கு மேற்பட்ட அவரது ஆய்வுக் கட்டுரைகள் இதுவரை வெளியாகியுள்ளன. அவர், Ceylon College of Physicians, Sri Lanka Association for Nephrology and Transplantation ஆகிய சங்கங்களின் தலைவராகவும் கடமையாற்றியுள்ளார்.

தற்போது அவர் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட பேராசிரியராக கடமையாற்றுகிறார். அவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் நீண்ட காலம் பணியாற்றிய பின் ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து அவ்வைத்தியசாலையின் நவீன கேட்போர் கூடம், வித்யாஜோதி பேராசிரியர் ரிஸ்வி ஷரீப் கேட்போர் கூடம் எனப் பெயரிடப்பட்டுள்ளது.

## வித்யாஜோதி பேராசிரியர் முஹம்மது அப்துல் கரீம் Ph.D. (London)

1971 ஆம் ஆண்டு பேராதனை பல்கலைக்கழகத்தில் பௌதிகவியலில் விசேட பட்டம் பெற்று தனது பட்டப் படிப்பை நிறைவு செய்த வித்யாஜோதி பேராசிரியர் முஹம்மது அப்துல் கரீம் அவர்கள், பௌதிகவியலில் உதவி விரிவுரையாளராக அதே பல்கலைக்கழகத்தில் இணைந்து கொண்டார். 1976 ஆம் ஆண்டு லண்டன் பல்கலைக்கழகத்தில் கலாநிதி பட்டம் பெற்ற அவர், பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பௌதிகவியல் சிரேஷ்ட விரிவுரையாளராக மீண்டும் இணைந்து கொண்டார். 2011 ஆம் ஆண்டு ஓய்வு பெறும்போது அவர் பேராதனை பல்கலைக்கழக பௌதிகவியல் பிரிவின் தலைமைப் பொறுப்பில் இருந்தார்.

1988 ஆம் ஆண்டு அவருக்கு சுவீடன் நாட்டின் உப்ஸலா (Uppsala) பல்கலைக்கழகத்தில் பௌதிக விஞ்ஞான சர்வதேச நிகழ்ச்சித் திட்டத்தில் (International Programme in the Physical Science - IPPS) பங்குபற்றும் வாய்ப்புக் கிடைத்தது. 1984 ஆம் ஆண்டு சுவீடனில் இருந்து திரும்பிய அவர், பேராதனை பல்கலைக்கழகத்தில் பௌதிகவியல் துறையில் திடநிலை ஆய்வுகூடம் (Solid State Research Laboratory) ஒன்றை ஆரம்பித்து அபிவிருத்தி செய்தார். IPPS இன் தொடர்ச்சியான உதவிகளுடன் 2012 ஆம் ஆண்டு வரை சுமார் 26 ஆண்டுகள் ரூபா 100 மில்லியன் திடநிலை ஆய்வு நடவடிக்கைகளுக்கு பங்களிப்புக்கள் வழங்கப்பட்டன.

பேராசிரியர் கரீம் பல்கலைக்கழக நிருவாகத்திலும் பல பொறுப்புக்களை வகித்துள்ளார். பௌதிகவியல் பகுதித் தலைவராகவும், பல சந்தர்ப்பங்களில் விஞ்ஞான பீட பதில் பீடாதிபதியாகவும் கடமையாற்றிய அவர் 1996 ஆம் ஆண்டு விஞ்ஞான பட்டப்பின் படிப்புக்கான நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது முதல் 2008 வரை அதன் நிருவாகக்குழு உறுப்பினராகவும் பௌதிகவியல் கற்கைக் குழுத் தலைவராகவும் பணி புரிந்தார்.

பேராசிரியர் கரீம் அவரின் ஆய்வுகளுக்காக 1998 ஆம் ஆண்டு வித்தியாஜோதி மற்றும் 2005 ஆம் ஆண்டு தேசபந்து ஆகிய தேசிய விருதுகளால் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

பேராசிரியர் கரீம் தனது 40 வருட பல்கலைக்கழக சேவைகளிலிருந்து 2011 ஆம் ஆண்டு செப்டெம்பர் 30 ஆம் திகதி ஓய்வு பெற்றதன் பின்னர், மலேசியாவில் மலாயா பல்கலைக்கழக வருகைதரு பேராசிரியராக தனது பணிகளைத் தொடருகின்றார். அவரது 200 இற்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் இதுவரை பிரசுரமாகியுள்ளன.

## பேராசிரியர் சாஹுல் ஹமீத் ஹஸ்புல்லாஹ் M.A. (Canada) Ph.D. (Canada)

பேராசிரியர் ஹஸ்புல்லாஹ் இலங்கையில் மன்னார் மாவட்டத்தை பிறப்பிடமாகக் கொண்டவர். பேராதனை பல்கலைக்கழகத்தில் புவியியல் துறையில் பேராசிரியராகக் கடமையாற்றுகிறார். அவர் தனது கலைமாணிப் பட்டத்தை பேராதனை பல்கலைக்கழகத்திலும் முதுமாணி மற்றும் கலாநிதிப் பட்டங்களை கனடாவிலுள்ள பிரிட்டிஷ் கொலம்பியா பல்கலைக்கழகத்திலும் பெற்றுக் கொண்டார்.

பேராசிரியர் ஹஸ்புல்லாஹ் அவர்கள் தொகைப் புள்ளி விபரவியல் (Demography) வேலைவாய்ப்பு (Employment) மற்றும் இடப்பெயர்வு (Migration) முதலான அபிவிருத்தி சார்ந்த துறைகளில் கற்பிப்பதிலும் ஆய்வு செய்வதிலும் அத்துறைகள் சார்ந்த எழுத்துப் பணிகளிலும் கடந்த முப்பது வருடங்களாக முனைப்பாக ஈடுபட்டு வருபவர்.

பேராசிரியர் ஹஸ்புல்லாஹ் அவர்கள் அகதிகள், உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர், காணிப் பிரச்சினைகள், அதற்கான தீர்வுப் பொறிமுறைகள் முதலான விடயங்களில், குறிப்பாக இலங்கையை கவனத்திற் கொண்ட ஆய்வுகளில் விசேட ஈடுபாடு உடையவர்.

பேராசிரியர் ஹஸ்புல்லாஹ் அவர்கள் சுவிட்ஸர்லாந்தில் அமைந்துள்ள ஸியூரிச் பல்கலைக்கழகம், இங்கிலாந்திலுள்ள எடின்பரோ பல்கலைக்கழகம், நோர்வேயிலுள்ள தொழில்நுட்பத்துக்கான நோர்வே பல்கலைக்கழகம் உள்ளிட்ட சர்வதேச உயர் கல்வி நிறுவனங்கள் பலவற்றில் வருகைதரு விரிவுரையாளராகக் கடமையாற்றியுள்ளார்.

கடந்த வருடம் கனடாவிலுள்ள பிரிட்டிஷ் கொலம்பியா பல்கலைக்கழகம் பேராசிரியர் ஹஸ்புல்லாஹ் அவர்களை வருகைதரு பேராசிரியராகக் கடமையாற்றுமாறு அழைப்பு விடுத்துள்ளது. அத்துடன், பேராசிரியர் அவர்கள் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் கவுன்சில் அங்கத்தவராக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அண்மையில் நியமிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுத் தேர்தலுக்கான வியூகங்கள்

-மலைஞானி

பெருந்தோட்ட தொழிலாளர் தொடர்ந்தும் தோட்டங்களில் பணியாற்றி வருவது நல்லதா அல்லது தோட்டங்களை விட்டு வெளியேறி கிராம அல்லது நகர வாழ்க்கையில் ஈடுபடுவது எதிர்காலத்துக்கு உகந்ததாக இருக்குமா என்பதைத் தீர்மானிக்க வேண்டிய கால கட்டத்தில் வாழ்ந்து கொண்டிருப்பதாகவே கணிக்க முடிகிறது. எதிர்வரும் தேர்தலின் பின்னர் ஏற்படக் கூடிய மாற்றங்கள் தோட்டங்களில் எதிர்காலத்தைத் தீர்மானிக்க உதவலாம்.

கடந்த மார்ச் மாதம் பெருந்தோட்ட தொழில் சங்கங்களுக்கும் முதலாளிமார் சம்மேளனத்துக்கும் இடையிலான கூட்டு ஒப்பந்தம் காலாவதியாகி விட்டது. அடுத்த கூட்டு ஒப்பந்தத்துக்கான பேச்சுவார்த்தைகள் உத்தியோகபூர்வமாக இன்னும் ஆரம்பிக்கப்பட இல்லையாயினும் கருத்து பரிமாற்றங்கள் இடம்பெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன. இதில் இ.தொ.கா. வாய் தவறி நாங்கள் ஆயிரம் ரூபா சம்பள உயர்வை பெற்றுத் தருவோம் என்று சொல்லப்போக; இ.தொ.கா. வுக்கு எதிர்தரப்பாக இருக்கக் கூடியவர்கள், அப்படியானால் நாங்கள் விலகிக் கொள்கிறோம். தாராளமாக ஆயிரம் ரூபாவை தினச் சம்பளமாகப் பெற்றுக் கொடுங்கள்,



எங்களுக்கும் சந்தோஷம்தான் என்று சவால் விட ஆரம்பித்துள்ளனர். இதில் முன்னணியில் இருந்து இ.தொ.கா. வுக்கு கடுப்பேற்றுபவராக பழனி திகாம்பரம் விளங்குகிறார். ஆயிரம் ரூபாவை வாங்கித்தரா விட்டால் நாங்கள் வீதியில் இறங்கிப் போராடுவோம் என்கிறார் அமைச்சர் திகாம்பரம்.

எதிர்வரும் ஒக்டோபரில் ஜனாதிபதியின் கூற்றின் பிரகாரம் இலங்கையில் பொதுத் தேர்தல் நடத்தப் பட்டாக வேண்டும். சுதந்திரக் கட்சி இன்றைக்கும் பலம் பொருந்திய பௌத்த-சிங்கள மக்களின் ஆதரவு பெற்ற கட்சியாகத் திகழ்ந்தாலும் அது மைத்திரி அணி சுதந்திரக் கட்சியின் பிரதம வேட்பாளராக மஹிந்த ராஜபக்ஷவை அறிவித்து களத்தில் இறங்க வேண்டும் என்றும் ஜனாதிபதி மைத்திரியாக இருக்கும் அதே சமயம், முன்னாள் ஜனாதிபதி பிரதமராக பதவிக்கு வருவார் என்ற தோற்றப்பாட்டை மக்களிடையே பிரசாரம் செய்தால் கட்சி மிகப் பெரும் வெற்றியை பாராளுமன்றத் தேர்தலில் அடையும் என்றும் ராஜபக்ஷ அணியினர் சொல்கிறார்கள். ஹம்பாந்தோட்டை, இரத்தினபுரி அல்லது குருணாகலையில் மஹிந்த போட்டியிடக் கூடிய வாய்ப்பு இருப்பதாக வாசுதேவ நாணயக்கார சொல்கிறார்.

ராஜபக்ஷவை பிரதமராக முன்னிறுத்தக் கூடாது என்பது மட்டுமல்ல, அவரை சுதந்திரக் கட்சி வேட்பாளராகவே சேர்த்துக் கொள்ளக் கூடாது என்பது ராஜித, அர்ஜுன ரணதுங்க மற்றும் பெரும்பாலான முன்னணி ஸ்ரீ.சு.க. பிரமுகர்களின் கருத்தாக உள்ளது. மக்களால் நிராகரிக்கப்பட்ட ஊழல் ஆட்சியை நடத்தியவரை சேர்த்துக் கொண்டு நல்லாட்சி அமைப்போம் என்று மக்களிடம் சென்று வாக்கு சேகரிக்க முனைவது கேலிக் கூத்தாகவே மக்களால் பார்க்கப்படும் என்பது இவர்களின் வாதம்.

தன்னை தலை நிமிர விடாமல் வைத்திருந்த ஒருவரை, அரசியல் நெளிவு சுளிவுகளைக் கற்றறிந்த ஒருவரை தனக்குக் கீழ் அமைச்சரவைக்குப் பொறுப்பான பிரதமர் பதவியில் மைத்திரிபால சிறிசேன வைத்திருக்க விரும்புவார் என்பதை கற்பனை செய்தும் பார்க்க முடியாது.

தேசிய அரசியலின் பெரும் போக்கு இப்படியிருக்க இ.தொ.கா. வை வீழ்த்துவதற்காக மிகப் பெரிய கூட்டணியை உருவாக்கும் வேலை நடந்து வருவதைக் காண முடிகிறது. வடக்கில் வித்தியா விவகாரம் என்றால், மலையகத்தில் சம்பள உயர்வு விவகாரம். கம்பனிகள் நஷ்டத்தில் இயங்கிக் கொண்டிருப்பதாகவும் சம்பள உயர்வு வழங்குவது சாத்தியமில்லை என்றும் முதலாளிமார் சம்மேளனம் தெரிவித்து வருகிறது. சம்பள பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கான சூழல் இப்போது இல்லை. எனவே, இப்பேச்சுவார்த்தையை தள்ளி வைக்க வேண்டும் என்பது கம்பனித் தரப்பினரின் கோரிக்கை. இச்சூழலில் தான் ஆயிரம் ரூபா சம்பளம் என்ற கோஷத்தை முன்வைத்து விழி பிதுங்கிக் கொண்டிருக்கிறது. இ.தெ.கா. வின் ஆயிரம் ரூபா சம்பள உயர்வை கம்பனிகள் ஒத்துக் கொள்ளும் என்று எதிர்பார்க்க முடியாது. ஒரு ரூபா சம்பள உயர்வு என்பது தொழிலுக்கு ஒரு ரூபா மட்டுமே என்றாலும் எமக்கு அது மில்லியன் ரூபா செலவை ஏற்படுத்தும் என்று ஒரு முறை முன்னாள் முதலாளிமார் சம்மேளன பொதுச் செயலாளர் தெரிவித்திருந்ததை இங்கே ஞாபகப்படுத்துவது பொருத்தமாக இருக்கும்.

எனினும், இ.தொ.கா. எதிர்வரவுள்ள தேர்தலில் படுதோல்வியை சந்திக்கும் என எவரும் கருதிவிடக் கூடாது. இ.தொ.கா. வின் கட்டமைப்பு அப்படியேதான் உறுதியாக மக்கள் மத்தியில் வேரூன்றியபடி இருக்கிறது. வாழையடி வாழை பழக்கத்துக்கு ஓர் உதாரணமாக 'எலிபண்ட் ஹவுஸ் சோடா போல' என்பார்கள். மலையக பெருந்தோட்டங்களில் இ.தொ.கா. எலிபண்ட் ஹவுஸ் சோடா மாதிரித்தான். ஆனால் அதன் பலம் அதிகரித்துச் செல்வதற்கு பதிலாக படிப்படியாக வீழ்ச்சியை சந்தித்து வருகிறது என்பதும் உண்மையே. தாயும் தந்தையும் அசைக்க முடியாத இ.தொ.கா. என்றால், படித்து வேலை தேடிக் கொண்டிருக்கும் அல்லது தேடிக் கொண்ட தனயனிடம் அந்தப் பற்றை எதிர்பார்க்க முடியாது. இ.தொ.கா. வின் போக்கு தலைமையிடம் காணப்படும் அராஜக அல்லது நட்பற்ற போக்கை இளைஞர்கள் கேள்விப்பட்டிருக்கிறார்கள். தலைவர்கள் தங்கள் வழிகளைப் பார்த்துக் கொள்வதையும் ஆளுங்கட்சிக்கு எடுத்ததெற்கெல்லாம் தலையாட்டுவதையும் மக்களின் முக்கிய பிரச்சினைகளில் அசமந்தப் போக்கை கடைப்பிடிப்பதையும் இளைஞர்கள் கேள்விக்கு உட்படுத்துகிறார்கள்.

ஆயிரம் ரூபா சம்பள உயர்வு என்று சொன்னதை இ.தொ.கா. வின் ஏமாற்றுக் கலாசாரத்துக்கு உதாரணமாக சுட்டிக் காட்டுகிறார்கள். நகரங்களுக்கு அல்லது கிராமங்களுக்கு அண்டிய தோட்டங்களில் வசிக்கும் இளைஞர்கள் இ.தொ.கா. வை விமர்சிப்பவர்களாக விளங்குகிறார்கள். அடுத்ததாக சங்கங்களில் அங்கத்துவம் பெறாத தோட்டத் தொழிலாளர்களின் எண்ணிக்கை வருடா வருடம் அதிகரித்து செல்வதும் சாதகமற்ற சமிக்ஞையாகவே சங்க அரசியல் செய்வோர் கொள்ள வேண்டும். சங்க அரசியல்வாதிகள் குறிப்பாக, இ.தொ.கா. தம்மை சரி செய்து கொள்ளாவிட்டால் சங்கம் சாராத இந்தத் தொழிலாளர் குடும்பங்கள் தேர்தல்களில் சங்க அரசியல்வாதிகளுக்கு வாக்களிக்காமல் தேசிய கட்சிகளுக்கு வாக்களிப்பதற்கான வாய்ப்புகளும் பிரகாசமாகவே உள்ளன.

எதிர்வரவுள்ள பொதுத் தேர்தலில் இ.தொ.கா. வை எதிர்த்து பல கட்சிகள் பெரும்பாலும் ஓரணியில் களமிறங்குவதற்கான சாத்தியம் அதிகம்.

➡ 16



# எளிமையால் உயர்ந்தவர்

மூலம்– அத்தய் சத்தய் (உண்மையிலும் உண்மை)
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மிகச் சாதாரண வாழ்க்கை நடத்தும் ஒரு விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர். அவரின் வாழ்க்கைச் சரிதத்திலிருந்து சில சுவையான அனுபவங்களை எங்கள் தேசம் வாசகர்களுடன் பகிர்ந்து கொள்வதே இத்தொடரின் நோக்கமாகும்.

## தும்புத்தடி அடி

மைத்திரியின் தந்தை ஒரு விவசாயி. அத்தோடு ஒரு கிராம சேவகராகவும் கடமையாற்றினார். மைத்திரி தந்தையுடன் வயல் வேலைகளில் ஈடுபடுவதால் அவருக்கு அவ்வேலைகள் மிகவும் பழக்கமாகவும் இருந்தது. அறுவடை செய்யும் காலங்களில் மைத்திரி தனது நண்பர்களுடன் சேர்ந்து வயல் நிலத்தில் பந்து விளையாடுவார். வயல் விதைக்கும் காலங்களில் அவர்களுக்கு விளையாடுவதற்கு இடமில்லை. அதற்கு மாற்று வழி ஒன்று தேடினார்.

கிராமத்தில் நண்பர்களுடன் சேர்ந்து லக்ஷ உயன எனும் ஊரில் காட்டுப் பிரதேசம் ஒன்றை துப்புரவு செய்து கரப்பந்து மைதானம் ஒன்றை உருவாக்கினார்.

மைத்திரி அன்றிலிருந்து சமூக சேவைகள் அதிகம் செய்பவராக திகழ்ந்தார். அவர் கரப்பந்தாட்டத்திற்கும் சிரமதானம் மற்றும் மத விடயங்களுக்காக Pregathi Praja எனும் ஒரு நலன்புரி நிறுவனத்தை கிராமத்தில் இருந்த இளைஞர்களுடன் சேர்ந்து அமைத்தார்.


பாடசாலையில் கழிக்கும் நேரம் தவிர மிகுதி நேரங்களை தனது நண்பர்களுடன் Pregathi Praja சங்கத்தின் மண்டபத்தில் கழிப்பார். ஒரு நாள் கரப்பந்தாட்டம் விளையாடிக் கொண்டிருக்கும்போது இளைஞர்களுக்கிடையில் கைகலப்பு ஒன்று ஏற்பட்டது. அந்த கைகலப்போடு அவர்கள் விளையாடும் கரப்பந்தாட்டமும் முடிவடைந்தது. அப்போது மைத்திரி பொலன்னறுவை ரோயல் கல்லூரியில் கல்வி கற்றுக் கொண்டிருந்தார். அவர் பாடசாலைக்கு சைக்கிளில் செல்வார்.

ஒரு நாள் காலையில் அவர் புத்தகங்களை எடுத்துக் கொண்டு பாடசாலை செல்லும்போது பெரும் விபத்தொன்றுக்கு முகம் கொடுத்தார். முன் தினம் விளையாடிக் கொண்டிருக்கும் போது சண்டை பிடித்த சில இளைஞர்கள், மைத்திரி பாடசாலை செல்லும் வரை எதுமல் பிட்டிய சந்தியில் காத்துக் கொண்டிருந்தனர்.

சண்டையின் காரணமாக மைத்திரியுடன் கோபம் கொண்டிருந்த அவரின் ஒரு நண்பர் அப்போது தும்புத்தடி மூலம் மைத்திரிக்கு வேகமாக அடித்தார். மைத்திரி சைக்கிளுடன் அதே இடத்தில் விழுந்தார். தும்புத்தடியால் தாராளமாக அடித்த நண்பர் அதிக நேரம் நிற்காமல் அவ்விடத்தை விட்டு சென்றுவிட்டார். மைத்திரியின் பாடசாலை சீருடையில் தூசி படிந்திருந்தது. எழுந்து நின்ற மைத்திரி சைக்கிளை எடுத்துக் கொண்டு பாடசாலைக்குச் சென்றார். தனக்கு அடித்த தனது நண்பர்களுடன் சண்டை பிடிக்காது மீண்டும் அவர்களுடன் சேர்ந்து மைதானத்துக்கு சென்று விளையாடினார்.

மைத்திரிக்கு தும்புத்தடியால் அடித்த நண்பர் இன்னும் இருக்கிறார். மைத்திரி யாரையும் பழிவாங்க மாட்டார். தனக்கு தும்புத்தடியால் அடித்த நண்பரின் மகளுக்கு தான் அமைச்சராக இருந்தபோது தொழில் ஒன்றை வழங்கி நல்லதொரு முன்மாதிரியை காட்டினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வட்டரக்க விஜித்த தேரர்

# “இந்த அரசாங்கத்திலும் எ… நியாயம் கிடைக்கவில்லை”

**கேள்வி: நீங்கள் இன்றுவரை பிரதேச சபை உறுப்பினராக இருக்கின்றீர்களா?**

பதில்: பிரதேச சபைக்கு நான் இடை இடையே சென்று வருவேன். நான் கடந்த பத்து வருடங்களாக மஹியங்கனை பிரதேச செயலாளர் அலுவலகத்தில் பௌத்த கலாசார உத்தியோகத்தராக கடமையாற்றினேன். பொதுபல சேனாவினால் ஏற்பட்ட பிரச்சினையின் காரணமாக நான் ஒழிந்து வாழ்ந்து கொண்டிருந்ததனால் எனது காரியாலயத்துக்கு செல்ல முடியாது போய்விட்டது. அதை நான் தந்தி மூலம் காரியாலயத்துக்கு அறிவித்தேன். நான் பத்து வருடங்கள் காரியாலயத்தில் கடமை புரிந்திருந்தாலும் கூட நான் தொழிலை கைவிட்டு விட்டுச் சென்றதாக கருதி பௌத்த விவகார ஆணையாளர் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்தார். இன்றைய அரசாங்கத்தினால் கூட எனது தொழில் பற்றி ஒரு நியாயம் வழங்கப்படவில்லை.

இந்த அரசாங்கத்தில் திரு. சரத் பொன்சேகா அவர்களுக்கும் வந்துரம்ப ஓ.ஐ.சி. அவர்களுக்கும் திருமதி. ஷிராணி பண்டாரநாயக்க அவர்களுக்கும் நியாயம் கிடைத்தது. என்றாலும், தேசிய ஒற்றுமைக்காக பல்வேறு தியாகங்களை செய்த எனக்கு இன்று வரை நியாயம் வழங்கப்படவில்லை.

**கேள்வி: உங்களுக்கும் பொதுபல சேனாவுக்கும் இடையில் ஏற்பட்ட மோதல் இன்னும் முடிவுக்கு வரவில்லையா?**

பதில்: என்னை அவர்கள் பல தடவைகள் பிரச்சினைக்கு உள்ளாக்கினார்கள். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் பொதுபல சேனா சர்வதேச உதவி பெற்று இயங்கியதாக குறிப்பிட்டார். நான் ஒரு சர்வதேச அமைப்புடன்தானா மோதிக் கொண்டிருந்தேன் என்பது எனக்கு இப்போதுதான் விளங்குகின்றது.

**கேள்வி: அடுத்து வரும் பொதுத் தேர்தலில் நீங்கள் போட்டியிடப் போகிறீர்களா?**

பதில்: கொழும்பில் தேர்தலில் போட்டியிடுமாறு பலர் என்னைக் கேட்டுள்ளனர். பொதுபல சேனாவும் தேர்தலில் போட்டியிடப் போவதாக கேள்விப் பட்டேன். அவர்கள் ஆரம்பத்திலே தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என்று கூறியிருந்தார்கள். அதனால் அவர்கள் சொல்வதெல்லாம் பொய்யென்று இப்போது விளங்குகிறது. அவர்களைப் போன்ற இனவாதிகளுக்கு பாராளுமன்றத்துக்கு வர இடம் வழங்கக் கூடாது. அவ்வாறு வந்தால் நான் நிச்சயமாக அவர்களுக்கு எதிராக போட்டி போட்டு அவர்களை தோற்கடிப்பேன். நான் கொழும்பில் தேர்தலில் போட்டியிட எதிர்பார்க்கிறேன்.

**கேள்வி: வில்பத்துவில் நடைபெற்றுள்ள சூழலை அழித்தல் பற்றி உங்களது கருத்தென்ன?**

பதில்: வில்பத்துவில் நடைபெற்ற சம்பவம் பற்றி நான் கவலைப்படுகிறேன். ஒரு வருடத்திற்கு முன்பு நான் அங்கு சென்றிருந்தபோது வில்பத்து விடயம் பற்றி அங்குள்ள அதிகாரிகளுடன் கலந்துரையாடினேன். அங்குள்ள முஸ்லிம்களுக்கு சட்ட ரீதியாகத்தான் காணிகள் வழங்கப்பட்டுள்ளன என்று மாவட்ட செயலாளர் கூறினார். இது பற்றி நாம் அரசுக்கு ஏசி பிரயோசனம் இல்லை. எனினும் அங்கிருக்கும் மக்களை நாம் குடியிருக்கச் செய்ய வேண்டும். தற்போது ஒரு குழுவினர் இந்த விடயத்தை வைத்து இனவாதத்தை கிளப்புகின்றனர். அரச மரத்தை நடுகின்றனர். அரச மரச் செடியில் பால் இருப்பதனால் யானைகள் அவற்றை வந்து உண்ணுகின்றன. அந்தக் குழுவினர் தேசிய ஒற்றுமைக்கு களங்கம் விளைவிக்கின்றனர். வில்பத்து பற்றி விபரங்கள் தேடித் திரியும் இவர்கள் நாட்டில் ஏனைய இடங்களில் சூழல் மாசடைதல் பற்றி ஏன் தேடாமல் இருக்கின்றார்கள்.

மாத்தளை பகுதியிலுள்ள நக்கல்ஸ் மலை அடிவாரத்தில் அரசியல்வாதி ஒருவர் ஏலம் பயிர் செய்கின்றார். மற்றுமோர் அமைச்சரின் சிஷ்யர் அனுராதபுரத்தில் பெறுமதி வாய்ந்த மரங்களை வெட்டி விற்றிருக்கிறார். ஓயா மடுவயில் பாரிய அளவில் சூழல் மாசடைவு ஏற்பட்டுள்ளது. ஏன் இதைப் பற்றி எவருமே பேசுவதில்லை. ஆனால் தற்போது ஒரு சிலர் இனவாதத்தை ஏற்படுத்தி தேர்தலில் வெற்றி பெற முயற்சிக்கின்றனர்.

இனங்களுக்கிடையில் ஒற்றுமையை ஏற்படுத்தாததன் காரணமாகத்தான் மஹிந்த ராஜபக்ஷ தேர்தலில் தோற்றார். என்றாலும், இன்னுமவர் இனவாதக் குழுக்களுடன்தான் சேர்ந்திருக்கிறார்.

**கேள்வி: பொதுபல சேனாவுக்கு எதிராக நீங்கள் ஏன் பொலிஸ்மா அதிபரிடம் முறைப்பாடு செய்தீர்கள்?**

பதில்: பொதுபல சேனாவில் உள்ள ஒரு குழுவினர் வில்பத்துவுக்குச் சென்று பாரிய அழிவை ஏற்படுத்தியிருக்கின்றனர். அவர்கள் இருபது சாராய போத்தல்களை காலி பண்ணியுள்ளனர். அந்த போத்தல்களை உடைத்ததனால் அங்கு எல்லா இடங்களிலும் கண்ணாடித் துண்டுகள் காணப்பட்டன. அவர்கள் காட்டுக்குள் கிரிக்கட்டும் விளையாடி இருக்கின்றார்கள். அவை எல்லாவற்றுக்கும் தேவையான சாட்சிகள் என்னிடம் உள்ளன. குறித்த வேளையில் நான் அந்த சாட்சிகளை முன்வைப்பேன். அவர்கள் செய்த அநியாயத்தைப் பற்றி முழு உலகமும் அறிந்து கொள்ள வேண்டும்.

**கேள்வி: சிறுபான்மை மக்களை பிரதிநிதித்துவப் படுத்தும் இரண்டு கோடுகள் அற்ற தேசியக் கொடி பற்றி கடந்த சில நாட்களாக கதைக்கப்பட்டு வருகின்றது. அது பற்றி உங்கள் கருத்து என்ன?**

பதில்: இதன் மூலம் அவர்கள் இந்த நாடு சிங்கள மக்களுக்கு மட்டுமே உரியது என்று காட்டப் பார்க்கிறார்கள். என்னைப் பொறுத்தவரையில் இந்தக் கொடியிலிருந்து சிங்கத்தையும் அகற்ற வேண்டும் என்றே கூற விரும்புகின்றேன். நாட்டிலுள்ள அனைத்து மக்களும் கோருகின்ற வண்ணம் எவ்வித வேறுபாடுமற்ற தேசிய கொடியொன்றை தயாரிக்கும் காலம் வந்துவிட்டது.

**கேள்வி: அந்த காலத்திலே பொதுபல சேனாவுக்கு அரச அங்கீகாரம் உள்ளது என்று குற்றம் சாட்டப்பட்டது அல்லவா?**

பதில்: கடந்த அரசாங்கம் பொதுபல சேனாவுக்கு தேவையான அனைத்து அங்கீகாரங்களையும் வழங்கிக் கொண்டிருந்தது. கடந்த இரண்டு வருடங்களாக நாட்டில் ஏற்பட்ட இன மோதல்களுக்கும் நாட்டு மக்களுக்கு மத்தியில் ஒற்றுமை இன்மைக்கும் முன்னாள் ஜனாதிபதியும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளருமே பொறுப்புக் கூற வேண்டும். நாட்டில் சிறுபான்மை மக்களுக்கு எதிராக நடத்தப்பட்ட அட்டூளியங்களுக்கு அவர்கள் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

**கேள்வி: தற்போதைய அரசினால் அமைக்கப்பட்ட நிதிமோசடி குற்றத் தடுப்புப் பிரிவினால் கடந்த அரசாங்கத்தில் உள்ள பல அமைச்சர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். எதிர்க்கட்சி, இது அரசாங்கத்தின் வேலையொன்று குற்றம் சாட்டுகிறது. இது பற்றி நீங்கள் என்ன கூறுகிறீர்கள்?**

பதில்: பௌத்த சமயத்தின் கூற்றுப்படி குற்றச்சாட்டு ஒன்று வந்தால் அதற்கு முகம் கொடுக்க வேண்டும். நாட்டின் சட்ட ஒழுங்குகளை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று பௌத்த சமயம் கூறுகிறது. மஹிந்த ராஜபக்ஷவின் குழுவினர் எவ்வளவு அழுதாலும் பிரயோசனம் இல்லை. விகாரைகளுக்கு எந்த நாளும் சென்றாலும் எந்தவித பிரயோசனமும் இல்லை. ஒவ்வொரு மாதமும் அவர்கள் போதிமாதவனின் போதனைகள் கேட்டும் அவற்றை நடைமுறை படுத்தாவிட்டால் பிரயோசனமில்லை.

> வில்பத்து பற்றி விபரங்கள் தேடித் திரியும் இவர்கள் நாட்டில் ஏனைய இடங்களில் சூழல் மாசடைதல் பற்றி ஏன் தேடாமல் இருக்கின்றார்கள். மாத்தளை பகுதியிலுள்ள நக்கல்ஸ் மலை அடிவாரத்தில் அரசியல்வாதி ஒருவர் ஏலம் பயிர் செய்கின்றார். மற்றுமோர் அமைச்சரின் சிஷ்யர் அனுராதபுரத்தில் பெறுமதி வாய்ந்த மரங்களை வெட்டி விற்றிருக்கிறார். ஓயா மடுவயில் பாரிய அளவில் சூழல் மாசடைவு ஏற்பட்டுள்ளது. ஏன் இதைப் பற்றி எவருமே பேசுவதில்லை.

நன்றி: லங்காதீப

நேர்காணல்: தரிந்து ஜயவர்தன

# நடைபாதை… நோய்க் க…

டாக்டர் ருவான் விஜயமுனி
MD. MPH. MSc Comm. Med
தலைமை சுகாதார உத்தியோகத்தர்
கொழும்பு மாநகர சபை
சுகாதாரத்துறை

நேர்காணல்: எம்.எம். பாஹிர்
தமிழில்: ஹஸன் இக்பால், யாழ்ப்பாணம்

*கேள்வி: மக்கள் தற்போது ஆரோக்கியமான உணவு தொடர்பில் முன்னைய காலங்களை விட அதிக கரிசனை கொள்கின்றனர் என நீங்கள் கருதுகின்றீர்களா?*

பதில்: இலங்கை நாட்டைப் பொறுத்தவரை, ஆண்களைப் போலவே பெண்களும் வெளியில் உழைத்தால்தான் குடும்ப வண்டியை இழுத்துச் செல்லக் கூடியதாக உள்ளது. இவ்வாறான சூழ்நிலையில் பெண்களுக்கு வேலைப் பளு அதிகரித்திருக்கின்றது. முன்னைய காலங்களைப் போல வீட்டில் இருந்தவாறு மூன்று வேளையும் உணவு சமைத்துப் பரிமாற முடிவதில்லை. ஆகவே, வேலைக்கு சென்று திரும்பும் வழியில் உணவகங்களிலோ அல்லது நடைபாதைக் கடைகளிலோ குடும்பத்துக்கான உணவுப் பொட்டலங்களை வாங்கிச் செல்வதை வாடிக்…

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தை உணவகங்கள் உணவுக்குப் பதிலாக காவிகளையே விற்பனை செய்கின்றன

கையாக்கிக் கொண்டுள்ளனர். துரித உணவுக் கலாசாரம் தொற்றுநோய் போல பரவியுள்ளது. வேலைப் பளு குறைந்த பெண்களும் கூட இதற்கு அடிமையாகியுள்ளனர். உண்மையில் அதிகரித்துச் செல்லும் இந்த நடைமுறையை ஒரு நாகரிக செயலாக கருதுகின்றனர்.


உணவகங்களைப் பொறுத்தவரை, பெட்டிக்கடை தொடக்கம் நட்சத்திர ஹோட்டல்கள் என பல்கிப் பெருகியுள்ள அதே வேளை, அவற்றிடமிருந்து பெற்ற தரங்கள், சுகாதார நிலைமை, தூய்மை என்பன வேறுபடுகின்றன. இலங்கை நாட்டில் காணப்படும் நடைபாதை உணவகங்கள் பெரும்பாலும் உணவுக்குப் பதிலாக நோய்க் காவிகளையே விற்பனை செய்கின்றன என்பது கசப்பானதோர் உண்மை.

நான் ஒரு வைத்தியன் என்ற வகையில் என்னிடம் வயிற்றுவலி, வயிற்றோட்டம், வாந்திபேதி என பல வகை நோயாளர்கள் வருகின்றனர். அவர்களின் தரவுகளின் அடிப்படையில் நான் மேற்கொண்ட ஆய்வு சற்றும் எதிர்பாராத முடிவுக்கு என்னை இட்டுச் சென்றது. அது என்னவெனில், இவ்வகையான நோயாளர்கள் வெளி உணவகங்களில் உணவருந்தும் பழக்கம் அற்றவர்கள். மாறாக, வீட்டில் சமைத்து உண்பவர்களாகவே காணப்பட்டனர். அவர்களிடம் மேலதிக தரவுகளைப் பெற்றுக் கொண்ட பின்பே உண்மை எதுவென்று பளிச்சிட்டது. அவர்கள் அனைவரும் சமைத்த உணவுகளை நீண்டகாலம் குளிரூட்டியில் வைத்து சாப்பிடக் கூடியவர்களாக இருந்தமை தெரிய வந்தது.

உணவு பதப்படுத்தல் கலாசாரத்தில் குளிரூட்டியின் வகிபாகம் அளப்பரியதொன்று என்பது மறுப்பதற்கில்லை. குளிரூட்டிப் பாவனையால் எந்தளவுக்கு சாதகங்கள் உண்டோ அதேபோல முறையற்ற பாவனையால் பல்வேறு பாதகங்களும் உண்டு. தொகையாக உணவுப் பொருட்களை கொள்வனவு செய்து குளிரூட்டியில் சேமித்து தேவைக்கேற்ப பயன்படுத்துவதால் கொள்வனவிற்கான நேரச் சிக்கனம் பேணப்படுகிறது. உட்கொண்ட உணவின் மீதியை குப்பைத் தொட்டியில் எறியாமல் குளிரூட்டியில் வைத்து மீள் பாவனைக்கு உட்படுத்த முடிவதால் உணவு விரயமாதல் தடுக்கப்படுகிறது.

வீட்டுப் பாவனைக்கான குளிரூட்டிகளில் சமைத்த உணவுகளையும் சமைக்காத உணவுகளையும் ஒன்றாக வைப்பதனால் ஏற்படும் இரசாயன மாற்றங்கள் பல்வேறு நோய்களுக்கு இட்டுச் செல்கின்றன. சமைக்காத மாமிசங்களிலிருந்து வடியும் இரத்தம் சமைத்த உணவுகளில் படுவதால் கிருமித்தொற்று ஏற்பட வாய்ப்புண்டு. முட்டைகளை குளிரூட்டியில் சேமிக்கும்போது அவற்றின் வெளிமேற் பரப்பில் ஒட்டியிருக்கும் கோழியின் மலக்கழிவு வேறு உணவுகளுக்கு பரவும் வாய்ப்பு அதிகம். மேலும், குடல் கழிவுகள் நோய்க்காவிகளின் தங்குமிடம் என்று கூட கூறலாம். இதுவே உணவு நஞ்சாவதற்கு காரணமாகின்றது. இறுதியில் தைபொய்ட் காய்ச்சல், வயிற்றோட்டம் என்பவற்றுக்கு வழிவகுக்கும். இந்நிலைமை ஏற்படாவண்ணம் சமைத்த, சமைக்காத உணவுகளுக்கென்று வெவ்வேறு வகை குளிரூட்டிகளை பயன்படுத்துமாறு உணவகங்களுக்கு சுகாதாரத்துறை உத்தியோகத்தர்கள் கண்டிப்பான உத்தரவுகளை பிறப்பித்துள்ளனர்.

உணவுப் பொருட்களை கையாள்பவர்களின் தனிநபர் சுகாதார நிலைமை கவனிக்கத்தக்க தொன்றாகும். உணவகங்களைப் பொறுத்தவரை உணவுப் பொருட்களை நறுக்குபவர், சமைப்பவர், நுகர்வோருக்கு கொண்டு செல்பவர் ஆகியோரின் உடல், உடை என்பன மிகவும் தூய்மை நிலையில் பேணப்படல் வேண்டும். சமைக்கும்போது தும்முவதால் அல்லது தவறுதலாக விரலை நறுக்கிக் கொள்வதால் உணவுப் பொருட்களில் கிருமித்தொற்று பரவி நுகர்வோரைச் சென்றடைய வாய்ப்புண்டு. இது பணம் செலவு செய்து உணவகம் நாடிவரும் நுகர்வோருக்குச் செய்யும் பாரியதோர் அநியாயம் என்ற வகையில் உணவுப் பொருட்களை கையாள்பவர்களின் தனிநபர் சுகாதார நிலைமையை உயர் தரத்தில் பேணுவது உணவகத்தின் கடப்பாடாகும். மாத்திரமின்றி, வீடுகளில் சமைக்கும் தனிநபர்களும் வேலையாட்களும் தம்மை தூய்மையாக வைத்துக் கொள்வது அவசியமாகின்றது. சமையலுக்கு முன்னர் தேங்கி நிற்கும் நீரில் கைகளை திரும்பத் திரும்ப கழுவாது, ஓடும் நீரில் சவர்க்காரமிட்டு நன்கு தேய்த்துக் கழுவுவது அவசியம். பெரும்பாலான உணவகங்களில் சமையலின்போது ஒரே பாத்திரத்திலேயே மீண்டும் மீண்டும் கைகளை கழுவும் நடைமுறை முற்றாகத் தவிர்க்கப்படல் வேண்டும்.



டாக்டர் ருவான் விஜயமுனி

கேள்வி: சுகாதாரமற்ற உணவு தொடர்பில் இலங்கை மக்களிடத்தில் போதியளவு விழிப்புணர்வு காணப்படுகிறதா? அது தொடர்பில் சுகாதார அபிவிருத்தி நிறுவனம் முன்னெடுக்கும் செயற்றிட்டங்கள் எவை?

பதில்: எமது மக்களைப் பொறுத்தவரை சுகாதாரமற்ற உணவு, அவை ஏற்படுத்தும் தீங்குகள் பற்றி நன்கறிந்து வைத்திருப்பினும் பொடுபோக்குத் தன்மை காரணமாக அவற்றுக்கு முக்கியதுவமளிக்கத் தவறுகின்றனர். வெகு சிலரே சுகாதாரமான உணவுகள் தொடர்பில் கண்ணுங்கருத்துமாக இருக்கின்றனர் என்பது கவலைக்குரிய விடயம்.

பாடசாலை மட்டம், அலுவலக மட்டம், தனிநபர் மட்டம் என ஒவ்வொரு மட்டதிற்குமென பிரத்தியேக வழிகாட்டல்களை தொடந்தேர்ச்சியாக தொலைக்காட்சி, வானொலி, அச்சு ஊடகங்கள் வழியாக நாம் வழங்கி வருகின்றோம்.

எமது சுகாதார உத்தியோகத்தர்கள் உணவகங்களுக்கு விஜயம் செய்து அவற்றின் சுகாதார நிலைமைகள், உணவின் தரம், அங்கு பணியாற்றும் பணியாளர்களின் சுகாதார கரிசனை என்பன குறித்து திட்டமிடப்பட்ட, ஒழுங்குபடுத்தப்பட்ட பரிசோதனைகளை மேற்கொள்கின்றனர். இதன் மூலம் அந்த உணவகங்களுக்கு சான்றிதழ் வழங்கும் நடைமுறை ஒன்றையும் முன்னெடுத்து வருகிறோம். உணவகங்களின் சுகாதார தரத்துக்கேற்ப வழங்கப்படும் சான்றிதழ்களின் நற்பேறும் வேறுபடும்.

உணவகங்களில் உணவுப் பொருட்களை கையாள்பவர்களின் சுகாதார விழிப்புணர்வை அதிகரிக்கும் பொருட்டு நாற்பது பேர் கொண்ட குழுக்களாக பிரித்து, சிறப்புத் தேர்ச்சி மிக்க சுகாதார உத்தியோகத்தர்களைக் கொண்டு அவர்களுக்கு சுகாதாரப் பயிற்சிப் பாசறைகளை நடத்தி வருகின்றோம். இதன்போது உணவகங்களில் உணவுப் பொருட்களை கையாளும்போது மேற்கொள்ள வேண்டிய முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் பற்றிய செய்முறை விளக்கங்களுடன் பயிற்சிகள் வழங்கப்படும். இப்பயிற்சி பாசறையில் பங்கு கொள்ளும் பணியாளர்களின் ஆர்வத்தை அதிகரிக்கும் வகையில் அவர்களுக்கான தனிநபர் சுகாதார பரிசோதனை மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.

கேள்வி: சுகாதார நிறுவனத்தால் மேற்கொள்ளப்படும் செயற்றிட்டங்கள் மக்களின் ஒத்துழைப்பின்றி வெற்றியடைவது சாத்தியமன்று என்ற வகையில் மக்களுக்கு தாங்கள் கூறும் அறிவுறுத்தல் என்ன?

பதில்: எமது நாட்டைப் பொறுத்தவரை இவ்வகையான செயற்றிட்டங்களுக்கு மக்களின் ஒத்துழைப்பு முழுமையாக கிடைப்பதென்பது அரிது. எனினும் செயற்றிட்டங்களை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்லும்போது காலப்போக்கில் அதன் சாதக பெறுபேற்றை மக்கள் அனுபவிப்பதனால் வரவேற்பு பன்மடங்காகப் பெருகும் என்பதில் ஐயமில்லை.

அபிவிருத்தியடைந்த நாடுகளை எடுத்துக் கொண்டால் அங்கே சுகாதாரமற்ற உணவகங்கள் நீடித்து வேரூன்ற வாய்ப்பேயில்லை. சுகாதார துறையின் தலையீடின்றி தானாகவே இழுத்து மூடப்படும் நிலைக்கே செல்லும் என்பது திண்ணம். ஏனெனில், வளர்ச்சியடைந்த நாடுகளில் வாழும் மக்கள் சுகாதார விரும்பிகள். "இலவசவமாக உணவுகள் வழங்கப்படும்" என்று விளம்பரப் படுத்தினால் கூட அவர்கள் அசுத்தமான உணவகங்களுக்கு ஒருபோதும் காலடி எடுத்து வைக்க மாட்டார்கள். இறுதியில் சுகாதாரமற்ற உணவகங்கள் தானாகவே மூடப்படுவதை தவிர வேறு வழியில்லை. ஆனால், இலங்கை நாட்டை பொறுத்தவரை இந்நிலைமை முற்றிலும் நேர்மாறானதாக காணப்படுகின்றமை கண்கூடு. ஈ மொய்க்கும் உணவகங்களில் கூட ஈக்களின் எண்ணிக்கையை விட நுகர்வோர் எண்ணிக்கை அதிகமாகவே காணப்படுகின்றது. சுகாதாரமற்ற உணவகங்களை மக்கள் தாமாகவே புறக்கணிக்கும் ஆரோக்கிய நிலை தோன்றாதவரை சுகாதாரமான உணவகம் என்பது குதிரைக் கொம்பாகவே காணப்படும்.

நுகர்வோரைப் போலன்றி சுகாதார உத்தியோகத்தர்களுக்கு உணவகங்களின் சமையல் பகுதி வரை சென்று பரிசோதிக்கும் உரிமை காணப்படுகின்றது. அதனடிப்படையில் எமது உத்தியோகத்தர்கள் உணவகங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை பரிசோதித்து தனியானதொரு சான்றிதழ் வழங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. உணவகங்களின் உட்கட்டமைப்பு தூய்மை நிலை, உட்கொள்ளும் உணவின் உண்மைத் தரம் என்பன தொடர்பில் திருப்தி கொள்வதற்கு இந்நடைமுறை நுகர்வோருக்கு பெரிதும் நன்மை பயக்கும். கொழும்பு மாநகர சபையுடன் இணைந்து முன்னெடுக்கப்பட்டுள்ள இச்செயற்றிட்டத்தில் முதற்கட்டமாக கொழும்பிலுள்ள 50 உணவகங்கள் அதி உயர் சுகாதார தரம் வாய்ந்ததாக அடையாளப் படுத்தப்பட்டுள்ளன. இவற்றுக்கு வருடாந்தம் புதுப்பிக்கக் கூடிய நற்சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், உணவகங்களின் தூய்மைக் கேடு பற்றி முறைப்பாடு செய்வதற்கென நுகர்வோர் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கங்களை உணவகங்களில் காட்சிப்படுத்துமாறு கண்டிப்பான உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. எமது நிறுவனத்தால் வழங்கப்படும் நிபந்தனைகளை மீறும் பட்சத்தில் வழங்கப்பட்ட நற்சான்றிதழ் முன்னறிவித்தலின்றி மீளப் பெறப்படும்.

னக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒபாமாவின் இராஜதந்திரத்தை முறியடிக்குமா வளைகுடா கூட்டணி?

பிராந்திய மோதல்களை தீர்ப்பதற்கான மாநாடுகள் பற்றிய செய்திகளால் நிரம்பி வழிகிறது மத்திய கிழக்கரசியல் களம். குறிப்பாக, தற்போது ரியாத்தில் நடைபெறும் எரியும் யெமன் பிரச்சினைக்கான தீர்வுத் திட்டம் பற்றிய மாநாடு, அடுத்த வாரங்களில் இடம்பெறவுள்ள சிரியா மோதல்களை முடிவுக்கு கொண்டு வரும் நோக்குடன் புரட்சிப் படைகளை தயார்படுத்தும் மாநாடு, சென்ற வாரம் இடம்பெற்று முடிவடைந்த பராக் ஒபாமா தலைமையிலான அமெரிக்க -வளைகுடா மன்னராட்சி நாடுகளுடனான மாநாடு என்பவை அவற்றில் சிலவாகும். ஆனால், இம்மாநாடுகளின் நிழலில் மாற்ற முற்று வரும் பிராந்திய அரசியல் காய்நகர்த்தல்கள் மற்றும் வலுச்சமநிலை மாற்றங்கள் குறிப்பிடத்தக்கவை.


தற்போது முழு மத்திய கிழக்கிலும் ஈரானுக்கு எதிரான பாரிய எதிர்ப்பலையொன்று வீறு கொண்டு எழுந்து வருவதை அவதானிக்கலாம். யெமன், சிரியா மற்றும் ஈராக்



ஸகி பவ்ஸ் (நளீமி)

வரை அவ்வலை பரவ வேண்டும் என்பது மத்திய கிழக்கின் பொதுமக்கள் அபிப்பிராயமாகும். யெமன் மீதான சஊதி அரேபியக் கூட்டணிப் படையின் தாக்குதலுடன் துளிர்விட்ட ஈரானுக்கு எதிரான உத்தியோகபூர்வ நகர்வுகள் தற்போது அதன் உச்சத்தை எட்டியுள்ளன எனலாம். அதனோடிணைந்த வகையில், ஈராக்கில் தெஹ்ரான் ஆதரவு ஆயுதக் குழுக்களும் சிரியாவில் பஷார் அல்அஸத் சார்பான இராணுவத்தினர் சந்தித்து வரும் தோல்விகளும் சார்பளவிலான வளைகுடாவின் அமெரிக்க எதிர்ப்பு அரசியலும் ஈரானின் பிராந்திய ஆதிக்கத்திற்கு எதிரான உஷார் நிலையை ஏற்படுத்தி விட்டுள்ளன. இதனை அடிப்படையாக வைத்தே பலஸ்தீன அரசியல் விற்பன்னர் மாஜித் கையாளி இவ்வருட இறுதியில் சிரியா மற்றும் யெமன் மீதான செல்வாக்கில் பாரிய தோல்விகளை தெஹ்ரான் சந்திக்கக் கூடும் என்கிறார்.

ஈரானுக்கு எதிரான பொதுமக்கள் அபிப்பிராயத்தினை (Public Opinion) வலுவூட்டுவதில் துருக்கி, சஊதி அரேபியா மற்றும் கத்தார் நாடுகளின் ஈரானின் ஆதிக்க பரவலாக்கத்திற்கு எதிரான கூட்டு அறிக்கைகளும் பாரிய பங்காற்றியுள்ளமை நோக்கத்தக்கது. மொத்தத்தில், இவ்வருடம் ஆரம்பத்தில் ஈரானிற்கு சார்பாக இருந்த பிராந்திய வலுச்சமநிலை சிறிது சிறிதாக தளர ஆரம்பித்துள்ளதை அவதானிக்கலாம். இன்னும், இதுவரை பிராந்திய வலுச்சமநிலைப் போரில் தெஹ்ரான் வெற்றி பெறுவதற்கு மத்திய கிழக்கு மன்னராட்சிகளின் இயலாமையே காரணம் எனக் கூறி வந்த சர்வதேச புகழ் வாய்ந்த அரசியல் ஆய்வாளர்களும் ஈரானின் எல்லை மீறிய ஆதிக்க அரசியலைப் பற்றி தங்களது கவனத்தினை குவிக்க ஆரம்பித்துள்ளனர். உதாரணமாக, அல்ஜஸீரா அரபுத் தொலைக்காட்சி சேவையின் ஆய்வுத்துறை தவைலர் மர்வான் பிஷாரா, (ஆதிக்க அரசியல் கொள்கைகளிலிருந்து விடுவித்துக் கொள்ளுமாறு அன்புக்குரிய ஈரானை கேட்டுக் கொள்கிறேன்) "Dear Iran please stop your expansionism" என சமீபத்தில் வெளிவந்த பத்தியொன்றில் குறிப்பிடுகிறார். அதேபோல், சர்வதேச ஷரூக் ஆய்வு மையத்தின் தலை



வர் வதா கன்பர், உடனடியாக ஈரானின் ஆதிக்க மோதலுக்கு எதிராக அரபு நாடுகள் ஒன்றுசேர வேண்டும். இது ஸுன்னி-ஷீயா என்ற அடிப்படையிலல்லாது ஒவ்வொரு தேசத்தினதும் ஜனநாயகம், சுய கௌரவம் என்ற அடிப்படையில் ஒழுங்குபடுத்தப்பட வேண்டும் என அழைப்பு விடுக்கிறார்.

யெமன் பிரச்சினையை சஊதி தலைமையிலான கூட்டுப் படைத் தாக்குதல்கள் முடிவுக்கு கொண்டு வரவில்லை. ஆனால், அது போன்றதொரு தாக்குதலை சிரியாவிலும் ஈராக்கிலும் நடத்த வேண்டும் என்ற அபிப்பிராயம் பாரியளவில் எழ ஆரம்பித்துள்ளது. அடுத்த வாரங்களில் நடைபெறப் போகும் சிரியா புரட்சி அமைப்புகளுக்கான மாநாட்டில் யெமன் தாக்குதல்கள் சிரயாவிலும் விஸ்தரிப்பதற்கான கலந்தாலோசனைகள் இடம்பெறக் கூடும். வளைகுடா மற்றும் துருக்கி கூட்டணியின் புதிய கர்ஜனை தெஹ்ரானை அச்சமூட்டியிருக்கும் என்பது உறுதியானது. அதிலும், இக்கூட்டணியின் அமெரிக்காவுக்கு எதிரான அறிக்கைளும் நகர்வுகளும் தெஹ்ரானை இருமுறை சிந்திக்க வைத்திருக்கக் கூடும். ஆனால், ஈரானுக்கு எதிரான நகர்வுகளை மையப்படுத்திய மத்திய கிழக்கு இராணுவக் கூட்டணி நாடுகளின் நகர்வுகள் சிரியாவை மற்றும் ஈராக்கை நோக்கி அண்மித்துவிடக் கூடாது. ஏனெனில், அவ்வாறு நகரும் பட்சத்தில் அணுவாயுதப் பேச்சுவார்த்தைகள் தொடர்பாக தெஹ்ரானுக்கும் வொஷிங்டனுக்கும் மத்தியில் திரைமறைவில் நடைபெறும் நாடகம் திசை திரும்பக் கூடும். இதனால், கூட்டணியின் இயக்கத்தினை எப்படியாவது தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க வேண்டும். அதிலும், குறித்த கூட்டணிக்குள்ளால் அங்காரா தலையீடு செய்வதை வொஷிங்டன் ஓரக்கண் கொண்டு நோக்குகிறது.

### கேம்ப் டேவிட் மாநாடும் பின்னணி அரசியலும்

பாரசீகத் தலை நகர் தெஹ்ரானை மையப்படுத்தி வடிவம் பெற இருந்த அடுத்த தசாப்த மத்திய கிழக்கு வரைபடத்தை வளைகுடாக் கூட்டணியின் புதிய நகர்வுகள் அச்சுறுத்த ஆரம்பித்துள்ளதை வெள்ளை மாளிகை உடனே புரிந்து கொண்டுள்ளது. எனவே உடனடியாக வளைகுடா நாடுகளின் தலைவர்களை அமெரிக்காவிற்கு அழைத்து பரஸ்பர பாதுகாப்பு ஒப்பந்தங்களைக் காட்டி வழமை போன்று மன்னர்களை ஏமாற்றும் கைங்கரியத்தினை ஒபாமா கச்சிதமாக நடத்தி முடித்துள்ளார். இம்மாநாட்டின் உள்ளக அரசியலை புரிந்து கொண்ட மன்னர் ஸல்மான் மாநாட்டை பகிஷ்கரித்தமை குறிப்பிடத்தக்கது. அதே வேளை, வேறொரு மாநாட்டுக்காக பஹ்ரைன் மன்னர் பிரித்தானியா சென்றார். இன்னும், வெறும் இரண்டு வளைகுடா நாட்டுத் தலைவர்களே கேம்ப் டேவிட்டில் இடம்பெற்ற மாநாட்டில் கலந்து கொண்டனர்.

இங்கு மன்னர்களைக் கூட்டி ஒபாமா இரண்டு இலக்குகளை அடைந்து கொள்ள முற்படுவதாக அரசியல் விமர்கர்களான யாஸர் ஸஆதிரா மற்றும் அப்துல் பாரி அத்வான் போன்ற மூத்த ஊடகவியலாளர்கள் தொட்டுக் காட்டுகின்றனர். முதலாவது, வளைகுடா நாடுகளுக்கு எதிரான எவ்வித வெளிச் சக்திகளது தாக்குதல்களையும் அமெரிக்கா அங்கீகரிக்க மாட்டாது என்ற மாயையை ஏற்படுத்தல். இதற்கூடாக, மத்திய கிழக்கு நாடுகளும் அங்காராவும் இணைந்த கூட்டு அரசியல் முயற்சிகளை கட்டுப்படுத்தல். மேலும், மறைமுகமாக மத்திய கிழக்கு பிராந்திய காவல் நாயாக ஈரானை முன்னகர்த்துதல். இரண்டாவது, மத்திய கிழக்கின் பாதுகாப்பை மேலும் வலுவூட்டுதல் என்ற போர்வையில் பாரியளவான இராணுவத் தளபாடங்களை அரபு நாடுகளுக்கு விற்பனை செய்தல் என்பவாகும். இவை இரண்டும் அமெரிக்க அரசியல் நிர்வாகத்தினதும் ஏகாதிபத்திய அதிகார வர்க்கத்தினதும் நிகழ்ச்சி நிரலுடன் முழுமையாக ஒன்றித்துச் செல்லும் இலக்குகளாகும்.

இங்கு பலரும் எழுப்பும் கேள்வி என்னவென்றால், வரலாற்றில் பலமுறை அமெரிக்காவின் ஆசை வார்த்தைகளை, வாக்குறுதிகளை நம்பி அரபுலகம் கோட்டை விட்டுள்ளது. கடந்த அரை நூற்றாண்டுகளாக அரபு பங்காளிகள் (Arab Partners ) என்ற பெயரைச் சொல்லி இஸ்ரேலிடம் அரபு நாடுகளை அமெரிக்கா அடகு வைத்தது. அடுத்த அரை நூற்றாண்டிலும் அதே அரபு பங்காளிகள் (Arab Partners ) என்ற பெயரைச் சொல்லி ஈரானிடம் அடகு வைக்க முயற்சிக்கிறது. இத்தகைய அரசியல் பின்புலங்களை நன்றாகப் புரிந்த நிலையில், எழுச்சி பெற்று வரும் அரபுலக அரசியல் கூட்டணி முயற்சிகள் சீரான பாதையில் பயணிக்குமா? அல்லது வழமை போன்று பல மில்லியன் டொலர்கள் பெறுமதியான இராணுவத் தளபாட ஒப்ந்தங்களுக்கூடாக மீண்டும் வொஷிங்டனின் செல்லப் பிள்ளையாக தவழ்ந்து விளையாடுமா? என்பதை வளைகுடா மன்னர்களே தீர்மானிக்க வேண்டும்.






# சஊதி குண்டு வெடிப்பில் 21 பேர் பலி

## தாக்குதலை ஐ.எஸ். பொறுப்பேற்பு

சஊதி அரேபியாவில் இடம்பெற்ற தற்கொலை குண்டு தாக்குதலில் 21 பேர் பலியாகியுள்ளதாகவும் 102 பேர் காயமடைந்துள்ளதாகவும் சஊதி உள்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

வெடிபொருட்கள் பொருத்தப்பட்ட பெல்ட் ஒன்றை அணிந்து வந்த ஒரு தீவிரவாதி மூலமே சஊதி கதீப் மாகாணத்தில் குதைஹ் நகரில் அமைந்துள்ள அலி இப்னு அபூதாலிப் மஸ்ஜிதில் இத்தற்கொலை தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

கிழக்கு சஊதியில் அமைந்துள்ள மேற்படி மஸ்ஜிதில் ஷீஆ பிரிவைச் சேர்ந்த சஊதி குடிமக்களே அதிகம் வந்து செல்வதாக தெரிவிக்கப்படுகிறது.

குண்டு வெடிப்பு சம்பவத்தோடு தொடர்புபட்டவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என சஊதி உள்துறை அமைச்சு சூளுரைத்துள்ளது. தற்கொலை குண்டு தாக்குதலை ஐஎஸ். தீவிரவாதிகள் தாம் பொறுப்பேற்பதாக டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை, தற்கொலை குண்டு தாக்குதல் நடத்தியதாக தெரிவிக்கப்படும் ஒருவரின் படத்தையும் டுவிட்டர் ஊடாக அவர்கள் வெளியிட்டுள்ளனர்.

குறித்த தாக்குதல் சம்பவம் ஒரு நூற்றாண்டுக்கு பின்னர் சஊதி நிலப்பரப்பில் இடம்பெற்ற மிகவும் கொடூரமான தாக்குதல் சம்பவமாக கருதப்படுகிறது.

சிரியா, ஈராக் போன்ற பிரதேசங்களில் ஆதிக்கம் செலுத்தி வரும் ஐ. எஸ். கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக அமெரிக்கா தலைமையில் இயங்கி வரும் சர்வதேச கூட்டணியுடன் சஊதி இணைந்து செயற்படுவதை கண்டித்து ஐ. எஸ். கிளர்ச்சியாளர்கள் எச்சரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சர்வதேசம்

# கலாநிதி முர்ஸிக்கு மரண தண்டனை: எகிப்தில் ஜனநாயகம் செத்து மடிகிறது

20 வருட கால ஹுஸ்னி முபாரக்கின் சர்வாதிகார ஆட்சிக்கு எதிராக ஏற்பட்ட எகிப்திய மக்கள் புரட்சியின் பின்னர் உருவான ஒரேயொரு ஜனநாயக தலைமைத்துவத்திற்கு எகிப்திய நீதிமன்றம் தூக்குத் தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது. 2012 ஜூன் மாதம் மக்களால் தெரிவு செய்யப்பட்டு ஜனாதிபதியாக பதவியேற்ற கலாநிதி முர்ஸி, அப்போது இராணுவத் தளபதியாக இருந்த ஸீஸியினால் 2013 ஜுலையில் கைது செய்யப்பட்டு ஆட்சி கவிழ்க்கப்பட்டார்.

### கலாநிதி முர்ஸியின் வாழ்க்கைப் பின்னணி

முஹம்மத் முர்ஸி ஈஸா அல்இயாத் என்பது அவரது முழுப் பெயர். எகிப்தின் ஷர்க்கிய்யா மாகாணத்தின் அத்வா எனும் கிராமத்தில் 1951 ஆம் ஆண்டு அவர் பிறந்தார்.

1975 ஆம் ஆண்டு கெய்ரோ பல்கலைக்கழகத்தின் பொறியியல் துறையில் தனது இளமாணி பட்டத்தை முதல் தர சித்தியுடன் பூர்த்தி செய்தார். 1978 இல் அதே பல்கலைக்கழகத்தில் பொறியியல் துறையில் முதுமாணிப் பட்டத்தையும் பெற்றுக் கொண்டார்.

1978 ஆம் ஆண்டு நஜ்லா மஹ்மூத் என்ற பெண்ணை திருமணம் முடித்தார். இவர்களுக்கு ஐந்து பிள்ளைகள். அதில் நான்கு ஆண் பிள்ளைகளும் ஒரு பெண் பிள்ளையும் அடங்குவர். அவரின் மூத்த மகன் ஒரு வைத்தியர் ஆவார்.

1982 ஆம் ஆண்டு அவருக்கு கிடைத்த புலமைப்பரிசு காரணமாக தென் கலிபோனியா பல்கலைக்கழகத்தில் பொறியியல் துறையில் முஹம்மத் முர்ஸி கலாநிதி பட்டத்தைப் பெற்றுக் கொண்டார்.

பின்னர் 1982-1985 காலப் பகுதியில் கெய்ரோ பல்கலைக்கழகத்திலும் தென் கலிபோனியா பல்கலைக்கழகத்திலும் பிரித்தானியாவின் நோர்த் ரிட்ஜ் பல்கலைக்கழகத்திலும் பொறியியல் பீட ஆசிரியராகவும் உதவி விரிவுரையாளராகவும் நியமிக்கப்பட்டார். பின்னர் 1985-2010 ஸகாஸிக் பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தின் மூலப்பொருள் பொறியியல் துறைப் பீடாதிபதியாக (Head of Materials Engineering) பணியாற்றினார்.

இன்னும், லொஸ் அஞ்சலஸ், லிபியாவின் பாதிஹ் பல்கலைக்கழகத்திலும் பல ஆய்வுகளை முன் வைத்துள்ளார். அத்தோடு, அமெரிக்காவின் நாசா நிறுவனத்திலும் சில காலம் பணியாற்றினார்.

1977 ஆம் ஆண்டு இஹ்வான் இயக்கத்தில் தன்னை இணைத்துக் கொண்ட முர்ஸி 1992 வரை இஹ்வான்களின் அரசியல் பகுதியில் உறுப்பினராக இருந்தார். பலதரப்பட்ட திறமைகளையும் இயக்க உறவுகளையும் வளர்த்துக் கொண்டார். எளிமையான குடும்ப பின்னணியைக் கொண்ட முர்ஸி அவர்கள், சிறு வயது முதல் அல்குர்ஆனை மனனம் செய்திருந்தார். இதேபோன்று அவரின் அனைத்து பிள்ளைகளும் அல்குர்ஆனை மனனம் செய்திருந்தார்கள். இன்னும் பல இஸ்லாமிய கலைகளை கற்று தேர்ந்தார். இத்தகைய இஸ்லாமிய பின்னணியை கொண்ட முர்ஸி அவர்கள் தனது வாலிப பருவம் முதலே சமூகப் பணிகளில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார்.

2000-2005 வரையான காலப் பகுதியில் இஹ்வானுல் முஸ்லிமூன் இயக்கத்தின் பாராளுமன்றக்குழு தலைவராகவும் கலாநிதி முர்ஸி செயற்பட்டார். அத்துடன், ஸகாஸிக் பல்கலைக்கழக பொறியியல் பீடத்தில் சடப்பொருள் விஞ்ஞான துறையின் தலைவராகப் பணியாற்றினார்.

பாராளுமன்றத்தில் ஐந்து வருடங்கள் ஆற்றிய சிறந்த அரசியல் பணியின் பின்னர், இஹ்வான்களது ஷூரா சபையின் அங்கத்தவராகவும் அவர் தெரிவு செய்யப்பட்டார். அத்துடன் இயக்கத்தின் வழிகாட்டல் சபையின் அங்கத்தவராகவும் அவர் தெரிவானார்.

ஜனவரி 25 புரட்சிக்குப் பின்னர் இஹ்வான்களது ஷூரா சபையினால், புதிதாக உருவாக்கப்பட்ட சுதந்திரத்திற்கும் நீதிக்குமான கட்சியின் தலைவராக அவர் தெரிவு செய்யப்பட்டார்.

2000 ஆம் ஆண்டு எகிப்திய பாராளுமன்றத்தில் கலாநிதி முர்ஸி இஹ்வான்களது பாராளுமன்றக்குழு தலைவராக செல்வாக்கு மிக்க, முக்கிய பாத்திரத்தை வகித்தார். அப்போதைய பாராளுமன்றத்தில் செயற்திறனுள்ள மிகச் சிறந்த அங்கத்தவராகவும் அவர் விளங்கினார். 2000-2005 காலத்தில் அவரது பாராளுமன்ற செயற்திறன் காரணமாக, மிகச் சிறந்த பாராளுமன்ற வாதியாக சர்வதேச ரீதியாக தெரிவு செய்யப்பட்டார்.

முபாரக்கின் அரசாங்கத்தின் கொடுங்கோன்மைக்கு எதிராக உறுதியாக செயற்பட்டதனால் கலாநிதி முர்ஸி பல முறை கைது செய்யப்பட்டார். கலாநிதி முர்ஸிக்கு இழைக்கப்பட்ட அநீதி அவரோடு மட்டும் நிற்கவில்லை. அவரது குடும்பத்தினரும் அதனால் பாதிக்கப்பட்டனர். அவரது மகன் கலாநிதி அஹ்மத், 2000 ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் தனது தந்தையின் நியமனம் அறிவிக்கப்பட்டவுடன் கைது செய்யப்பட்டார். தனது தந்தை எகிப்திய பாராளுமன்ற உறுப்பினராக இருந்தபோது அஹ்மத் மூன்று தடவைகள் கைது செய்யப்பட்டார்.

மத்திய கெய்ரோவிலுள்ள அல்ஜலாஹ் நீதிமன்ற தொகுதிக்கு முன்னேயும் வட கெய்ரோ நீதிமன்றத்திற்கு முன்னேயும் இடம்பெற்ற ஆர்ப்பாட்டங்களின் போது கலாநிதி முர்ஸி உட்பட 500 இஹ்வான்கள் கைது செய்யப்பட்டனர். கலாநிதி முர்ஸி ஏழு மாதங்கள் சிறை வைக்கப்பட்டார்.

எகிப்திய புரட்சியின் ஆரம்ப நாட்களில் ஜனவரி 28, 2011 அன்று வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தின் போது கலாநிதி முர்ஸி மீண்டும் கைது செய்யப்பட்டார். அவருடன் பெருந்தொகையான இஹ்வான்களும் கைது செய்யப்பட்டனர். இது எகிப்தில் இடம்பெற்ற அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களில் இஹ்வான்களைக் கலந்து கொள்ளாமல் தடுத்து நிறுத்தும் ஒரு முயற்சியாகும்.

2011 எகிப்திய மக்கள் புரட்சியின்போது சிறைகள் உடைக்கப்பட்டு, கைதிகள் பலர் தப்பினர். இதன்போது கலாநிதி முர்ஸி தனது சிறைக் கூடத்திலிருந்து செய்மதி தொலைக்காட்சி மற்றும் செய்திச் சேவைகளை தொடர்பு கொண்டவாறு வெளியேற மறுத்தார். அங்கிருந்தவாறு அவர், நீதித்துறை அதிகாரிகளை சிறைக்கு வந்து, கைது செய்யப்பட்ட இஹ்வான் தலைவர்களது சட்டநிலை தொடர்பாக ஆராயுமாறு வேண்டினார்.

ஜனவரி 25 ஆம் திகதி எகிப்திய வரலாற்றில் முக்கியத்துவமிக்க நாள் எனலாம். சர்வாதிகாரி ஹொஸ்னி முபாரக்குக்கு எதிராக எகிப்திய மக்கள் அன்றுதான் பெருமளவில் வீதிக்கு வந்தனர். தூனிசிய நாட்டு மக்களது புரட்சி ஏற்படுத்திய பாதிப்புகள் மற்றும் அனுபவங்கள் எகிப்திய மக்கள் வீதிக்கு வருவதற்கு பெரும் உந்துசக்தியாக விளங்கியது.

எவற்றுக்காகவும் போராட்டத்தை கைவிட தயாரில்லை என்றும், ஹொஸ்னி முபாரக் நாட்டைவிட்டு வெளியேறிச் செல்வதே சிறந்த தீர்மானமென்பதிலும் போராட்டக்காரர்கள் உறுதியாக இருந்தனர்.

எகிப்திய நாட்டு மக்கள் ஒரு சர்வாதிகாரிக்கு எதிராக மேற்கொண்ட 18 நாள் போராட்டத்தினால், எகிப்திய அரசாங்க தொலைக்காட்சி முன்னால் தோன்றிய உதவி ஜனாதிபதி ஓமர் சுலைமான் ஹொஸ்னி முபாரக் இராஜினாமா செய்துள்ளதை உறுதிப்படுத்தினார். இதனை பல்வேறு சர்வதேச ஊடகங்களும் நேரடியாக ஒளிபரப்புச் செய்தன.

இந்த அறிவிப்பை அடுத்து வீதிகளில் திரண்டிருந்த எகிப்திய மக்கள் தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். தமது போராட்டம் வெற்றி பெற்றுள்ளதெனவும் எகிப்து சுதந்திரம் கண்டு விட்டதாகவும் தெரிவித்தனர்.

அதன் பின்னர் ஆட்சி இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டது. இராணுவம் சுமார் ஒரு வருடத்தின் பின்னர் எகிப்திய ஜனாதிபதிக்கான ஏற்பாடுகளை செய்தது.

2011 இல் இஹ்வான்கள் ஆரம்பித்த அரசியல் கட்சியான நீதிக்கும் சுதந்திரத்திற்குமான கட்சியின் தலைவராக முர்ஸி நியமிக்கப்பட்டிருந்தார். 2012 ஏப்ரல் 17 ஆம் திகதி இஹ்வான்களின் பிரதி தலைவர் கைரத் சாதிர் இஹ்வான்கள் சார்பாக ஜனாதிபதி வேட்பாளராக இறக்கப்பட்டார். இருப்பினும் அவரின் பலத்தை அறிந்த இராணுவம் அவரை ஜனாதிபதி வேட்பாளர் பட்டியலிலிருந்து நீக்கியது. இதனால் ஏலவே திட்டமிட்டிருந்த முஹம்மத் முர்ஸி அவருக்கு பதிலாகவும் இஹ்வான்கள் சார்பாகவும் நீதிக்கும் சுதந்திரத்துக்குமான கட்சியின் சார்பாகவும் நியமிக்கப்பட்டார்.

எஸ்.எப்.எம். இப்திஹார் (இஸ்லாஹி)
விரிவுரையாளர்
இஸ்லாஹிய்யா அரபுக் கல்லூரி, மாதம்பை

எகிப்தில் ஜனாதிபதி தேர்தல் 2012 ஜுன் 16, 17 ஆகிய திகதிளில் நடைபெற்றது. அதன் முடிவை தேர்தல் கமிஷன் செயலாளர் பரூக் சுல்தான், இஹ்வான்களின் வேட்பாளர் முஹம்மது முர்ஸி 13.2 மில்லியன் (51.73 வீதம்) வாக்குகள் பெற்று வெற்றி பெற்றதாக அறிவித்தார். இவருடன் போட்டியிட்ட அஹமத் சபீக் 12.3 மில்லியன் வாக்குகளை பெற்று தோல்வி அடைந்தார். நேர்மையான தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஜனாதிபதி முர்ஸி என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு, நல்ல முறையில் ஒரு வருட ஆட்சியை முன்னெடுத்த போது அவருக்கு எதிரான மதசார்பற்றவர்களும் முபாரக்கின் ஆதரவாளர்களும் பல சதிகளை மேற்கொண்டு வந்தனர். இதன் விளைவாக அவர் நியமித்த இராணுவ தளபதி ஸீஸி என்பவன் எகிப்தின் கிறிஸ்தவ வாதிகளுடன் இணைந்து குர்ஆனிய மனிதர் முர்ஸியை மேற்கின் சக்திகளுடன் இராணுவ கிளர்ச்சியை மேற்கொண்டு முர்ஸியையும் இஹ்வானிய சகோதரத்துவ இயக்க உறுப்பினர்களையும் கைது செய்தனர்.

➡ 16

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நபிகளாரின் சுன்னாவும் சட்டவாக்கமும்



மூலம்: கலாநிதி யூசுப் அல்கர்ளாவி
மொழியாக்கம்: அஷ்ஷெய்க் எம்.எப். ஸைனுல் ஹுஸைன் (நளீமி)

(தொடர் 65)

கலாநிதி யூஸுப் அல்கர்ளாவி அவர்கள் எழுதிய "அஸ்ஸுன்னா மஸ்தரன் லில் மஃரிபா வல் ஹழாரா" (அறிவுக்கும் நாகரிகத்திற்குமான அடிப்படை என்ற வகையில் சுன்னா) என்ற நூலின் மொழிபெயர்ப்புத் தொடர்.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறுகின்றார்கள்: மக்கள் என்னிடம் வந்து முஹம்மதே! நீங்கள் அல்லாஹ்வின் தூதராகவும் நபிமார்களில் இறுதியானவராகவும் விளங்குகிறீர்கள். அல்லாஹுத்தஆலா உங்களது முந்தைய மற்றும் பிந்திய பாவங்களை மன்னித்துள்ளான். எனவே எங்களுக்காக உங்களது இறைவனிடம் பரிந்துரை செய்யுங்கள். நாம் இருக்கும் நிலைமையை நீங்கள் கண்ணுறவில்லையா? என்று கூறுவார்கள். நான் அந்த இடத்திலிருந்து நகர்ந்து அர்ஷின் கீழ் வருவேன். எனது இரட்சகனுக்காக சுஜூதில் வீழ்வேன். பின்னர், அல்லாஹுத்தஆலா இதற்கு முன்னர் எவருக்கும் வழங்காத அவனது புகழ்ச்சியையும் பாராட்டையும் என் மீது சொரிவான். பின் அல்லாஹுத் தஆலா முஹம்மதே! உங்களுடைய தலையை உயர்த்துங்கள், விரும்பியதைக் கேளுங்கள், கேட்பதெல்லாம் உங்களுக்கு தரப்படும். இன்னும், பரிந்துரை செய்யுங்கள் உங்கள் பரிந்துரை ஏற்றுக் கொள்ளப்படும் என்று கூறுவான்.

நான் தலையை உயர்த்தி என் இரட்சகனே! என் உம்மத்தினைக் காப்பாற்று, என் உம்மத்தினைக் காப்பாற்று என்று சொல்வேன். முஹம்மதே உமது உம்மத்தினரில் விசாரணைக்கு உட்படாதவர்களை சுவனத்து வாயில்களில் வலப்புற வாயினால் நுழைவிப்பீராக என்று சொல்லப்படும். சுவனத்தின் ஏனைய வாயில்களிலால் நுழையவும் அவர்களுக்கு உரிமை உண்டு. அல்லாஹ்வின் மீது ஆணையாக இரு கதவுகளைக் கொண்ட சுவனத்து வாயில்களின் ஒரு கதவின் அளவு மக்காவுக்கும் ஹிஜ்ருக்கும் அல்லது மக்காவுக்கும் புஸ்ராவுக்கும் இடைப்பட்ட தூரமாகும். (ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹ் முஸ்லிம்)

மக்கள் ஒன்று சேர்க்கப்பட்டு உலகத்தாரின் இரட்சகனின் முன்னால் திரண்டு நிற்கும் மறுமை நாளின் பயங்கர நிலைமைகளை விளக்கி வந்துள்ள பிறிதொரு நபி மொழியை கீழே தருகின்றோம்.

இப்னு அப்பாஸ் (ரழியல்லாஹு அன்ஹு) அறிவிக்கிறார்கள்: அல்லாஹ்வின் தூதர் அவர்கள் எங்களுக்கு உபதேசம் புரிந்தார்கள். மறுமை நாளில் மக்கள் செருப்பணியாதவர்களாக நிர்வாணமானவர்களாக, விருத்த சேதனம் செய்யப்பட்டவர்களாக ஒன்று திரட்டப்படுவார்கள் என்று கூறினார்கள். முதல் படைப்பை நாம் ஆரம்பித்தது போன்றே அதை நாம் திரும்பவும் மீள வைப்போம். இது நம் மீது கடமையான வாக்குறுதியாகும். நிச்சயமாக நாம் இதை செய்வோராய் இருக்கின்றோம். (அல் அன்பியா 104) கவனத்திற் கொள்ளுங்கள்; மறுமை நாளில் படைப்பினங்களில் முதன் முதலாக ஆடை அணிவிக்கப்படுபவர் இப்றாஹீம் (அலைஹிஸ்ஸலாம்) ஆவார்கள். கவனத்திற் கொள்ளுங்கள்; என உம்மத்தினரில் சிலர் இடப்புறமாக நரகம் நோக்கி கொண்டு செல்லப்படுவார்கள். அப்போது நான் என் இறைவா இவர்கள் என் மார்க்கத்தைப் பின்பற்றியவர்கள் என்று கூறுவேன்.

அப்போது இவர்கள் உங்களது மறைவுக்குப் பின் மார்க்கத்தில் எவற்றையெல்லாம் புதிதாக புகுத்தினார்கள் என்பது உங்களுக்குத் தெரியாது என்று அல்லாஹ் கூறுவான். அப்போது நான் நல்லடியார் நபி ஈஸா (அலைஹிஸ்ஸலாம்) சொன்னதைப் போன்று இறைவா! நான் அவர்களுடன் இருந்தவரை அவர்களைக் கண்காணிப்பவனாக இருந்தேன். நீ என்னை திரும்ப அழைத்துக் கொண்டபோது நீயே அவர்களை கண்காணிப்பவனாக இருந்தாய். நீ அனைத்தையும் கண்காணிப்பவன். அவர்களை நீ தண்டித்தால் அவர்கள் உன் அடியார்களே. அவர்களை நீ மன்னித்தால் நீ யாவற்றையும் மிகைத்தவன், ஞானம் மிக்கவன் என்று கூறுவேன். அப்போது என்னிடம், நீங்கள் இவர்களை விட்டுப் பிரிந்ததிலிருந்து இவர்கள் மார்க்கத்தை விட்டு வெளியேறி பின்னோக்கிச் சென்று கொண்டே இருந்தார்கள் என்று சொல்லப்படும். (முத்தபகுன் அலைஹி) இன்னோர் அறிவிப்பில், அவர்கள் அல்லாஹ்வின் அருளை விட்டு தூரமாகி விட்டார்கள், அவர்கள் அல்லாஹ்வின் அருளை விட்டு தூரமாகி விட்டார்கள் என்று கூறுவேன் என வந்துள்ளது.

ஆயிஷா (ரழியல்லாஹு அன்ஹா) அறிவிக்கின்றார்கள்: மக்கள் மறுமை நாளில் வெறுங்கால்களுடன் ஆடையற்றவர்களாக விருத்த சேதனம் செய்யப்பட்டவர்களாக ஒன்று திரட்டப்படுவார்கள் என அல்லாஹ்வின் தூதர் அவர்கள் கூறியதை நான் கேட்டேன். உடனே நான், அல்லாஹ்வின் தூதரே! நிர்வாணமான பெண்கள் மற்றும் ஆண்கள் அனைவரும் ஒருவரை ஒருவர் பார்ப்பார்களே? என்று கேட்டேன். அதற்கு நபியவர்கள், அவர்களில் சிலர் வேறு சிலரை பார்க்கும் எண்ணம் ஏற்படாத அளவுக்கு அங்கு நிலைமை மிகக் கடுமையானதாக இருக்கும் என்று சொன்னார்கள்.

இன்னோர் அறிவிப்பில் அவர்களில் சிலர் வேறு சிலரை பார்க்க முடியாத அளவு நிலைமை மிகக் கடுமையானதாக இருக்கும் என்று கூறினார்கள்.



# நபி மொழிகளை நம்பகத்தன்மை அற்றதாக்க முயலும் கீழைத்தேயவாதிகள்

(சென்ற இதழ் தொடர்...)

அஷ்ஷெய்க் எம்.டி.எம். றிஸ்வி (மஜீதி)
BA (Hons),PGDE MA, Mphil,
சிரேஷ்ட விரிவுரையாளர்,
கிழக்கு பல்கலைக்கழகம்

**ஹதீஸ்** துறை அறிஞர் முஸ்தபா ஸிபாஈ, சில ஸஹாபாக்களுக்கு நபி (ஸல்) அவர்கள் ஹதீஸ்களை எழுதிக் கொள்வதில் வழங்கிய அனுமதி முன்னர் எழுத வேண்டாம் என்றிருந்த தடையை நீக்கி விட்டது. நபியவர்கள் எழுத வேண்டாம் எனக் கூறியது முற்றாக அதனை எழுத வேண்டாம் என்பதை குறிக்காமல் உத்தியோக பூர்வமாக எழுத வேண்டாம் என்பதைத் தான் குறிக்கிறது எனக் கருதுகிறார்.

எனவே, ஸுன்னாவை எழுதுவது தொடர்பாக நபியவர்கள் கூறிய அவ்வார்த்தைப் பிரயோகங்கள் முன்னுக்குப்பின் முரணானது அல்ல. மாறாக கீழைத்தேய வாதிகளே முன்னுக்குப்பின் முரணான கருத்துக்களை ஹதீஸ் தொடர்பாக முன்வைத்துள்ளனர். அவர்களின் குறை மதியும் இஸ்லாத்தின் குறை காணும் எண்ணமுமே இம்முரண்பாடான கருத்துக்களின் வெளிப்பாட்டுக்குக் காரணங்களாகும்.

அதிகமான ஹதீஸ்களை அறிவித்தவர்கள் வரிசையில் சிறிய ஸஹாபாக்களான அபு ஹுறைரா (ரழியல்லாஹு அன்ஹு) (5374 ஹதீஸ்கள்), இப்னு அப்பாஸ் (ரழியல்லாஹு அன்ஹு) (2660 ஹதீஸ்கள்), ஆயிஷா (ரழியல்லாஹு அன்ஹா) (2220 ஹதீஸ்கள்) ஆகியோர் முதன்மை பெற்றவர்கள். இதனை ஆதாரமாகக்கொண்டு கீழைத்தேய ஆய்வாளர்கள் வயது முதிர்ந்த ஸஹாபாக்களால் அறிவிக்கப்பட்ட ஹதீஸ்களின் எண்ணிக்கையை விட, வயது குறைந்த ஸஹாபாக்களினால் அறிவிக்கப்பட்ட ஹதீஸ்களின் எண்ணிக்கை அதிகமாகவுள்ளது. எனவே, ஹதீஸில் போலிகளும், இட்டுக்கட்டுகளும் உள்ளன என்று கருதுவதோடு, ஹதீஸ்கள் ஆதாரமற்றவை என்கின்றனர்.

இக்கருத்திலிருந்து அவர்களின் குறை மதி தெளிவுபடுத்தப்படுவதை காணலாம். அதாவது இவர்கள் ஒரு விடயம் மூத்தோர்கள் கூறுவதில்தான் நம்பிக்கையும் உறுதியும் இருக்க முடியும், இளையவர்களின் கருத்துக்களில் பலவீனம் கூடுதலாக இருக்க முடியும் என நிறுவ முனைகின்றனர். பலம், பலவீனம் என்பது மூத்தவர்கள், இளையவர்கள் என்பதில் தங்கியிருக்கும் விடயமல்ல. ஹதீஸைப் பொறுத்தவரை மூத்த ஸஹாபாக்களிடமிருந்தே கேட்டு, விளங்கி இளையவர்கள் அறிவித்துள்ளமை அதன் பலத்தில், நம்பகத்தன்மையில் எதுவித சந்தேகமும் கொள்ள வேண்டிய அவசியமில்லை. இளைய ஸஹாபாக்கள் கூட மூத்த ஸஹாபக்களைப் போன்று நபிகளாரை அண்டிக் காணப்பட்ட அதேநேரம், நபியவர்களை நேசித்தவர்களும் கூட.

மற்றோர் உண்மையையும் இது தொடர்பாக அவர்கள் விளங்கிக் கொள்ள வேண்டும். என்னவெனில் அன்று வாழ்ந்த மூத்த ஸஹாபாக்கள் வெளியிடங்களுக்குச் சென்றமையாலும், இயற்கையாகவும் புனிதப் போரில் கலந்தும் மரணித்தமையாலும், ஹதீஸ்களை மனனமிட்டுருந்தவர்களின் எண்ணிக்கை குறையலானது. இதனால் ஏற்படவிருக்கும் விபரீதங்களை அறிந்த சிறிய ஸஹாபாக்கள் பெரும் சிரமங்களுக்கு மத்தியில் பல பகுதிகளுக்கும் சென்று பெரிய ஸஹாபாக்களைச் சந்தித்து ஹதீஸ்களை கேட்டறிந்தனர். பிற்காலத்தில் ஹதீஸ்களை திரட்டும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போது பெரிய ஸஹாபாக்கள் பலர் உயிரோடு இருக்கவில்லை. இதன் காரணமாகத்தான் சிறிய ஸஹாபாக்களிடமிருந்து அதிக ஹதீஸ்களையும் பெரிய ஸஹாபாக்களிடமிருந்து குறைந்த ஹதீஸ்களையும் காண முடிகின்றன.

ஹதீஸ் கலை அறிஞர்கள் ஹதீஸ்களை தொகுக்கும் [illegible] போதும் கூட ஒரு ஹதீஸை சரியென ஏற்றுக் கொள்வதில் கடும் சிரமத்தை கண்டுள்ளனர். இவர்கள் ஹதீஸில் எதுவித பிழையும், தவறும், சந்தேகங்களும் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதற்காக தமது வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்தனர். ஸயீத் இப்னு முஸையிப் குறிப்பிடும் போது, நான் ஒரேயொரு ஹதீஸைப் பெறுவதற்காக பல நாட்கள் இரவு, பகலாக பிரயாணம் செய்துள்ளேன் என்றார்கள். ஒரு ஹதீஸை உண்மையான முறையில் உறுதிப்படுத்திக் கொள்வதில் ஹதீஸ் துறை அறிஞர்கள் கடைப்பிடித்தது போன்ற பேணுதலையும் பொறுப்புணர்ச்சியையும் வேறு எந்த சமூகத்திலும் காண முடியாது. அவ் அறிஞர்கள் (இஸ்னாத்) அறிவிப்பாளர்களை ஆழ்ந்து அவதானித்தது போன்றே ஹதீஸின் (மதன்), மொழி நடை, பதப் பிரயோகம், விளக்கம் அதன் போக்கு போன்றவற்றிற்கு ஏற்ப திறனாய்வு செய்யும் கலைகளையும்- (உஸூலுத் தஹ்ரஜ்) கண்டு பிடித்தார்கள். எனவே, ஹதீஸ்களின் பாதுகாப்புக்காக இந்தளவு அரண்களை முஸ்லிம் அறிஞர்கள் அமைத்துள்ள நிலையிலும் ஹதீஸ்கள் தொடர்பாக கீழைத்தேய வாதிகளின் கண்மூடித்தனமான பொய்யான, பிழையான கருத்துக்கள் புறக்கணிக்கப்பட வேண்டியவையாகும்.

கீழைத்தேய வாதிகளின் மற்றொரு கருத்தான ஹதீஸ்களை அறிவிப்புச் செய்தவர்கள் மறதியின் காரணமாக பலதை விட்டிருக்கலாம் என மனிதப் பலவீனங்களை நியாயம் காட்டி விமர்சிக்கின்றனர். அதாவது, மனிதப் பலவீனம் நியாயமானதே. இருப்பினும் ஹதீஸ்களைப் பொறுத்தவரையில் அவை சாத்தியப்படாதவையாகும். ஹதீஸ் விடயத்தில் ஸஹாபாக்களும் பின் வந்த ஹதீஸ் துறை மேதைகளும் மிகவும் எச்சரிக்கையாக இருந்தமையால் மனிதப் பலவீனங்கள் ஹதீஸ்களைப் பாதிக்கவில்லை.

கீழைத்தேய வாதிகளின் மனிதப் பலவீனங்கள் தவறு புரியத் தூண்டும் என்ற சிந்தனை ஏற்றுக் கொள்ளக் கூடியது என்றிருக்கும் அதேநேரம், எந்த நிலையிலும் வலிந்துரைத்தும், தெரியாததை இட்டுக்கட்டியும் கூட பழக்கப்படாத நபித்தோழர்கள் ஹதீஸ்களில் தமது பலவீனங்களை ஒரு போதும் வெளியிட்ட வரலாறு கிடையாது. இவ்வாறிருக்கும் போது அக்கருத்து ஏற்கப்பட முடியாததொன்றாகும். நிச்சயமாக நான் உங்களை வெண்மையான தரை மீது விட்டுள்ளேன். அதன் இரவும் பகலைப் போன்றது. நாசத்தை தழுவுபவனைத் தவிர அதைவிட்டும் வேறு ஒருவனும் எனக்குப் பின் வழி தவற மாட்டான் என நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) கூறினார்கள் (இப்னு மாஜா). இந்த ஹதீஸ் நபித்தோழர்கள் மத்தியில் வழிகேடான சிந்தனைசார் கருத்தியல்கள் வரவாய்ப்பே இல்லை என்பதை உணர்த்துகிறது.

இஸ்லாமிய நாகரிகத்தினதும், கலாசாரத்தினதும் அடிப்படை மூலாதாரங்களுள் ஒன்றான (ஹதீஸ், ஸுன்னா) நபி மொழிகளை கொச்சைப்படுத்த முயலும் கீழைத்தேய வாதிகளின் இத்தகைய தவறான விமர்சனங்கள் சூரியனை கைகளால் மறைக்க முயலும் முயற்சியை ஒத்ததாகும். எனவே, இஸ்லாமே வாழும், அது மாத்திரமே வாழும் நாகரிகம். நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) கூறினார்கள் இரவும் பகலும் இருக்கம் இடங்களிளெல்லாம் இம்மார்க்கம் சென்றடையும். களியாலும் தோல்களாலும் அமைக்கப்பட்ட குடிசைகளில் கூட இம்மார்க்கத்தை அல்லாஹ் நுழைவிக்காது விடமாட்டான். கண்ணியமானவரை கண்ணியப்படுத்தியோ, இழிவானவரை இழிவாக்கியோ செய்து முடிப்பான். அதாவது, இஸ்லாத்திற்கு கண்ணியத்தை பெற்றுத் தந்தும், இறை மறுப்பிற்கு இழிவைக் கொடுத்தும் இஸ்லாத்தை வாழச் செய்வான் (அஹ்மத் 22697). ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வித்யா எங்களை மன்னித்து விடு!

கனவுகளின் ஓடங்களில் நாங்கள் நீந்திச் சென்றதொரு பொழுதொன்றில்

நீ கடத்தப்பட்டாய்.

நாங்கள் மாலைத் தேநீரை ருசித்து அருந்திக் கொண்டிருந்தோம்.

உன் கைகள் பின்புறம் கட்டப்பட்டன.

நாங்கள் கடைவீதிக் கண்ணாடிகளால் குதியுயரக் காலணிகளை ரசித்துக் கொண்டிருந்தோம்.

நீ சிதைக்கப்பட்டாய்.

நாங்கள் வீடு திரும்பிக் குழந்தைகளைக் கொஞ்சினோம்.

மீண்டும் சிதைக்கப்பட்டாய்.

நண்பிகளுடன் தொலைபேசியில் நீண்டதாய் ஓர் அரட்டை.

இன்னுமொருமுறை சிதைக்கப்பட்டாய்.

நாங்கள் குளியலறைக்குள் நுழைந்தோம். நீ கொடூரமாய்க் கொலை செய்யப்பட்டாய். அந்த எட்டுக் கோழைகளையும் மிருகங்கள் என்று கூற விரும்பவில்லை.

மிருகங்கள் அன்பும் உள்ளார்ந்த உணர்வுகளும் பொருந்தியவை.

அரக்கர்கள் என்றும் கூறக் கூடாது. அம்புலி மாமாக் கதைகளில் இரக்கம் பொருந்திய அரக்கர்களையும் வாசித்திருக்கிறேன்.

பதினெட்டு வருடங்கள் அனுபவிக்காத் துயர் அனைத்தும் அந்தக் கணம் உன் உடலும் உள்ளமும் அனுபவித்திருக்கும்.

நீ உன்னைக் காப்பாற்ற முடியாது போன உலகத்தை சபித்திருப்பாய்.

நீ கடைசியாக என்ன சொல்ல விரும்பினாய் என்பதைக் கேட்கும் திராணி எங்களுக்கில்லை.

இந்தக் கொலைக் கொடூர மனசுகள் எப்படி ஒரு தாய்க்குப் பிறந்து, அவள் பாலருந்திய மனிதர்களுக்குள் வாய்க்கின்றன புரிவதே இல்லை.

பெண்ணை சக ஆத்மாவாகவல்லாமல் சதையாக பார்க்கப் பழக்கப்பட்டிருக்கும் மனிதர்கள் நிரம்பிய உலகொன்றில் மூன்று வயதுப் பிஞ்சுக்கும் எழுபதைத் தாண்டிய மூதாட்டிக்கும் கூட இருத்தல் பேரச்சத்துக்குரியதே.

வித்யா எங்களை மன்னித்து விடு.

சமீலா யூசுப் அலி

(மே மாதம் 13 ஆம் திகதி யாழ் புங்குடுதீவு மகா வித்தியாலயத்தின் உயர் தர வகுப்பு மாணவி வித்தியா சிவலோகநாதன் கூட்டுப் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டு கொல்லப்பட்டமை கண்டிக்கும் முகமாக எழுதப்பட்ட வரிகள்)



தயாரிப்பு: சமீலா யூசுப் அலி

## முதுமையை எந்தவித ஒப்பனைகளும் இல்லாமல் சந்திக்க விரும்புகின்றேன்

வயதாவதைப் பற்றிய பயத்தை மிகைத்து ஒரு விதமான கிளர்ச்சி எழுகிறது ஏன் எனப் புரியவில்லை.

அடிக்கடி அறுபது வயதுகளுக்குள் மனசு ஓடிப் பிடித்து விளையாடுகிறது.

அருந்ததிராய் எனக்கு மிகப் பிடித்த எழுத்துக்களுக்குச் சொந்தக்காரி.

நரைத்த சிகையின் கம்பீரத்தையும் மிடுக்கையும் அவரிடம் முதலில் பார்க்கிறேன்.

முதுமையில் அழகாக இருக்க வேண்டும் என நினைக்கிறேன். ஆனால், சுருக்கங்கள் இல்லாத மேனியும் கரு கரு சுருள் கூந்தலும் எப்பவும் இருக்க வேண்டும் என்ற பேராசை எல்லாம் கிடையாது.

இன்னொரு காலத்துக்குள் இருந்து கொண்டே நான் வாழ்ந்த காலம் பற்றிய பதிவுகள் எழுதுவதன் இன்பம் சுகிக்கவும்...

வாழ்வின் எல்லைகள், ஏமாற்றம், தோல்விகள் இவற்றின் வலிகளை மிகைத்த சாதனைகளை காலைத் தேநீரோடு அசைபோடவும்...

மனத்தை இறக்கை கட்டிப் பறக்கவிட்டு கடற்கரைக் கருக்கலில் ஏகாந்தமாயொரு கரும் புள்ளியாய் கரைந்து போகுமந்த நிமிடங்களுக்காகவும்...

என் எழுத்துக்களாலோ, வார்த்தைகளாலோ வாழ்வின் உயரங்கள் தாண்டிய ஆணோ பெண்ணோ பெருவெளியில் விசிறியிருக்கும் பிரார்த்தனைகளுக்காகவும்...

முதுமையை எந்தவித ஒப்பனைகளும் இல்லாமல் சந்திக்க விரும்புகின்றேன்.


அருந்ததிராய்

# சமையல் குறிப்புகள்



- கீரையை வேகவிடும்போது சிறிது எண்ணெய்யை அதனுடன் சேர்த்து வேக வைத்தால் கீரை பசுமையாக ருசியாக இருக்கும்.
- வெண்டிக்காய் சமைக்கும்போது ஒன்றோடு ஒன்று ஒட்டாமல் இருக்க, சமைப்பதற்கு முன் அதில் சிறிதளவு எலுமிச்சை சாறு தெளிக்கவும்.
- பாகற்காயை சிறு சிறு வில்லைகளாக நறுக்கி, முற்றியதாக இருந்தால் அகற்றி தேவையான அளவு எலுமிச்சை ரசத்தில் கொட்டி வெளியில் வைத்து ஊற வைக்கவும். ஒரு வாரத்தில் நன்றாக ஊறிப் பக்குவப்படும். தினமும் நன்கு குலுக்கி வெய்யிலில் வைக்க வேண்டும். கசப்பு துளியும் இராது. நீண்ட நாள் கெடாமல் இருக்கும்.
- தயிர் புளித்துவிடும் என்ற நிலை வருகிறபோது அதில் ஒரு துண்டு தேங்காயைப் போட்டு வையுங்கள். தயிர் புளிக்காது.
- காய்கறிகளில் சில காய்கள் கசப்பு சுவையுள்ளவை. அவற்றை நறுக்கி அரிசி களைந்த நீரில் சற்று நேரம் போட்டு வைத்தால் கசப்பு நீங்கிவிடும்.
- மோர் மிளகாய் தயாரிக்கும்போது அத்துடன் பாகற்காய்களையும் வில்லைகளாக அரிந்து போட்டு வற்றலாக்கலாம். பாகல் வற்றல் காரமுடனும், மிளகாய் சிறு கசப்புடன் சுவை மாறி ருசியாக இருக்கும்.
- பால்வைக்கும்பாத்திரம்எப்போதும் சுத்தமாக இருக்க வேண்டும். அப்போது தான் பால் கெடாமல் இருக்கும்.

# துவைக்காத ஜீன்ஸ் போடுவதால் ஏற்படும் தோல் அரிப்பு


இப்போதைய இளைஞர்களை அதிகம்பாதிக்கும் விஷயம் தோல் நோய். கல்லூரி விடுதிகளில் தங்கி பயிலும் மாணவர்களிடம் உடை மாற்றி அணியும் போக்கு அதிகமாக உள்ளது. அதேபோல், உள்ளாடைகளை எக்காரணம் கொண்டும் ஈரம் காயாமல் அணியக் கூடாது.

குளித்த பின் உடம்பை நன்கு துடைக்க வேண்டும். ஈரத்துடன் துணிகளை உடுத்தக் கூடாது. ஒருவர் அணிந்த உடையை மற்றவர்கள் அணியக் கூடாது. இவ்வாறு செய்தால் தோலில் படர் தாமரை நோய் ஏற்பட்டு அரிப்பு ஏற்படும். குறிப்பாக, கால் இடுக்குகளில்அரிப்பு ஏற்பட் டு சீல் வடிய ஆரம்பித்துவிடும்.

இதனால், காயம் ஏற்பட்டு அந்த பகுதியே கறுப்பாக மாறிவிடும். ஜீன்ஸ் பேண்ட் அணிபவர்களாக இருந்தாலும் அதை ஒரு நாள் மட்டுமே பயன்படுத்த வேண்டும். படர் தாமரை என்னும் தோல் அரிப்பு நோய் ஏற்பட்டால் 21 நாட்களுக்கு தொடர் சிகிச்சை எடுத்தால் குணமாகி விடும். தோல் வளர்ச்சி காரணமாக செதில் படை( சொரியாஸ்சஸ்) உண்டாகிறது. இந்த நோய் பரவாது.

தலையில் வெள்ளையாக மீன் செதில் போல் சிறியதாக காணப்படும். முழங்கால், முழங்கைகளில் கூட வரும். இதனால் மூட்டு வலி வரலாம். இந்த நோயால் பாதிக்கப்பட்டவர்கள் மது அருந்துதல் கூடாது. புகைபிடித்தல் கூடாது. மன அழுத்தம் இருக்க கூடாது. இவை இருந்தால் நோய் அதிகமாகும். இந்த நோயை எளிதில் குணப்படுத்தமுடியாது. மருந்துகள் மூலம் கட்டுப்படுத்தலாம்.








# "மன அழுத்தத்தையும் உருவாக்குது விற்றமின் குறைபாடு"

சோர்வாக உணர்கிறீர்களா? அடிக்கடி கை கால்களில் வலியா? சிறிய வேலையில் கூட கவனம் செலுத்த முடியவில்லையா? உடல் பலவீனமாக இருப்பது போல தோன்றுகிறதா? உங்களுக்கு இந்த நோயா? அந்த நோயா? என்று விளம்பரங்கள் பயமுறுத்துகின்றனவா? பயப்படாதீர்கள்... விற்றமின் குறைபாடு கூட உடல் சோர்வையும் மன அழுத்தத்தையும் உருவாக்கும். குறிப்பாக, விற்றமின் பி 12 குறைபாடு என்னென்ன பிரச்சினைகளை உருவாக்கும் எனப் பார்ப்போம்.

இன்றைய இளைஞர்களின் ஃலைப்ஸ்டைல் பெருமளவில் மாறிவிட்டது. பலர் சரியான நேரத்துக்கு சாப்பிடுவதில்லை. இளம் பெண்களோ டயட் என்ற பெயரில் உணவின் அளவையே குறைத்து விடுகிறார்கள். இதெல்லாம் தவறான அணுகுமுறை. உடற்பயிற்சிகள் மூலம் மட்டுமே படிப்படியாக எடையை குறைக்க வேண்டும். அதுவே உடல் நலத்துக்கு நல்லது. சாப்பிடாமலே இருந்து திடீரென 10 கிலோ எடை குறைப்பதென்பது சத்துக் குறைபாட்டை ஏற்படுத்திவிடும். துரித உணவுகள் அதிகம் எடுத்துக் கொள்பவர்களுக்கும் விற்றமின் குறைபாடு ஏற்படும். காலை உணவை தவறவிடாமல் 9 மணிக்குள் சாப்பிடுவது அவசியம்.

சரியாக காலை உணவை சாப்பிடாதவர்களுக்கு நீரிழிவு பிரச்சினை [illegible] விற்றமின், [illegible]கள் உடலில் குறைந்தால் சோர்வாகக் காணப்படுவார்கள் ரத்தத்தில் உள்ள குளுக் கோஸ் அளவு குறையும். இதனால் வேலையில் கவனம் செலுத்த முடியாது. சில இளம் பெண்கள் நெஞ்சைப் பிடித்துக் கொண்டு வலி என்பார்கள். சரியான நேரத்தில் உணவு சாப்பிடாமல் இருப்பதால் ஏற்படும் நெஞ்செரிச்சலே இதற்கான காரணம். குறிப்பாக, பச்சைக் காய்கறிகள், பழங்கள், பசளிக் கீரை, பருப்பு வகைகள், உலர் பழங்கள் ஆகிய விற்றமின் நிறைந்தவற்றை உணவில் சேர்த்துக் கொள்வது அவசியம்.

மன அழுத்தத்தையும் சோர்வையும் உருவாக்குவதில் விற்றமின் பி 12 குறைபாடும் பங்கு வகிக்கிறது. நமது நரம்புகளுக்கும் மூளைக்கும் தேவையான செல்களை இயங்க வைப்பதில் விற்றமின் பி 12 க்கு முக்கிய பங்குண்டு. அதனால் விற்றமின் பி 12 குறைபாடானது உடல் சோர்வு, மன அழுத்தம், மறதி நோய் போன்ற மூளை மற்றும் நரம்பு சார்ந்த நோய்கள் வருவதற்கு காரணமாக அமைகிறது. குடல் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டவர்களுக்கும் கேஸ்டரைடிஸ் எனப்படும் வாயுப் பிரச்சினை உள்ளவர்களுக்கும் பெர்னிஸியஸ் அனீமியா எனப்படும் இரத்தசோகை நோய் உள்ளவர்களுக்கும் எடை குறைய அறுவை சிகிச்சை செய்து கொண்டவர்களுக்கும் விற்றமின் பி 12 சத்து உடலில் உறிஞ்சப்படும் அளவு குறையும் குறைபாடு ஏற்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொதுத் தேர்தலுக்கான...

(09 ஆம் பக்கத் தொடர்)

திகாம்பரமும் இராதா கிருஷ்ணனும் ஐ.தே.க. வைச் சேர்ந்த வேலாயுதமும் கூடவே மனோ கணேசனும் ஒன்றிணைந்து இ.தொ.கா. வை எதிர்கொள்வதற்கான பேச்சுகள் நடந்து வருகின்றன. பதுளையில் இந்த அணியுடன் வடிவேலு சுரேஷ் இணைவார். ஐ.தே.க. வின் கீழ் யானைச் சின்னத்தில் இவர்கள் களமிறங்கி தமது வேட்பாளர்களையும் களமிறக்குவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

மேலே விவரிக்கப்பட்ட மாதிரியே இக்கூட்டணி அமையுமானால் இதுவரை எதிர்கொண்ட தேர்தல் சவால்களிலே மிகப் பெரிய சவாலாக இது இ.தொ.கா. வுக்கு அமையும். இ.தொ.கா. வின் தேர்தல் பிரசார முறைமைகளில் அடிதடியும் ஓர் அங்கமாக இருப்பது வழக்கம். மலையக மக்கள் முன்னணி மற்றும் சிறிய மலையகக் கட்சிகளுக்கு இதை எதிர்கொள்வது பெரும் பிரச்சினையாக இருந்தது. ஆனால், அடிதடியென்றால் அதற்கும் ரெடி என்ற சிந்தனை கொண்ட திகாம்பரமும் இப்போது இக்கூட்டணியில் இருப்பதால் இக் கட்சிகள் புத்துணர்வு பெற்றுள்ளன.

எனவே, எதிர்வரவிருக்கும் பொதுத் தேர்தல் மலையகத்தில் அனல் கிளப்புவதாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. திகாம்பரம், வேலாயுதம், இராதாகிருஷ்ணன், வடிவேலு சுரேஷ் ஆகியோர் அமைச்சர்களாகவும் இராஜாங்க அமைச்சர்களாகவும் இருக்கின்றார்கள். அவர்களுக்கு அரசு பலமும் பொலிஸ் தயவும் கிடைக்கும். மிக நீண்ட காலத்தின் பின்னர் இ.தொ.கா. அரசு பலமின்றி பொலிஸ் ஆதரவின்றி நிராயுத பாணியாக இத்தேர்தலை சந்திக்கப் போகின்றது.

இப்பாதகமான அம்சங்களையும் தாண்டி இ.தொ.கா. வினால் ஐந்து உறுப்பினர்களை பெறக் கூடுமானால் ஆறுமுகன் தொண்டமான் புடம்போட்ட தங்கமாக மிளிருவார் என்பதில் சந்தேகம் இல்லை.

## சுவிஸ்...

(05 ஆம் பக்கத் தொடர்)

நிகில் கிஷோர் என்பவர் 817,446 டொலர் நிதியையும் வினோத் கிஷோர் என்பவர் 646,243 டொலர் நிதியையும் வைப்புச் செய்துள்ளனர்.

இவை தவிர, சுவிஸ் வங்கிக் கணக்குகளை தொடர்ந்தும் பேணிச் சென்று விட்டு அவற்றை இடையில் நிறுத்திக் கொண்டவர்களது தகவல்களும் வெளியாகியுள்ளன. இதில் பிரபலமானதொரு நபராக செலிங்கோ கூட்டுத்தாபனத்தின் அதிபர் லலித் கொத்தலாவெலவினை குறிப்பிடலாம். ஆயிரக்கணக்கிலான பண வைப்பாளர்களை இடைநடுவில் திக்குமுக்காடச் செய்தமைக்கூடாக உடைந்து போன கோள்டன் கீ கூட்டுத்தாபனத்தின் சொந்தக்காரரும் இவரே ஆவார். 1988 ஆம் ஆண்டு டிசெம்பர் 21 ஆம் திகதி HSBC வங்கியில் கணக்கொன்றை துவங்கிய இவர், எட்டு வருடங்களின் பின்னர் 1997 மார்ச் 3 ஆம் திகதி அக்கணக்கை இடைநிறுத்திக் கொண்டுள்ளார்.

தயா ரஞ்ஜித் என்பவரும் இவ்வாறு வெளிநாட்டு வங்கிக் கணக்கொன்றை ஆரம்பித்துவிட்டு திடீரென மூடிவிட்டுள்ளார். இவ்வாறு வெளிப்படுத்தப்பட்டுள்ள தகவல்கள் சுவிஸ் வங்கிகளில் 2007 ஆம் ஆண்டு வரையில் கணக்கு வைத்திருந்தவர்களின் தகவல்கள் மாத்திரம் என்பதாக சர்வதேச புலனாய்வுப் பத்திரிகை சம்மேளனம் தெரிவிக்கின்றது. ஆனால், அதன் பின்னர் கடந்து சென்ற 8 வருட காலத்திற்குள் இந்நாட்டின் மக்கள் சொத்துகள் அதிகளவில் சூறையாடப்பட்டுள்ளன. இலஞ்சம், ஊழல், மோசடி என்பன இக்காலப் பகுதியிலே வரலாற்றில் கறுப்புக்கறை படிந்த விடயங்களாக பதியப்பட்டன. இக்காலப் பகுதியில் பேணப்பட்ட சுவிஸ் கணக்குகள் பற்றிய தகவல்கள் எதுவும் வெளிப்படுத்தப் படவில்லை. இதனை வெளிப்படுத்துவது அரசாங்கத்தின் கடமையாகும்.

## கலாநிதி முர்ஸிக்கு...

(13 ஆம் பக்கத் தொடர்)

முர்ஸிக்கு ஆதரவாக ஆர்ப்பாட்டம் செய்த அனைவரையும் எகிப்திய இராணுவம் வேட்டையாடியது. இதனால் பல ஆயிரக்கணக்கான மக்கள் ஸஹீதாக்கப்பட்டனர்.

**கலாநிதி முர்ஸி மீதான மரண தண்டனை**

ஜனநாயகத் தேர்தலொன்றின் மூலம் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட கலாநிதி முர்ஸி மற்றும் இஹ்வான்களின் முக்கியஸ்தர்கள் பலர் உள்ளடங்கலாக 100 பேருக்கு எகிப்திய நீதிமன்றம் மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.

எகிப்தில் அப்துல் பத்தாஹ் ஸீஸியின் ஆட்சியில் குரூரமான படுகொலைகள், மனித உரிமை மீறல்கள், கருத்துச் சுதந்திரத்தை நசுக்குதல் என இராணுக் கரங்களின் ஒடுக்குமுறை ஆட்சி நடைபெறுகின்றது.

எழுச்சிப் போராட்டத்தின் போது, அரச படைகளின் கனரக ஆயுதங்களின் குண்டுகளால் அப்பாவிகளை சல்லடையாக்கி நாட்டின் பொருளாதாரத்தை விழுங்கிய முபாரக்கிற்கு மூன்று வருட சிறைத் தண்டனையும் முர்ஸிக்கு மரண தண்டனையும் வழங்கி தீர்ப்பளித்த எகிப்திய நீதித்துறையின் அநீதிப் போக்கை விமர்சித்து அது தொடர்பாக சர்வதேச சமூகம் கேள்வி எழுப்பியும் வருகிறது.

ஸீஸியின் ஏகாதிபத்திய ஆட்சிக்கு எதிரான ஜனநாயகத்தை நேசிப்பவர்கள் அனைவரும் அநாவசியமாக குற்றஞ்சாட்டப்பட்டு சட்டத்தால் தண்டனைக்கு உட்படுத்தப்படுகின்றனர். எகிப்தின் காவல்துறை, பொதுத்துறை நிர்வாகம், நீதித்துறை எல்லாம் இராணுவக் குடையின் கீழே ஆட்டிப் படைக்கப்படுகின்றன. இப்படியான ஓர் ஆட்சியில் எகிப்திய மக்கள் நியாயமான, நீதியான தீர்ப்பை எப்படி எதிர்பார்க்க முடியும்? ஸீஸியின் ஆட்சி ஜனநாயகத்தையும் நீதியையும் குழிதோண்டிப் புதைத்து கொடுங்கோலில் கோலோச்சுகிறது என்பதைத் தவிர வேறொன்றும் இல்லை.

## ராஜபக்ஷாக்களுக்கு...

(02 ஆம் பக்கத் தொடர்)

ராஜபக்ஷாக்கள் மனித உரிமையை மதித்த விதம். ஆனால், இன்று அதே ராஜபக்ஷாக்கள் மனித உரிமைகளைக் கோரி நீதிமன்றப் படிக்கட்டுக்களில் ஏறி இறங்குவது வரலாற்றின் கிண்டலா? டிமென்ஷியா நோயா? அல்லது அவை இரண்டுமா?

'இது பொலிஸ் அரசு' என்று கோதபாய கூறியது சென்ற ஏப்ரல் 23 ஆம் திகதி. பொலிஸ் அரசை பார்க்க வேண்டும் என்றால் கோதபாய ராஜபக்ஷ, தாம் ஆட்சியில் இருந்த நாட்களில் உள்நாட்டு வெளிநாட்டு தொலைகாட்சி சேவைகளுக்கு வழங்கிய கரடு முரடான நேர் காணல்களைப் பார்வையிட வேண்டும். லசந்த விக்ரமதுங்க என்பவன் எவன்? என்று ஒரு நேர்காணலில் கேட்ட கோதபாய வேறொரு நேர்காணலின் போது கூறினார், நான் சரத் பொன்சேகாவைத் தூக்கில் இடுவேன். அந்த அளவுக்கு சத்தம் போட்ட கோதபாய இன்று பொலிஸ் ஆட்சியைப் பற்றி பேசுகின்றார்.

2010 ஜனாதிபதி தேர்த்லின் இரண்டு நாட்களின் பின்னர் ஜனவரி 28 ஆம் திகதி தனது கையடக்க தொலைபேசி 0773501626 இலிருந்து அப்போதைய ஜே.வி.பி. தலைவர் சோமவங்ச அமரசிங்கவுக்கு கோதபாய உயிர் அச்சுறுத்தல் விடுத்தார். நீ, லங்கா பத்திரிகையை மூடவில்லை என்றால் நெருப்பு வைப்பேன். நீயும் கவனமாக இருந்து கொள். பிறகு லங்கா பத்திரிகை அலுவலகம் சட்டவிரோதமாக கோதபாயவின் பொலிஸினால் சீல் வைக்கப்பட்டது.

நான் உன்னை கொல்லுவேன் என்று 2006 ஜனவரி 11 ஆம் திகதி சன்டே லீடர் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவை அச்சுறுத்தியவர் அன்றைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. லசந்த ஊடகங்களுக்குத் தெரிவித்த பிரகாரம் மஹிந்த ராஜபக்ஷ அவரை கடும் தூஷண வார்த்தைக்களினால் ஏசியிருந்தார். அந்த அச்சுறுத்தல்படியே 2009 ஜனவரி 08 ஆம் திகதி லசந்த கொலை செய்யப்பட்டார்.

இன்று பொலிஸ் அரசைப் பற்றியும் ஹிட்லரின் ஆட்சி பற்றியும் பேசுவது இந்த ராஜபக்ஷாக்கள்தான். நல்லாட்சி என்பது ஹிட்லரின் ஆட்சிக்குப் பின்னர் உருவான ஆட்சியென்பது தற்போது உறுதியாகிக் கொண்டு வருகின்றது என்று மஹிந்த ராஜபக்ஷ இம் மாதம் 07ஆம் திகதி வெலிகடை சிறைச்சாலை அருகில் நடந்த கூட்டமொன்றில் கூறினார்.

ஆனால், இந்த ராஜபக்ஷாக்களுக்கு ஹிட்லர் தனது ஆட்சியை தக்கவைத்துக் கொள்ள செய்த அனைத்தையும் தாங்களும் செய்தோம் என்பது இன்று நினைவில் இல்லை. தமக்கு நிரந்தரமாக ஆட்சியில் இருக்க முடியும் என்று நினைத்த ஹிட்லர் அரசியலமைப்பை 1993 இல் மாற்றிக் கொண்டார். அவ் அரசியலமைப்புத் திருத்தத்தின் பின்னர் பாராளுமன்றத்தை வலுவிழக்கச் செய்த ஹிட்லர் ஆட்சி அதிகாரத்தைத் தனது கைகக்குள் வைத்துக் கொண்டார். ராஜபக்ஷாக்கள் 18 ஆம் அரசியலமைப்புத் திருத்தத்தின் மூலம் செய்து கொண்டதும் அதைத்தான். சாகும் வரை ஆட்சியில் இருக்கலாம் என்று ராஜபக்ஷாக்கள் நினைத்திருந்தார்கள்.

இப்படிப்பட்ட ராஜபக்ஷாக்கள் மனித உரிமைகள் பற்றி போதனை செய்வதைக் கேட்டுத் தொலைக்க வேண்டியிருப்பது ஒன்று நமக்கு பைத்தியம்! அல்லது அவர்களுக்குப் பைத்தியம்!

## றொஹிங்ய...

(முன் பக்கத் தொடர்)

ஐக்கிய சமாதான முன்னணி ஏற்பாடு செய்த மியன்மாரில் வாழும் முஸ்லிம்களுக்கு ஆதரவான கண்டனப் பேரணி ஜும்ஆ தொழுகைக்குப் பின் கொழும்பு தெவட்டகஹ பள்ளியில் இருந்து ஆரம்பித்து ரொஸ்மிட் பிலேசில் உள்ள மியன்மார் தூதரகம் வரை சென்றிருந்தது.

அமைச்சர் றிஷாட் பதியுதீன், மேல் மாகாண சபை உறுப்பினர்கள் முஜிபுர் ரஹ்மான், பைருஸ் ஹாஜி, தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அசாத் சாலி ஆகியோர் ஊர்வலமாகச் சென்று தூதுவரிடம் கண்டன அறிக்கையையும் கையளித்ததோடு, அப்பாவி மக்களை கொன்று குவிப்பதை உடனடியாக நிறுத்துமாறும் வேண்டிக் கொண்டனர்.

தூதுவராலயத்திற்கு முன்பாக அந்த நாட்டுக் கொடி எரிக்கப்பட்டதுடன் அம் மக்களுக்காக துஆப் பிரார்த்தனையும் இடம் பெற்றது.

## "மஹிந்தவின்...

(முன் பக்கத் தொடர்)

மஹிந்த ராஜபக்ஷவைத்தான் பிரதம வேட்பாளராக நியமிக்க வேண்டுமென விரும்புபவர்கள் கட்சியை விட்டு வெளியேறி அவரோடு இணைந்து செயற்படலாம். அதேநேரம், ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிராக நான் எப்போதும் செயற்பட மாட்டேன். ஏனெனில், நல்லாட்சியை ஏற்படுத்துவதற்கு உத்தரவாதம் அளித்தவர் ரணில்.

ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக பாராளுமன்றத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வருவதற்கும் இடமளிக்க மாட்டேன் எனவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

## 20 ஆம்...

(முன் பக்கத் தொடர்)

முறைமையில் மாற்றம், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையில் உள்ள அதிகாரங்களைக் குறைத்தல் என்பனவற்றை தான் வெற்றி பெற்றால் நிறைவேற்றுவேன் எனத் தெரிவித்திருந்தார். அந்த வகையில் 19 வது திருத்தத்தின் ஊடக ஜனாதிபதிக்குரிய சில அதிகாரங்கள் குறைக்கப்பட்டு சுயாதீன ஆணைக்குழுக்கள் மீளவும் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் தேர்தல் முறைமையில் மாற்றத்தை ஏற்படுத்தி தற்போதுள்ள விகிதாசார முறைமையினை மாற்றி, விருப்புவாக்கு முறைமையினை முற்றாக நீக்கி, தொகுதிவாரியான தேர்தல் முறையினைக் கொண்டு வர வேண்டும் என சில பிரதான அரசியல் கட்சிகள் கோரிக்கை விடுத்துள்ளன. அவ்வாறு மாற்றம் செய்யப்படும் இடத்து சிறிய மற்றும் சிறுபான்மை கட்சிகள் பாதிக்கப்படும் சூழல் காணப்படுவதால் கலப்பு முறைத் தேர்தல் முறைமை கொண்டு வரப்பட வேண்டும் என சிறுபான்மை கட்சிகள் வலியுறுத்தி வருகின்றன.

அதேவேளை, தேர்த்தல் முறைமையில் மாற்றம் ஏற்படுத்துவதற்கு அரசியல் அமைப்பில் 20 வது திருத்தத்தைக் கொண்டு வர வேண்டும். அவ்வாறு கொண்டு வரும் திருத்தத்திற்கு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு ஆதரவு கோரப்படும். அந்த நிலையில் தற்போதுள்ள தேசிய அரசாங்கத்தில் அதற்கான ஆதரவு பெரும்பான்மையாக உள்ளமையினால் 20 வது திருத்த சட்டமூலத்தினை உடனடியாக பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்குமாறு மக்கள் விடுதலை முன்னணி உள்ளிட்ட சில கட்சிகள் வலிறுத்தி வருகின்றன.

தேர்தல் முறைமை மாற்றத்தின் ஊடாக பாராளுமன்றத்திற்கான பிரதிநிதித்துவம் 255 ஆக அதிகரிக்கப்பட்டு, சனத்தொகைக்கு ஏற்ப பிரதிநிதித்துவம் பகிரப்பட வேண்டும் என்பது சிறுபான்மை கட்சிகளின் கோரிக்கையாகும்.

## றொஹிங்ய...

(முன் பக்கத் தொடர்)

றொஹிங்யாக்கள் விவகாரம் மிகவும் சிக்கலானது. அங்கு ஷூகியின் ஜனநாயகத்துக்கான தேசிய முன்னணி இந்த ஆண்டின் இறுதியில் நடக்கவுள்ள தேர்தலில் போட்டியிடுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# "15 புதிய அம்சங்களில் எம்பிக்களின் தொகை உயரும்"

15 அம்சங்கள் உள்ளடங்கும் வகையில் புதிய 20 ஆவது திருத்தச் சட்டமூலம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டு விரிவாக ஆராயப்பட்டது. சிறு மற்றும் சிறுபான்மை கட்சிகளையும் பாதுகாக்கும் வகையில் எம்பிகள் தொகை 255 ஆக உயர்த்தப்பட்டுள்ளது என அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் 20 ஆவது திருத்தம் குறித்து வினவப்பட்டது. இதற்குப் பதிலளித்த அவர், புதிய யோசனையிலுள்ள 15 அம்சங்களில் 225 எம்பிகள் தொகை 255 ஆக உயரும். இது தொடர்பில் எந்த கட்சியும் யோசனை முன்வைக்கவில்லை. தொகுதிவாரி முறை மற்றும் பல்தொகுதி முறையின் கீழ் 165 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட இருப்பதோடு எஞ்சிய 90 பேரும் மாவட்ட விகிதாசார முறை மற்றும் தேசிய பட்டியல் மூலம் தெரிவு செய்யப்படுவார்கள்.

தேசியப் பட்டியல் எம்.பி. தொகை குறைக்கப்படும். மாவட்ட விகிதாசார முறை மூலம் தெரிவாகும் தொகையில் எஞ்சிய தொகை தேசிய பட்டியல் எம்பிகளாக தெரிவாகுவர்.

20 ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்ட பின்னரே பாராளுமன்றம் கலைக்கப்படும். அதற்கு முன்னர் தகவலறியும் சட்ட மூலம், கணக்காய்வு என்பனவும் நிறைவேற்றப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மியன்மார்...

(03 ஆம் பக்கத் தொடர்)

தேர்தலில் ஆங் காங் ஷுகியின் NLD அமோக வெற்றியீட்டி, ஜனாதிபதி தெய்ன் செய்னின் USDP யைப் பின்னே தள்ளியது.

இந்நிலையில், அசின் விராது தேரருடைய முஸ்லிம் விரோதக் கருத்துக்களும் அவருடைய இயக்கச் செயற்பாடுகளும் பர்மாவின் எல்லா பகுதிகளுக்கும் பரவின. அதுமாத்திரமின்றி, இனங்கள்சார்ந்த இயக்கங்கள், கட்சிகள் மற்றும் படித்த மக்களிடையேயும் அக்கருத்துக்கள் வேரூன்றவும் தொடங்கின. ஜூன் 2012 இல் ரொஹிங்கிய முஸ்லிம்களுக்கெதிராக இனக் கலவரங்கள் கட்டவிழ்த்து விடப்பட்டன. ஆகஸ்ட் மாதத்தில் நிலைமை படுமோசமான நிலைமைக்குத் தள்ளப்பட்டது. அம்னஸ்டி இன்டர் நெஷனலின் கூற்றுப்படி ரொஹிங்கிய முஸ்லிம்களின் மீது நன்கு திட்டமிட்டு நடத்தப்பட்ட இத்தாக்குதல்களில் கடும்போக்கு பௌத்த இனவாதிகளுடன் சில பிக்குகள் மற்றும் அரசாங்கத்தைச் சேர்ந்த படையினரும் நஸாக்கா எல்லைப் பாதுகாப்புப் படையும் பங்கேற்றிருக்கின்றன. ரொய்ட்டர் செய்திச் சேவை மற்றும் ஹியுமன் ரைட் வொட்ச் அமைப்பு ஆகியவற்றின் அறிக்கைக்கு அமைய 192 முஸ்லிம்கள் கொல்லப்பட்டதுடன் 140,000 முஸ்லிம்கள் சித்வே மற்றும் பங்காளாதேஷின் எல்லையை அண்டிய பகுதிகளில் அகதிமுகாம்களில் வாழ்வதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டனர்.

மீண்டும் மார்ச் 2013 இல் நடத்தப்பட்ட தாக்குதல்களினால் 44 முஸ்லிம்கள் கொல்லப்பட்டதுடன் 13,000 முஸ்லிம்கள் இடம்பெயர்ந்துள்ளனர். ஐ.நா. வின் அறிக்கையின்படி, கடந்த மூன்று வருடங்களில் 120, 000 ரோஹிங்கிய முஸ்லிம்கள் நாட்டை விட்டு தப்பியோடியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இவ்வாறு இந்த இனப் படுகொலையும் அச்சுறுத்தல்களும் பர்மாவில் அவ்வப்போது தொடர்ந்து கொண்டிருப்பதால் அந்நாட்டிலிருந்து வெளியேறி ஏனைய நாடுகளில் தஞ்சம் கோருவது மட்டுமல்லாமல் பல இன்னல்களையும் இம்மக்கள் அனுபவித்து வருகின்றனர்.

மேற்படி சம்பவத்துடன் தொடர்புபட்டவர்களைக் கைது செய்வதற்கு தெய்ன் செய்னின் அரசாங்கம் தவறியதுடன் அசின் விராது தேரர் மற்றும் அவருடைய இயக்கத்திற்கு ஆதரவான போக்கையே தெய்ன் செய்னின் அரசாங்கம் மற்றும் அதில் உயர் பதவி வகிக்கும் அநேகரும் கொண்டுள்ளனர். 1988 இல் இராணுவ ஜுன்டாவிற்கு எதிராகக் கிளம்பிய 88 இயக்கம் எனும் அமைப்பின் தலைவர் மற்றும் அநேக அங்கத்தினரும் கூட, முஸ்லிம் விரோத முன்னெடுப்புகளுக்கு தமது ஆதரவை வழங்குகின்றனர். ஆங் சாங் ஷுகியின் கட்சியைச் சேர்ந்த முக்கியஸ்தர்கள் சிலரும் கூட தமது ஆதரவை தெரிவித்திருக்கும் அதேநேரம், ஆங் சாங் ஸுகி மேற்படி நிகழ்வு குறித்து மௌனம் காத்தார். மதம் மற்றும் இனம் சம்பந்தப்பட்ட விடயங்களில் தம்மால் ஒன்றும் செய்ய முடியாது என்று தெரிவித்துள்ளார். ரொஹிங்கியா என்பது பர்மாவின் குடியுரிமை உடையோரல்லர் என்று பரவலாக கொண்டு செல்லப்படும் கருத்தை ஜனாதிபதி தெய்ன் செய்ன் பறைசாற்ற முற்படுகிறார். மேலும், ஐ.நா. வினால் மறுப்புத் தெரிவிக்கப்பட்ட சர்ச்சைக்குரிய கருத்தான ரொஹிங்கிய முஸ்லிம்கள் மூன்றாம் தரப்பான நாடொன்றில் சென்று குடியேறட்டும் என்ற கூற்றையும் முன்வைத்தார். இதனைத் தொடர்ந்து 2014 மார்ச் ஏப்ரலில் பர்மாவில் தேசிய மட்டத்தில் நடைபெற்ற சனத்தொகைக் கணிப்பீட்டில் ரொஹிங்கிய முஸ்லிம்கள் கணக்கில் எடுக்கப்படவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

2012 இடைத் தேர்தல் பெறுபேறுகளைத் தொடர்ந்து கலக்கமடைந்த ஜனாதிபதி தெய்ன் செய்ன் தான் இராணுவ ஜுன்டாவில் அங்கம் வகிக்கும் காலத்தில் தனது சகபாடிகளால் உருவாக்கப்பட்ட மூலோபாயத்தில் இருந்து பலனடைவதற்கு எத்தனிக்கின்றார். ஏற்கனவே வளர்க்கப்பட்டிருந்த விஷச் செடியின் அறுவடையை தமது இருப்பினை உறுதி செய்து கொள்வதற்கும் தமது திட்டங்களை முன்னெடுப்பதற்கும் பயன்படுத்திக் கொள்வதே அவரின் வியூகமாகும். பர்மிய மக்கள் மத்தியில் ஏற்படுத்தப் பட்டிருக்கும் முஸ்லிம் விரோத கருத்தியலை ஆதரித்து அதனை போஷிக்கும் முன்னெடுப்புக்களைத் தொடருவதன் மூலம் தமக்கான மக்களின் செல்வாக்கை மீளுறுதி செய்து கொள்தல் மற்றும் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் திட்டங்களை எதிர்க்கும் மக்களின் கருத்தியலை திசை திருப்பி நகர்தலுமே இவ்வியூகத்தின் விரிவாகும்.

2010 நவம்பரில் சர்வதேசத்தின் ஆதரவை இலக்கு வைத்து ஆங் சாங் ஷுகியின் விடுதலை அமைந்தது. தனது தொடர்ச்சியான ஜனநாயகப் போராட்டத்தின் விளைவாக மக்கள் செல்வாக்கைப் பெற்றுள்ள ஆங் சாங் ஷுகி, தனக்கும் தனது கட்சிக்கும் ஒரு சவாலாக வருவார் என்பதை தெய்ன் செய்ன் அறியாமல் இல்லை. அவ்வாறான அரசியற் சூழல் ஏற்படும்போது, ஏற்கனவே புரையோடியிருக்கும் முஸ்லிம் விரோத கருத்தியலை ஆதரித்து, பர்மிய பெரும்பான்மை பௌத்தர்களின் ஆதரவை தனதாக்கி முன்னேற ஜனாதிபதி தெய்ன் செய்னுக்கு முடியுமாகும். இதுவே, ஆங் சாங் ஷுகியின் விடுதலையைத் தொடர்ந்தான அசின் விராது தேரருடைய விடுதலைக்குமான பின்னணியாகும்.

பெரும்பான்மை பௌத்தர்களின் பொதுக் கருத்து பர்மிய முஸ்லிம்களுக்கு எதிராக இருக்கும் நிலையில் தாம் நியாயத்தைப் பேசுவதற்கு முற்பட்டால் அது, தனது அரசியலில் பாதகமான விளைவைத் தரும் என்பதை உணர்ந்ததே, ஆங் சாங் ஷுகியின் இந்நிகழ்வுகள் குறித்த மௌனத்திற்குக் காரணமாகும். ரொஹிங்கிய முஸ்லிம்கள் முன்னர் வாழ்ந்த பிரதேசங்களை உள்ளடக்கியதாக 'இயற்கை வாயு மற்றும் எண்ணெய் ஆய்வுப் பிராந்தியங்கள்' ( Oil & Gas Exploration Area) எனப் பெயரிடப்பட்டுள்ளன. இவ்வாறு பர்மா முஸ்லிம்களின் வாழ்விடங்களை அவர்களது வரலாறுகளை துடைத்தெரியும் முயற்சிகள் அரங்கேறுகின்றன. அவர்கள் வாழும் பூமி அவர்களுக்கு சூன்யமாகவே மாறி விட்டது. அவர்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளை சர்வதேசம் கண்டு கொள்ளாமலே இருக்கிறது.




வெலம்பொட ராஃபி

11

கண்ணுக்குத் தென்படும் தூரத்தில் அந்த நபர் இருந்தும் அவரைச் சந்திக்கும் வாய்ப்பு கிடைக்கவில்லை. பகலுணவிற்காக சிற்றுண்டிச்சாலைப் பக்கம் அழைத்துச் செல்லப்பட்டோம். வழமை போலவே பகலுணவு பரிமாறப்பட்டது. அன்று பணிக்காக வந்திருந்த அனைவரும் ஒன்றாகவே உணவருந்தினோம். தூக்குமேடை குறித்த அனைவரதும் பேச்சு அதனைக் காண அவர்களிடம் இருந்த ஆர்வத்தை வெளிப்படுத்திக் கொண்டிருந்தது. இன்றோ, நாளையோ தூக்குமேடையைப் பார்வையிடப் போகின்றோம். அதிலிருக்கும் ஒவ்வொரு பொருளையும் ஒவ்வொன்றாகக் கணக்கிடப் போகின்றோம். இந்தப் பகுதிக்கு எந்தக் குழு செல்லும் என்ற கவலை எமக்கு இருக்கவில்லை. மற்றைய பகுதிகளுக்கு ஒவ்வொரு குழுவாக சென்ற போதிலும் தூக்குமேடைக்கு அனைவரும் அழைத்துச் செல்லப்பட இருக்கின்றோம்.

இலங்கையில்,இரண்டு சிறைச்சாலைகளிலேயே தூக்குமேடைகள் அமைக்கப்பட்டுள்ளன. ஒன்று, வெலிக்கடை மற்றையது, போகம்பற. தூக்குமேடைகள் எவ்வாறிருக்கும்? எங்கள் அனைவருக்குள்ளுமே அப்போதிருந்தே தோன்றும் பொதுவான கேள்வி இது. ஒரு கம்பம் நடப்பட்டு அந்தக் கம்பத்தின் உச்சியில் சுருக்குக் கயிறு மாட்டப்பட்டிருக்குமா? அல்லது இரண்டு கம்பங்கள் நடப்பட்டு அதற்கிடையில் குறுக்காக ஒரு கம்பம் இட்டு அதன் மீது சுருக்குக் கயிறு கட்டப்பட்டிருக்குமா? இப்படித்தான் ஒவ்வொருவரும் நினைத்துக் கொண்டிருப்போம். தூக்குமேடையைத் தரிசிக்கும் வரை இவ்வாறான கற்பனைகளைத் தவிர்க்க முடியாது.

தூக்குமேடை எந்த அமைப்பில் இருக்கும் என்பதை கற்பனையில் கொண்டு வருவதில் நாம் தோற்றுப் போனோம். இங்கு விநோதம் என்னவென்றால், சிறைச்சாலையில் பணிபுரிந்த அதிகாரிகளில் பலர் தூக்குமேடையைக் கண்டிருக்கவில்லை. 1976 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 23 ஆம் திகதி வெலிக்கட சிறைச்சாலையில் ஹொந்த பப்புவா (நல்ல நெஞ்சுக்காரன்) என்ற புனைப்பெயரில் அழைக்கப்படும் ஜே.ஏ. சந்திரதாச என்பவர் தூக்கிலிடப்பட்டதைத் தொடர்ந்து, தூக்குமேடை நிரந்தரமாகவே மூடப்பட்டுவிட்டது. அதன் பின்னர் தூக்கு மேடை இன்று வரை திறக்கப்படவில்லை. 1978 ஆம் ஆண்டில் ஜனாதிபதியான ஜே.ஆர்.ஜயவர்தன அந்த ஆண்டு தூக்கிலிடும் ஆவணங்களில் கையெழுத்திட மறுத்தமையே தூக்குமேடை மூடப்பட்டதற்கு காரணமாக அமைந்தது.

சாகும் வரையில் தூக்கிலிட்டு தண்டனை வழங்கும் சட்டமுறைமை 1779 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. எனினும் 1812 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி முதலாவது தூக்குத் தண்டனை நிறைவேற்றப்படுகின்றது. ஆங்கிலேயருக்கு எதிராக செயற்பட்டார் என காரணம் காட்டி இங்கிரிய பகுதியில் வசித்த கழுஅப்பு என்பவரே முதலாவது தூக்கிலடப்பட்டவராவார். அன்றைய காலத்தில் களனி பிரதேசத்தில் ஒரு திறந்த வெளியில் அமைக்கப்பட்டிருந்த ஒரு தூக்கு மேடையே இதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. தூக்கிலிடும் பணிக்காக நியமிக்கப்பட்டுள்ள அலுகோசுவா எனும் பதவிக்குரியவருக்கு இந்த தூக்குத் தண்டனையை நிறைவேற்றியமைக்கான ஊதியமாக மூன்று பவுன்கள் வழங்கப்பட்டன. அத்துடன், அலுகோசுவாவின் சீருடைக்காக 10 பவுன் கொடுப்பனவும் தண்டனைக்கு உள்ளாகியவரான கழுஅப்புவின் விசேட உடை தயாரிப்பதற்காக நான்கு பவுன்களும் கொடுப்பனவாக வழங்கப்பட்டது.

தூக்குமேடை தொடர்பான வரலாற்றுப் பதிவுகளை தேடிப் பார்க்கும்போது இரண்டு சுவையான நிகழ்வுகளை காண முடிந்தது. ஒன்று, சிரா எனும் சிரிப்பாலவை தூக்கிலிட்ட சம்பவம். அடுத்து, ஹிதுமதே ஜீவிதே (கால்போன போக்கில் வாழ்க்கை) என அழைக்கப்படும் பீ. ட. சுமதிபால என்பவரை தூக்கிலிட்ட சம்பவம்.

சிரா என்பவரின் வாழ்கை வரலாற்றுக் குறிப்புகள் ஊடாக இண்டு திரைப்படங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. சிறைச்சாலை மக்கள் பார்வைக்கு விடப்பட்டதும் இவரது மனைவி சிறைச்சாலையைப் பார்வையிட்டபோது இது தொடர்பான நினைவுகள் மீட்டப்பட்டன. அது தொடர்பான விபரங்களை இத்தொடரின் இறுதியில் தரலாம் என எண்ணுகின்றேன்.

கோணதுவ எனும் ஊரில் சாதாரண குடும்பத்தில் பிறந்தவன்தான் சுமதிபால. தந்தை, தாய், தங்கை இதுதான் இவனது குடும்பம். சுமதிபால தனது தங்கை குசுமாவதி மீது அளவு கடந்த பாசம் வைத்திருந்தான். குசுமாவதி அவ்வூரிலேயே மிக அழகானவள். சித்திரைப் பண்டிகைத் தினங்களில் அப்பகுதியில் நடத்தப்படும் அழகு ராணிப் போட்டியில் அவ்வருடம் அவளுக்குத்தான் முதல் பரிசு கிடைத்தது.

ஒரு நாள் பாடசாலைக்குச் சென்ற தங்கை மாலையாகியும் வீடு வந்து சேராமை சுமதிபாலவை பீதிக்குள்ளாக்கியது. நேரம் செல்லச் செல்ல சுமதிபாலவின் படபடப்பு அதிகரித்துக் கொண்டே சென்றது. தங்கை காணாமல் போன விடயம் ஊரில் பரவ ஆரம்பித்தது. வீட்டுக்குத் தெரியாமல் தனது காதலனுடன் எங்கோ ஓடி விட்டாள் என்று ஊரார் கிசுகிசுக்கத் தொடங்கினர். சுமதிபாலவுக்கும் அவனது பெற்றோருக்கம் குசுமாவதி மீது அசைக்க முடியாத நம்பிக்கை இருந்தது. ஊரார் பேச்சைக் காதில் வாங்காமல் தங்கையைத் தேடும் பணியில் மும்முரமாக ஈடுபட்டான். அவன் எவ்வளவு தேடியும் தங்கை கிடைக்கவில்லை. சுமதிலவின் பெற்றோர் தனது மகள் தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்தபோதும் பொலிஸார் விசாரணைகளை மேற்கொள்வதில் ஈடுபாடு காட்டுவதாகத் தெரியவில்லை.

இப்படியே ஓரிரு வாரங்கள் கழிந்து சென்றன. தங்கையின் நினைவு சுமதிபாலவை வாட்டி வதைத்தது. கால்போன போக்கில் நடந்து சென்று கொண்டிருந்தான். குசுமாவதியின் பால்ய சிநேகிதி சுமதிபாலவை குறுக்கிடுகின்றாள். குசுமாவதி காணாமல் போன தினம் இவளுடன்தான் பாடசாலைக்கு சென்றிருந்தாள். தங்கை பற்றி ஏதும் தகவல் குறிப்பிடுவாள் என்ற ஆவலில் அவளிடம் பேச்சுக் கொடுக்க முயன்றான்.

தங்கையின் சிநேகிதியிடமிருந்து கிடைத்த தகவல் சுமதிபாலவை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. அன்று பாடசாலை விட்டு இருவரும் வந்து கொண்டிருந்தனர். அந்த வழியாக, வேகமாக வந்த வாகனம் ஒன்று குசுமாவதியை அள்ளிக் கொண்டு சென்று விட்டதாகவும் 1972 ஆம் ஆண்டு கலுதர திஸ்ஸ வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற அழகு ராணிப் போட்டியில் முதலிடம் பெற்ற குசுமாவதிக்கு கிரீடம் அணிவித்த திஸாணாயக்க ஐ.பி. என்பவரே இவளை கடத்திச் சென்றதாகவும் வில்சன் என்பவர் வாகனத்தை ஓட்டிச் சென்றார் எனவும் அவள் குறிப்பிட்டாள். இந்த விடயத்தைக் கூற மாட்டேன் என வீட்டில் சத்தியம் செய்து கொடுத்த காரணத்தினால் இது வரையில் இவ்விடயத்தை கூறாமல் மறைத்ததாகவும் சுமதிபாலவிடம் குறிப்பிட்டாள்.

இந்தச் செய்தி சுமதிபாலவின் காதில் இடியாக விழுந்தது. அவனுக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. உடனே பொலிஸ் நிலையத்துக்கு விரைகின்றான்.

தொடரும்

JMF வெளியீடுகளான


அல்ஹஸனாத்
எங்கள் தேசம்
அகரம்
ப்ரபோதய
The Trend

ஆகியவற்றுக்கு விளம்பரம் செய்ய விரும்பினால் தொடர்பு கொள்ளவும்

எம். ரஸ்லான் ராஸிக்
077 832 1116
எம்.எச்.எம். ரிஸ்வான்
077 741 2146

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிணைப்பு...



எம்.எம். அலி அக்பர் கிண்ணியா

கையைப் பிசைந்த வண்ணம் தனியார் மருத்துவமனையின் முன்னால் நின்று கொண்டிருந்தேன். மருத்துவமனையின் நேர்ஸுகளும் மருந்துகளின் வாடையும் நோயாளிகளின் நடமாட்டங்களும் எனக்கு புதிய அனுபவமாகவே இருந்தன.

எனக்கும் வயது 36.

மகனைப் பரிசோதித்த டாக்டர் சொன்ன வார்த்தை வெறும் சளிக்காய்ச்சல் என்று தான். ஆனால் அந்தப் பிஞ்சு உடம்பை என்ன பாடுபடுத்திவிட்டது. முகமெல்லாம் வெளிறி மூச்சுத் திணறி ஒரு மாதிரியான இழுப்புடன் கை, கால்களை அசைக்க முடியாமல் இருந்ததைப் பார்த்து எங்களது உள்ளம் கலங்கியது.

எனக்கு மகனுடைய கவலையுடன் சேர்ந்து கையில் பணமில்லாத கவலை ஒரு பக்கம். மனைவி சாபிராவுக்கும் மாமியார் அமீராவுக்கும் பிள்ளைக்கும் எனது உழைப்பில் பிரச்சினையின்றி வாழ முடியும். ஆனால், ஆடம்பரத்துக்காகவும் பகட்டுக்காகவும் தவணை முறையில் வாங்கிப் போட்ட பொருட்களுக்கு மாதா மாதம் தவறாமல் கட்ட வேண்டிய பணத்தொகையும் சேர்ந்து என்னை வாட்டிக் கொண்டிருந்தது.

பிள்ளையை ஆஸ்பத்திரியில் சேர்த்து மூன்று நாட்களாகி விட்டன.

இனிப் பிரச்சினையில்லை வீட்டுக்கு கொண்டு செல்லலாம் என்று டாக்டர் சொன்னதும் எனக்கு உள்ளம் குளிர்ந்தது.

உள்ளத்தில் ஒரு தடுமாற்றம்! ஒரு வேளை, இந்தச் சனியனால்தான் எனக்கு வருகிற இருமல் என் மகனையும் பாதித்திருக்குமோ! உம்மா சொல்வதைக் காதில் போட்டுக் கொள்ளாமல் சிநேகிதர்களோடு சேர்ந்து ஊதித் தள்ளிவிட்டு ராத்திரியெல்லாம் தூங்காமல் இருமி இருமிக் கொண்டிருப்பேன்.

உம்மாவுக்கு இருப்பே கொள்ளாமல் மனம் உருகி எங்கிட்டே வந்து தொண்டையில் விக்ஸ் பூசிவிட்டு சுடுநீர் தருவார்கள். காலையிலும் மிளகு போட்டு ஏதோ கசாயம் போலத் தருவார்கள். எனக்கொன்று வந்துவிட்டால் உம்மா படும் வேதனை...

இப்போ என் மகனுக்கு வந்ததை உம்மா பார்த்தால் என்ன மாதிரித் துடிப்பார்களோ! உம்மாவைப் பார்த்து இரண்டு வருடங்களுக்கும் மேலாகிறதே... இவ்வளவு காலமும் பணம் அனுப்பாமல் உம்மாவின் முகத்தில் முழிக்காமல் சங்கடப் பட்டுக் கொண்டே நாளும் பொழுதும் ஓடிக் கொண்டிருந்தன.

என் மனைவி சாபிராவுக்கு என் உம்மாவைப் பிடிக்கவே பிடிக்காது. என்னையும் வசதிகளையும் விட்டுப் பிரிய மனமில்லாமல் இங்கேயே ஒட்டிக் கொள்வா என்ற வஞ்சகம் அவளுக்கு. தப்பித்தவறி நான் என் உம்மாவுக்காக பரிந்து பேசினால் போதும் வீடு ரணகளமாகி விடும். நான் வாயை மூடிக் கொள்வேன்.

மகனை தோளில் போட்டுக் கொண்டு

"என்னங்க... மகனைப் பாருங்களேன் சிரித்துக் கொண்டிருக்கான்..."

இது என் மனைவியின் குரல்...

என் நினைவுகள் காற்றோடு கலந்தன.

ஆர்வத்தோடு மகனை வாங்கி உச்சி, கன்னம் எல்லாம் மோர்ந்தேன். மருத்துவமனையில் பில்லைக் கட்டிவிட்டுத் திரும்பும்போது மகனின் வெள்ளைச் சிரிப்பில் கடன் வாங்கியதெல்லாம் மறந்துவிட்டன.

இந்தச் சிரிப்புக்கு எவ்வளவு பணமும் கொடுக்கலாம் என்று தோன்றியது எனக்கு.

வீட்டை வந்தடைந்தபோதுதான் என்னுடைய ட்ரவுசரெல்லாம் ஈரமாகியிருந்தது தெரிந்தது. நான் படிக்கும் காலத்தில் சட்டை, ட்ரவுசர் கொஞ்சமேனும் சுருங்கியிருக்கவே கூடாது. தூய்மையாக இல்லாவிட்டால் வெளியே செல்லவே மாட்டேன். உம்மா தான் சலவை செய்து மடித்தும் தருவார்கள். உம்மா துவைத்ததை நான் அணிவதால் அவர்களுக்கொரு மகிழ்ச்சி.

மாமியார் ஒரு தேநீர் கோப்பையோடு ஒரு கடிதத்தையும் கொண்டு தந்தார்.

உம்மாவின் கடிதமது. எனக்கு முன்னே சாபிரா அவசரமாக அதனை பிரித்துப் பார்த்தாள். என்னிடம் ஏதாவது கேட்டு மாமி எழுதியிருப்பார், அதைத் தடை செய்யணும் என்கிற நோக்கம்தான் அவளுக்கு.

நாசூக்காக,

"உம்மா என்ன எழுதியிருக்காங்க" என்று கேட்டேன்

"ம்... ம்... ஒடம்பு சரியில்லையாம் ஒங்களப் பார்க்கணும்போல இருக்காம். அவுகளுக்கென்ன எல்லாம் சொல்லுவாக. ஊருக்குப் போறதாக இருந்தா சும்மா கையை ஆட்டிப் புடிச்சிட்டுப் போவலாமுங்களா..."

"....."

"இப்பத்தான் ஆஸ்பத்திரிக்கு அள்ளிக் கொடுத்திட்டு வந்திருக்கோம்..."

என்று இழுப்போடு சொல்லிக் கொண்டே அவள் விட்டெறிந்து விட்டுப்போன கடிதத்தை எடுத்து வாசித்தேன்.

ஒவ்வொரு வரியிலும் உம்மாவோடு நேரில் பேசுவதுபோல் கடிதத்தைப் படித்து முடித்தேன். அப்போது சாபிரா வந்தாள். என் முகத்தைப் பார்த்து விட்டு.

"என்ன ஒரே யோசனையில இருக்கீங்க..."

"ஒண்ணுமில்ல சாபிரா, நம்ம புள்ளைக்கு ஒன்னு வந்திட்டா நம்ம மனசு என்ன பாடு படுதின்னு பாத்திட்டோம் தானே..."

"பெத்த மனசுன்னா அப்படித்தாங்க... அதுக்கென்ன செய்யிறது... ஒடம்புன்னு... இருந்தா நோய் நொடி வராமலா இருக்கும்..."

"அதுக்கில்லே சாபிரா, நாம உருகி உருகி இவன வளர்க்கிறோம். ஆனா நாளைக்கு இவனும் கல்யாணமானப்புறம் இந்த வாப்பாவைப்போல உம்மாவயும் வாப்பாவயும் மறந்திட்டுத்தானே இருப்பான்..."

சாபிரா ஒரு வித அதிர்ச்சியோடு என்னைப் பார்த்தாள்.

அவள் மாற்றுப் பதிலேதும் சொல்லாத அளவுக்கு அப்படியொரு போடு போட்டேன்.

"சாபிரா நீங்க வந்தாலும் சரி வராவிட்டாலும் சரி... இந்த மாதச் சம்பளம் கெடச்சதும் ஒரு கெழமை லீவு போட்டிட்டு உம்மாவை நான் பார்க்கப் போகிறேன்"

"புள்ளையைப் பெத்துட்ட பொறகும் பெத்த மனசுகளோட அருமை தெரியாம இருந்திட்டோமினா நாமெல்லாம் மனுசங்களேயில்லே... பெத்த பாசம் மறந்த துரோகிகள் என்ன சொல்றீங்க சாபிரா..."

அவளிடமிருந்து ஒரு பெருமூச்சு...

"உண்மைதாங்க... உங்களோட நானும் வர்ரேங்க.... இவ்வளவு காலமும் மாமியை மதிக்காம இருந்தது நான் செஞ்ச தப்புதான்... அவங்ககிட்டே மன்னிப்பு கேட்டாத்தான் என்ட மனம் ஆறுதல் அடையும்..."

சாபிரா தேம்பித் தேம்பி அழுது கொண்டு நின்றாள்.

# யாழ் முஸ்லிம் வரலாற்றுப் பார்வை

*வரலாறு இல்லாத சமூகம் வேரற்ற மரத்தைப் போன்றது என்பார் அல்லாமா முஹம்மது இக்பால் அவர்கள். வரலாற்று வேரின் ஆழம் எவ்வளவுக்குப் பதிந்திருக்குமோ அந்தளவு தூரத்திற்கு அந்த சமூகம் வீரியம் பெறும். பல்லின சமூகங்கள் வாழ்கின்ற ஒரு பெரும்பான்மை நாட்டிலே தன் வரலாற்று ரீதியான அடையாளங்களை நிறுவ வேண்டிய தேவையை ஒரு சிறுபான்மைச் சமூகம் பெற்றுள்ளது. அப்போது தான் அச்சமூகத்தின் இருப்பு, தனித்துவ உரிமம், அரசியல் பங்குடமைகளை நிலைநிறுத்திக் கொள்ளும் கட்டத்தை அது அடைகிறது. எந்த சமூகம் தனது வரலாற்று அடையாளங்களை நிறுவத் தவறி விடுகிறதோ அந்த சமூகம் நாடற்ற, வந்தேறு குடிகளாக நடத்தப் படுவதை நாங்கள் பார்க்கிறோம்.*

*உண்மையில் ஒரு சமூகத்துடைய கடந்த கால வரலாற்றுக் குறிப்புகள், சம்பவங்கள், நினைவுத் தூறல்கள்தான் இளைய சந்ததிகள் எதிர்கால கனவுடன், திடகாத்திரத்துடன் பயணிக்க வழியேற்படுத்துவன. இதை நாங்கள் கடுகளவும் மறந்து வாழ முடியாது. அந்தவகையில் தமது கடமையின் ஒரு பகுதியை யாழ்ப்பாண முஸ்லிம்கள் இன்று நிறைவேற்றி இருக்கிறார்கள்.*

*508 பக்கங்களில் எழுதப்பட்டுள்ள யாழ் முஸ்லிம் வரலாற்றுப் பார்வை என்ற இந்நூல், 39 தலைப்புகளில் தனது வீரிய பணி மூச்சை விசாலிப்பது இன்னொரு வகையில் நமக்கெல்லாம் பெருமை தரும். காரணம், இலங்கை முஸ்லிம்களின் வரலாறு தொடர்பான சவால்களை நிவர்த்திப்பதற்கு கிராமங்களின், ஊர்களின் வரலாறுகளின் தேவையை இன்று நம் நாட்டு முஸ்லிம் வரலாற்றாசிரியர்கள் எதிர் கொள்கிறார்கள்.*

*இந்நூல் குறிப்பிடும் யாழ் முஸ்லிம்களது குடியேற்றப் பரம்பல் என்ற ஆரம்பப் பகுதி யாழ்ப்பாண முஸ்லிம்களின் வரலாற்றின் சிறு குறிப்பை அறிந்து கொள்ள நமக்கு உதவுகிறது. இதையடுத்து இடம் பெறும் இறையில்லங்கள், கல்விக் கூடங்கள், உலமா பெருமக்கள், முத்திரை பதித்தவர்கள், பொதுநிர்வாக அதிகாரிகள், அதிபர்கள், அரசியல் சேவகர்கள், இலக்கிய ஆளுமைகள், முஸ்லிம் விவாகப் பதிவாளர்கள், விதானைமார், வைத்தியர்கள், வர்த்தகர்கள்... என்று மானுடவியல் தொடர்பான பதிவுகளே இந்நூலில் அதிக இடத்தைப் பிடித்திருக்கின்றன.*




*அகதிகளை அக மகிழ்வுடன் அரவணைத்தோருக்கு எமது நன்றிகள் என்ற தலைப்பில் யாழ் முஸ்லிம்களின் 90 ஆம் ஆண்டு வெளியேற்றம் நினைவுகூரப்படுவதுடன், தாம் அகதிகளாக வெளியேற்றப்பட்ட நேரத்தில் முதலாவதாக அனுராதபுரம் சாஹிறா மகா வித்தியாலயத்திற்கு வந்தடைந்த சரித்திரத்தையும் அதற்கு முன்னோ [illegible] கட்டுரை ஆசிரியர் மிகத் தெளிவாக காட்டுகிறார்.*

*அன்புடன் அரவணைத்து உதவிக்கரம் நீட்டிய அனுராதபுரம், வவுனியா, மதவாச்சி, இக்கிரிகொல்லாவ, தல்கஹவெவ, நொச்சியாகம, நாச்சியாதுவ, மதுரங்குளி, கற்பிட்டி, புத்தளம், சிலாபம், நீர்கொழும்பு, கொழும்பு, மாத்தளை, மாபோலை, பாணந்துறை...போன்ற பிரதேச மக்களுக்கு தமது மேலான நன்றியுடைமையை வெளிப்படுத்துவது உண்மையில் எம்மையெல்லாம் புல்லரிக்கச் செய்கிறது.*

*திரும்பிப் பார்க்கிறோம் என்ற தலைப்பிலுள்ள விஷயங்கள் நமது உள்ளங்களை உருக வைக்கும் இதன் அடுத்தவொரு பதிவாகும். கடந்த காலங்களில் (வெளியேற்றத்திற்கு முன்னர்) அனுபவித்த வாழ்க்கையை பல வருடங்களுக்குப் பின்னர் நினைவு கூரும் ஒரு நினைவுப் பெட்டகமாகும்.*

*இந்நூலில் இறுதியாக இடம்பெற்றுள்ள மீள்குடியேற்றம் ஒரு முக்கியமான பகுதி. மீள்குடியேற்றத்தில் இருந்த தடைகள், சவால்கள், இன்று வரையுள்ள அரசியல் பிரமுகர்களின் அசமத்தனங்கள் போன்றவற்றை எடுத்துக் கூறுவதன் மூலம் யாழ் முஸ்லிம்களின் தற்போதைய உள்ளக் குமுறல்களின் ஆதங்கம் வெளிப்படுத்தப்படுகிறது.*

*இந்நூலில் பலரது சம்பவங்களும் தரவுகளும் ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களில் இடம்பெற்றிருக்கின்றன. இதனை குறைத்து வேறு பல விடயங்களையும் இணைத்திருக்கலாம். குறிப்பாக கலை, பண்பாடுகள், பேச்சுவழக்குகள், பாரம்பரிய வாழ்க்கை முறை, பாரம்பரியங்களை சித்தரிக்கின்ற படங்கள் முதலானவை ஓர் ஊரின் வரலாறுகளை மேலுயர்த்தும் பல்சுவை சாரங்களாகும். இவை மணம் பரப்பிகள். இவைதான் வரலாற்றுத் தொன்மையின் மூல வேர்கள். இவை குறித்த தரவுகள் இந்நூலில் இணைக்கப்படவில்லை என்பது ஒரு குறைபாடாக இருந்தாலும் பல சிரமங்களுக்கு மத்தியில் ஒரு கூட்டுப் பொறுப்புடன் அமர்ந்திருந்து ஆற்றியிருக்கும் இப்பணி மகத்தானது. இது ஓர் இபாதத்தாகும். இம்முயற்சிக்கு பங்காற்றிய அனைவருக்கும் நன்றிகளும் பாராட்டுக்களும்.*

லரீப் சுலைமான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் அழைப்பிதழ்கள் என்னை ஊருக்கு அழைத்து வராது

கிராமத்தின் புழுதியெங்கும்
ஊறிக் கிடக்கிறதென் வியர்வை
புதிதாய் என்னை நீங்கள்
ஊருக்கு அழைக்கத் தேவையில்லை
என்னில் வியர்வை மணக்கிறதாய்
சொல்லும் அவளுக்கு - என்
கிராமத்தின் புழுதிவாசம் தெரியாது
அடி பைத்தியம்!
எப்போது என்னில்
வியர்வை மணத்தது?
எப்பொழுதும் என்னில்
புழுதிதான் மணக்கிறது!

கத்தி, கோடரி, மண்வெட்டிகளுடன்
தந்தையைப்போல் பழக்கப்பட்டவன்
மேசை கதிரைகளுடன் உறவிருக்கு
நான் தச்சன்
கதிரை மேசைகள்



என்னோடு உறவல்ல

உங்கள் அழைப்பிதழ்கள் - என்னை
ஊருக்கு அழைத்து வராது
என் முற்றத்து மரக்கிளையில்
பதறிக் கொண்டிருக்கும்
அண்டங் காக்கை
கண்களை குடைத்துவிடும் கனா
வலக் கண் துடிப்பு
இவை போதும் நான் ஊருக்கு வர


இன்னும் என்னில் கசிகிறது...
வியர்வைத் துளிபோல
உதிரத் துளிபோல
கண்ணீர்த் துளிபோல
துளித் துளிக் கனவுகளும்
புதிதாய் என்னை நீங்கள்
ஊருக்கு அழைக்கத் தேவையில்லை
சிந்தி உதிரத் துளிகளும்
அந்தப் புழுதியில்தான் கலந்திருக்கு

உங்கள் தொலைபேசியின்
மாசாலங்கள்
என்னை ஊருக்கு அழைத்து வராது
என்னருகில் வந்து தலையை தடவி
முத்தமிடும் முத்தம்மா
நன்றி மறவாத நட்புகள்
நலமா என்று முகமன் கூறும்
பெரியோர்கள்
கடற்கரை, களப்பு, வயல் வெளி
பேரன், பேத்தி, குடும்பம்
காதல் ஞாபகங்கள்,
கல்லறை தரிசனம்
இப்படி ஏகப்பட்டவை இருக்கு
நான் ஊருக்கு வர

புதிதாய் என்னை நீங்கள்
ஊருக்கு அழைக்கத் தேவையில்லை

**கிராமத்தான் கலீபா**
**பொத்துவில்**



# முன்பொரு காலத்து பேய்கள்

மீண்டும் மீள் வருகையினூடே
உயிர்த்தெழுகின்றன
பேய்கள்
ஆவியோட்டியின்
அடக்கம்
சவால்களை கிளறிவிட
அரச மரத்து பேய்கள்
எல்லாம் காலை சுற்றியும்
கண்டங்கள் தாண்டியும்
சட்டியிலிருந்து
அடுப்புக்குள் விழுந்த
கதையாய் ஒரு சமூகம்

**கட்டாரிலிருந்து**
**ரோஷான் ஏ. ஜிப்ரி**

# போஸ் கொடுக்கும் போலிகள்


கையில் விலங்கு
வாயெல்லாம் பல்லு
பத்திரிகைக்கும் தொலைக்காட்சிக்கும்
முக நூலுக்கும் போஸ் கொடுக்கும்
இந்த அரசியல்வாதிகளெல்லாம்
தேசத்தின் விடுதலை
வீரர்களா... என்ன?
சிரித்துச் சிரித்து
சிறைப் போஸ் கொடுப்பதற்கு...
தேசத் துரோகிகள்
மாமியார் வீட்டுள் நுழைந்து
கம்பி எண்ணப் போகும்
இந்த களவாணிகள்
என்ன எண்ணிக் கொண்டிருக்கிறார்கள்
பரிசுத்தவான்களாய் பாடம் நடத்தி
கண்ணியவான்களாய்க் கதை கூறி
மக்களை ஏமாற்றிய - இந்த
மாங்காய் மடையர்கள்...
யாருக்கு காது குத்தப் பார்க்கிறார்கள்
பளிச் சென்று பல் காட்டும்
வெங்காய ஜோன்ஸனும்
படுக்கையில் கிடக்கும் பஷில்
தாத்தாவும்
பாராளுமன்றத்தை பகடைக்காயாக்கி
மக்களை பலிக்கடாவாக்கினர்...
இன்று
கத்தி அவர்கள் கழுத்தையே
குறி வைத்துள்ளது
போப்பாண்டவர் போல்
விமானத்திலிறங்கி வந்தவர்
பொசுக் கென்று போய்
பகிரங்க ஆஸ்பத்திரியில்
படுத்துக் கிடக்கிறார்
அம்பியூலன்ஸில்தான்
அன்னாருக்கு விசாரணை!
விலங்கிடப்பட்ட கையை
உயர்த்திப் பல் காட்டும்
காவாலிப் பயல்களின்
கதை முடியும் காலம்...
இல்லை வெகு தூரம்...!
வாய்மையே வெல்லும்!

**கலைவாதி கலீல்**

# மானுட தேசம்

21

# சமூகப் பிரியன் என்.எல். பக்கீர் அலி



கிழக்கு மாகாணம், அம்பாறை மாவட்டம், அழகுற அமைந்த ஒலுவில் கிராமத்தில் 1954.11.24 ஆம் திகதி நூகு லெப்பை -பாத்தும்மா தம்பதிகளுக்கு கனிஷ்ட புதல்வராக பக்கீர் அலி பிறந்தார். இவர் சிறு வயதில் இருந்து சமூக சிந்தனையுடையவர். பிறரது தேவைகளை அறிந்து அதனை செய்யக் கூடிய பழக்கமுடையவராக திகழ்ந்தார். குடும்பநிலை காரணமாக தனது படிப்பினை ஐந்தாம் வகுப்புடன் நிறுத்திக் கொள்ள வேண்டிய சூழ் நிலை இவருக்கு ஏற்பட்டது.

இருந்த போதிலும் பக்கீர் அலியின் கல்வித்தாகம் தொடர்ந்தும் காணப்பட்டது. இவர் பல அறிஞர்கள், உலமாக்களுடனும் நெருங்கிய உறவை வைத்திருந்தார். அதேபோன்று புத்தகங்கள் மற்றும் பத்திரிகைகளுடனும் நெருங்கிய தொடர்பை வைத்திருந்தார். இவை இவரின் சமூகப் பணியை தொடர உதவியது. வாசிப்பு முழு மனிதனை உருவாக்கும் "reading makes a full man" எனும் பழமொழிக்கு இவர் சொந்தக்காரர் எனக் கூறுவது மிகையாகாது. அப்படி எந்த நேரமும் கையில் புத்தகத்துடனும் பத்திரிகையுடனும் காணப்படுவார்.

அதிகமான தொழில்களிலும் தேர்ச்சி பெற்றிருந்த பக்கீர் அலி, தனது பிரதான தொழிலாக மீனவ தொழிலை சிறப்பாக செய்து வந்தார். பள்ளிவாசல், பாடசாலை விடயங்களில் கூடிய கவனம் செலுத்திய இவர், ஒலுவில் கிராமத்தில் கட்டப்பட்டுள்ள பள்ளிவாசல்கள் அனைத்திலும் தனது பங்களி[illegible] ஒலுவில் மக்கள் யாவரும் அறிவர். விசேடமாக அன்சாரிப் பள்ளிவாசல் கட்டுவதில் இவரது உடல் பங்களிப்பு மட்டுமன்றி பணப் பங்களிப்பும் இருந்ததை யாரும் மறுக்க முடியாது.

பக்கீர் அலி அவர்கள் இளைஞனாக இருக்கும்போது ஒலுவில் ஸகாத் சபையின் பொருளாளராக இருந்து காணிகளை வாங்கி ஏழைகளுக்கு வழங்குவதில் பங்களிப்பு செய்துள்ளார். மேலும், லிபியா மக்கள் காங்கிரஸின் ஒலுவில் கிளையின் பொருளாளராக இருந்து வாசிகசாலை ஒன்றை அமைத்து ஊர் மாணவர்களினதும் பொதுமக்களினதும் வாசிப்புத் திறனை அதிகரிக்க உதவினார். ஒலுவில் ஜும்ஆப் பள்ளிவாசலில் அவர் குடிமரைக்காயராக 7 வருடங்கள் கடமை புரிந்தபோது ஊரின் முக்கிய விடயங்களில் பங்களிப்பு செய்துள்ளார்.

அதேபோன்று, ஸஹ்வா இஸ்லாமிய அரபுக் கல்லூரியின் ஆளுநர் சபையின் உறுப்பினராக 7 வருடங்கள் பணியாற்றியுள்ளார். மேலும், ஒலுவில் அல்ஹம்றா மஹறா வித்தியாலயத்தில் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் உறுப்பினராக 10 வருடங்கள் பணி புரிந்தார். ஒலுவில் ஹப்பானி பள்ளிவாசலின் தலைவராக 14 வருடங்கள் பணிபுரிந்து பள்ளிவாசல் வேலைகளை சொந்த வேலை போன்று செய்து வந்தார். [illegible] பள்ளிவாசலின் இணக்க சபையிலிருந்து தனது தனிப்பட்ட செல்வாக்கு மூலம் பல குடும்ப பிணக்குகளையும் சுமுகமான முறையில் தீர்த்து வைத்தார். ஊரில் ஜப்பார் எனக் கேட்டால் அனைவரும் அவரை அடையாளம் காட்டுவார்கள். அந்தளவு தனது மக்கள் சேவையால் பிரபல்யமானவர்.

தற்போது, ஒலுவில் ஜும்ஆப் பள்ளிவாசலின் புதிய கட்டட வேலைகளின் மேற்பார்வையாளராக கடமை புரியும் இவர், பள்ளிவாசல் கட்டட குழுவின் தலைவர் பொறியியலாளர் எம்.வை.எம். நயீம் அவர்களின் ஆலோசனைப்படி மிகவும் சிறப்பாக செயற்பட்டு, கொண்டிருக்கிறார்.

இதற்கிடையில் ஊரில் நடைபெறும் சுக துக்கங்களிலும் கலந்து கொள்வார். விசேடமாக மரண வீடுகளுக்கு செல்வது, மையவாடியில் ஜனாஸாக்களை அடக்கம் செய்யும் பணிகளிலும் ஈடுபடுவது இவரது விசேட நற்குணங்களில் ஒன்றாகும். இவரை அவரின் வீட்டில் சந்திப்பதை விட பள்ளிவாசல், பொது இடங்களில் சந்திப்பது இலகுவானதாகும். எந்தவித எதிர்பார்ப்பும் இன்றியே இவரின் சமூக சேவைகள் மேற்கொள்ளப்படுவது குறிப்பிடத்தக்கது. தனது 60 வயதில் மனைவி சித்தி அனிஸா மற்றும் 6 பிள்ளைகளுடன் மிக சந்தோஷமாக வாழும் பக்கீர் அலி அவர்களின் சமூக சேவை ஏனைய இளம் தலைமுறைக்கு ஒரு மிகுந்த முன்மாதிரியாகும்.

**இஸட். அப்துர் ரஹ்மான்**
**ஒலுவில்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முசலி கல்விக் கோட்டத்திற்குட்பட்ட பொற்கேணி அ.மு.க. பாடசாலைக்கு மாணவர்களின் தொழில்நுட்ப அறிவை மேம்படுத்த வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் பாரூக் பல இலட்சம் ரூபா பெறுமதியான கணினிகளை வழங்கினார்.

படமும் தகவலும்: றிப்கான் கே. சமான்



ரமழான் மாதத்தில் இலங்கையில் உள்ள நோன்பாளிகளுக்கு வழங்கவென ஐக்கிய அரபு இராட்சியத்தின் செம்பிறைச் சங்கம் சுமார் 15 மெற்றிக் தொன் பேரீத்தம் பழங்களை இலங்கையில் உள்ள ஐக்கிய அரபு இராச்சியத் தூதுவராலயத்தினூடாக வழங்கியுள்ளது.

பேரீத்தம் பழங்களை கையளிக்கும் நிகழ்வு இலங்கைக்கான ஐக்கிய அரபு இராச்சிய தூதுவராலயத்தில் அதன் இலங்கைக்கான தூதுவர் அப்துல் ஹமீட் ஏ.கே. அல் முல்லா முஸ்லிம் சமய மற்றும் தபால் அமைச்சர் எம்.எச். அப்துல் ஹலீமிடம் கையளித்தார். இந்நிகழ்வில் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் எம்.எச்.எம். ஸமீல் மற்றும் அமைச்சரின் பிரத்தியேகச் செயலாளர் முஹம்மத் பாஹிம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

படமும்: ஏ.எஸ்.எம். ஜாவித்



மட்டக்களப்பில் வசிக்கும் விசேட தேவையுடையோருக்கான உபகரணம் வழங்கும் நிகழ்வு மட்டக்களப்பு மாநகர சபையில் இடம்பெற்றது. சுகாதார அமைச்சின் செயலாளர் கருணாகரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமட், கிழக்கு மாகாண அமைச்சர்களான எம்.ஐ.எம். மன்சூர், தண்டாயுதபாணி, ஆரியபதி கலபதி, துரை ராஜசிங்கம், உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டு இதனை வழங்கி வைத்தனர்.

## சாய்ந்தமருதில் விளையாட்டு மைதானம் இல்லாத குறை தீர்ந்தது



சாய்ந்தமருது கரைவாகு பொது விளையாட்டு மைதானத்தை திறந்து வைத்து பொதுமக்களிடம் கையளிக்கப்பட்டது. இதன் மூலம் சாய்ந்தமருதில் விளையாட்டு மைதானம் இல்லாத குறை தீர்த்து வைக்கப் பட்டுள்ளது.

கடந்த 11 வருடங்களாக மைதானம் இல்லாமல் இவ்வூர் இளைஞர்கள், மாணவர்கள் மிகவும் சிரமப்பட்டனர். இதனை கருத்திற் கொண்டு சாய்ந்தமருது விளையாட்டு கழக சம்மேளனமும் பொதுமக்களும் விடுத்த வேண்டுகோளை ஏற்றுக்கொண்டு எச்.எம்.எம். ஹரீஸ் எம்.பி. இன் நிதி ஒதுக்கீட்டில், சாய்ந்தமருது புதிய விளையாட்டு மைதானத்தை அபிவிருத்தி செய்து மக்களிடம் கையளிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து எதிர்காலத்தில் இம்மைதானத்திற்கான பார்வையாளர் அரங்குகள் நிர்மாணிக்க தீர்மானிக்கப் பட்டுள்ளது.

இம்மைதானத்தை உருவாக்குவதற்கு பணியாற்றிய சாய்ந்தமருது பிரதேச செயலாளர் ஏ.எல்.எம். சலீம், விளையாட்டு கழக சம்மேளன செயலாளர், விளையாட்டு உத்தியோகத்தர் எம்.வீ.எம். றஜாய், உபதலைவர் நில அளவையாளர் எம்.ஏ. றபீக், பொருளாளர் ஏ.எல். ஆப்தீன், சம்மேளன உறுப்பினர் ஏ.எம். ஜஹான் ஆகியோர் மைதான திறப்பு விழா நிகழ்வில் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டனர்.

## இலங்கை மக்கள் அரங்கச் செயற்றிட்டம்: இளம் கலைஞர்களிடமிருந்து விண்ணப்பம் கோரல்

SDJF COMMUNICATION 4D

இனங்களுக்கிடையிலான புரிந்துணர்வு, உரையாடல், வித்தியாசங்களை மதிக்கும் மனப்பாங்கு, சகவாழ்வு மற்றும் சகிப்புத்தன்மை ஆகிய விழுமியங்களை மக்கள் மயப்படுத்துவதே இலங்கை மக்கள் அரங்கச் செயற்றிட்டத்தின் நோக்கமாகும்.

இத்திட்டத்தின் மூன்றாவது கட்டம் எதிர்வரும் ஜூன் மாத இறுதியில் ஆரம்பமாகவுள்ளது. களுத்துறை, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்கள் இதற்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

தமிழ், சிங்களம் மற்றும் முஸ்லிம் சமூகங்களைச் சேர்ந்த 36 இளைஞர், யுவதிகள் இத்திட்டதில் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர். இவர்களுக்கான 10 நாள் வார இறுதிப் பயிற்சி வெகு விரைவில் ஆரம்பமாக உள்ளது. தகுதிவாய்ந்த, 35 வயதுக்குக் குறைந்த இளைஞர் யுவதிகளுக்கு தெரிவின்போது முன்னுரிமை வழங்கப்படும். இப்பயிற்சி நெறி முற்றிலும் இலவசமானது.

நாடகப் பிரதியாக்கம், நடிப்பு, சமூக உரையாடல்களை ஒழுங்கு செய்தல் மற்றும் வன்முறைக்கு எதிரான கருத்தாக்கங்களை கலைத்துவமாக வெளிப்படுத்தல் ஆகியவற்றில் ஆர்வமிக்க இளைஞர், யுவதிகள் இப்பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்கலாம்.

மேற்சொன்ன மாவட்டங்களை வசிக்கும் தகுதிவாய்ந்த இளைஞர், யுவதிகள் ஜூன் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக தமது விண்ணப்பங்களை info@Ldjf.org என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது தபால் மூலம் விண்ணப்பிப்போர் செயற்றிட்ட அதிகாரி, மக்கள் அரங்க நாடகச் செயற்றிட்டம், இலங்கை அபிவிருத்திக்கான ஊடகவியலாளர் மன்றம், இலக்கம் 429,2/1, நாவல வீதி, ராஜகிரிய என்ற முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பி வைக்கலாம்.

மேலதிகவிபரங்களுக்கு:07766 53694 எனும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அமைப்பின் நிர்வாக உத்தியோகத்தர் ஏ.டபிள்யூ. எம். அஸ்ஜயின் தெரிவித்தார்.


LIMITED SEATS AVAILABLE

ரமழான் விடுமுறையில் கம்பியுட்டர் பாடநெறிகள்

மாணவர்கள், ஆசிரியர்கள், வீட்டுப்பெண்கள்

SCHOOL LEAVERS

வெளிநாட்டிலிருந்து விடுமுறையில் வந்திருப்பவர்கள்

G.C.E (A/L) அல்லது G.C.E. (O/L)

எழுதிவிட்டு தொழில் கல்வியை நாடுபவர்களுக்கான

ஒருமாதகாலப் பாடநெறிகள்.

Hardware and Networking | AutoCad 2D & 3D | Graphic Designing | Web Developing | 3DS Max Interior Designing | CCTV Technician | Revit Architecture | Computer Based Accounting

MCCE MAWANELLA
071 8110732
077 7114454


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Published by: Just Media Foundation, Printed at AJ Prints (Pvt) Ltd. 44, Station Road, Dehiwela.